ATMA TATVAM

BY

V. D. SAHAYAM

WITH A FOREWORD BY

The Rev. STEPHEN NEILL, M.A.

Fellow of Trinity College, Cambridge

1929

All Rights Reserved.] [Price As. 10.

ஆத்ம தத்வம்

V. D. சகாயம்

விலை அணா 10.

FIRST IMPRESSION 1000 COPIES

All Rights Reserved.

TO MY MOTHER

(Died 8th July 1908)

FOREWORD.

The great questions which all men ask are the same. What is the nature of God? What is the true nature of man? How can man attain that for which he came into the world? To these questions, many answers are given. The Christian answer is Christ. This answer is simpler than that of any other religion; it is also more profound, and after so many centuries, the world has not yet fully grasped it.

Since the life of Christ was lived in the world, faith in Him is not mere imagination, but must grow out of a study of His words and works, and hence, the Bible (and especially the Gospels), is the unchanging foundation of Christian faith. There are no secrets in Christianity; the records are open to all to read, and to understand as best they can. No one can claim to know much of the Christian faith unless he comes to it by way of the Christian Scriptures. The writer of this book has gathered up for us the results of his own pondering and study of the Scriptures, and has expounded for us what he has come to understand of the answers to man's questions. He deals with God and God's relation to man, with sin and failure, and shows how Christ, the only true Man who has ever lived, has realised man's destiny in the world, and by his divine-human life has made the bridge between God and man, and made accessible to all men the life of God.

That such study is of the highest importance for Christians, no one can doubt. While I do not agree with all the details of interpretation here set forward, I think that no one could read this book carefully, and with an open Bible

beside him, without finding his grasp of truth strengthened and confirmed. For Non-Christians also, the story of the Christian Scriptures and the Christian faith is very important. Christ has received the enthusiastic homage of many in India, who do not call themselves Christians. The challenge of His life and teachings cannot be set aside. He is already in many ways the greatest force in Indian life. It is longed therefore, that Non-Christians also, will read this book sympathetically and with care. The real test of religion is what it can do for the poor and simple, the sinful and the outcaste. Those who do not accept the Christian Gospel must ask themselves seriously whether they have a better and fuller message for those who have the greatest need of God's grace.

STEPHEN NEILL.

நூன்முகம்.

இப்படிப்பட்ட ஓர் நூல் எழுத நான் எண்ணியிருந்த தில்லை. 1928-ம்வரு செப்டெம்பர்மீ முதல் சில மாதங்கள் நான் சிவகாசியில் தங்கி ஊழியம்செய்ய நேரிட்டது. அவ் வருடம் நவம்பர்மீ 11உ மாலை 7-மணிக்கு கிறிஸ்தவர்களு டைய மண்டபத்தில் 'ஆத்தும சாந்தி' என்னும் தலைப்பில் அவ்வூர் இந்து சிநேகிதருக்கு ஓர் உபன்னியாசம் செய்ய ஒப்புக்கொண்டேன். ஆத்மாவைப்பற்றி யாதொன்றும் கூறாது, அதன் உற்பத்தி, தொழில், ஆதி, இடை, கடை பாகுபாடுகள் இவற்றைக் கூறச்சமயம் அதுவல்ல என் றெண்ணி, 'சாந்தி' என்பதைப்பற்றி மட்டுமே சுருக்கிக் கூறினேன்.

கூடினோர் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். தாங்கள் சொல்வதின்னதென்றறியாமலே சிலர் நெடுநேரம் சொற்பொழிவுசெய்தனர். சிலர் எனது சாக்ஷி 'கேவலம்' என்றனர். பலர் பின்னிருந்து அமளியுண்டாக்கினர். ஆச னுபதி பிரசங்கம் 'தத்வார்த்தமாயில்லை' என்றனர். வேறு சிலர் அன்றையத்தினத்து விஷயத்தையொட்டி யாதொன் றும் கூறாது, தங்கள் வாயில் வந்தபடியெல்லாம் கிறிஸ்து மார்க்கத்தைப் பழிக்கவும், இந்து சமயத்தை மெச்சவும் என்னைக்குறித்து அற்பமாய்ப் பேசவும் தலைப்பட்டனர். அன்றிரவே நான் அவ்வூரை விட்டு வெட்கத்தால் தலை கவிழ்ந் தோடிவிடுவேன் என்று பலரும் எண்ணத்தக்கதாக கூட்டம் தாறுமாறாய் முடிந்தாற்போல் தோன்றினது.

'எல்லாம் நன்மைக்கே' என்று கருதி, நான் இவை களில் யாதொன்றைக் குறித்தும் கவலைப்பட்டிலேன். இதைக்கண்ணுற்ற சிலர் அம்மாதம் 22-ம் தேதி 'பகிரங்கக் கேள்விகள்' என்னும் தலைப்புடன் 1000 ஒற்றைத்தாள் பிரதிகள் அச்சிட்டு, ஊரிலும், பலவிடங்களிலும் பரவச் செய்தனர். அதன் விபரமாவது :—

சில நாட்களாய் இச்சிவகாசியில்
கிறிஸ்துவ மத பிரசாரஞ் செய்துவரும்
மலையாளம் சாது கனம் V. D. சகாயம் அவர்களிடம்
சிவகாசி ஹிந்து மத பிரசார சபையாரால்
ஆத்மாவைப்பற்றி கேட்கப்படும்

பகிரங்க கேள்விகள்.

ஐயா சாது அவர்களே!

தாங்கள் (11—11—28) ஞாயிற்றுக்கிழமை "ஆத்ம சாந்தி" என்னும் அறிய விஷயத்தைப்பற்றி பிரசங்கிப்பதாய் பகிரங்கப்படுத்தி ஆத்மாவைப்பற்றி சிறிதும் விளக்கிக் காட்டாமல் சாந்தியைப்பற்றி மாத்திரம் தவறுதலான காரணங்களால் கூறி, கூட்டத்தை குழப்பத்தில் முடியும்படி செய்தது யாவரும் அறிந்ததே.

அந்த சமயத்தில் சில நண்பர்கள் ஆத்மாவைப்பற்றி கூறும்படி தங்களைக் கேட்ட கேள்விக்கு தாங்கள் "ஆத்மாவைப்பற்றி நான் இங்கு கூறவேண்டிய அவசியமில்லை. (சப்ஜக்ட் என்னவோ?) ஆனால் கூறுவதற்கும் பைபிளிலிருந்து ஆதாரம் காட்டுவதற்கும் என்னால் முடியும், என்னிருப்பிடத்திற்கு வரவேண்டுமென்று" சொன்னது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

தாங்கள் தங்கள் இருப்பிடத்தில் வைத்து கூறுவது யாவருக்கும் தெரியாததலால், ஆத்மாவைப்பற்றிய இதன் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு, நீங்களேனும் அல்லது வேறு எந்தக் கிறிஸ்தவரேனும் பைபிள் ஆதாரத்துடன் இது கண்ட ஒரு வாரத்திற்குள் பதில் தயாரித்து பகிரங்கமாக! விளம்பர வாயிலாக!! பலருக்குந் தெரியும்படி!!! செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கேள்விகள்.

1. ஆத்மா எங்கும் நிறைந்தது என்பதற்கு பைபிள் ஆதாரமுண்டா?

2. ஆத்மா எல்லா வஸ்துக்களிலும் கலந்திருக்கிறதென்பதும் அந்த வஸ்துக்கள் ஆத்மாவைத் தாக்காமலிருக்கிறதென்பதையும் காட்ட பைபிள் ஆதாரமுண்டா?

3. ஜீவர்கள் இறந்தாலும் பிறந்தாலும் ஆத்மா இறப்பதுமில்லை பிறப்பதுமில்லை என்பதுபற்றிய சப்தமேனும் பைபிளில் உண்டா?

4. ஆத்மா அழிவற்றதென்றும் அதைச் சூழ்ந்துள்ள மாய்கையும் மாய்கையின் பிதிர்க்களான தூல சூக்கும பூதமும் அண்டபிண்ட சராசரங்களும் அழியக்கூடியதென்றுங் கூற பைபிள் ஆதாரமுண்டா?

5. ஆத்மா நாமபேதம் இடபேதம் காலபேதமற்றதெனக்கூற உங்கள் பைபிளில் பார்க்கமுடியுமா?

6. ஆத்மா அன்பின் மயமாயும் அறிவின் மயமாயும் பரிணமிப்பதையாகிலும் தெளிவாக பைபிளில் கூறப்பட்டிருக்கிறதா?

7. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள பேதாபேதங்களை உங்கள் பைபிளில் காணமுடியுமா?

8. ஆத்மா முக்காலங்களிலுமுள்ளதாயும் சுயப்பிரகாசமாயும் ஆனந்தமயமாயுமுள்ளதென்பதை பைபிள் கூறுகிறதா?

*　　*　　*

22—11—28.
சிவகாசி.

சி. பா. மீனாக்ஷிசுந்தர நாடார்,
ஹிந்துமத பிரசார சபை பிரசிடேண்டு.

அவ்வூரைவிட்டு நான் போய்விட வேண்டுமென்பதே கேள்வி கேட்டோரின் நோக்கமென்பது அவர்கள் செய்கைகளால் விளங்கியது. இக்கேள்விகளுக்கு விடையெழுதுவதிலும், ஆத்மாவைப்பற்றிய சில காரியங்களை யாவரும் அறிய வெளிப்படுத்துவதே நலமென்றெண்ணி இதை எழுத ஆரம்பித்தேன். எழுதி வரவும் அது இப்புத்தக ரூபமாய் மாறிற்று.

இது பூரணமான ஓர் நூலென்று கூறத்துணியேன். ஆயினும், துவேஷ புத்தியின்றி இதைப்படிப்போர் நிச்சயமாகவே பயனடையாமற் போகார் என்பது எனது நம்பிக்கை. இதை எழுத என்னைத்தூண்டின சிவகாசி இந்து சிநேகிதருக்கும், தங்கள் ஜெபங்களால் எனக்குதவிசெய்த பல நண்பருக்கும், பகர்ந்தெழுதல், அச்சுப்பிழை திருத்தல் முதலியவற்றில் மிக உதவியாயிருந்த கனம் S. V. தேவதாசன் ஐயரவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைக் கூறுவதுடன், இப்புத்தகத்தைப் படிக்கும் எவருக்கும் ஈசன் தமது கருணையால் அவர்கள் மனக்கண்களைப் பிரகாசிக்கச் செய்வதினால், அவர்கள் தங்கள் உடல், உயிர், ஆவியைப்பற்றிய மூவினைகளாகிய ஆணவம், காமம் மாயம் என்பவற்றினின்று தங்களை விடுவிக்கும் ஏக சத்துவம், தீமைக்குள் புதைக்கப்பட்ட நன்மை வடிவமாகிய இயேசுவை கிருபையின் வலிமையினால் அங்கிருந்து உயிர்ப்பித்து, நன்மைமயமாகவே பரிணமிக்கச் செய்த தெய்வீக வல்லமையே என்றறியவும், அறியாமையாகிய மனவிருளை நீக்கும் ஒளியாகிய கிறிஸ்துவுக்குத் தங்களைப் பூரணமாய்க் கையளிக்கவும் கிருபை செய்யவேண்டுமென்னும் ஜெபத்துடனும் இதை எழுதும்

V. D. S.

பொருளடக்கம்.

முதலாம் பாகம்.

		பக்கம்
1.	திரித்துவ விளக்கம்	1
2.	ஆத்ம இலக்ஷணம்....	4
3.	ஆவி, ஆத்துமாவின் உற்பத்தி	7
4.	உடலுயிர் ஆவியின் தொழில்	10
5.	மனித உடல்	13
6.	அருள்வேத மகத்துவம்	15
7.	ஆசரிப்புக்கூடாரத்தின் அரும்பொருள் விளக்கம்	18
8.	உடலுயிர் ஆவியின் அந்நியோந்நிய சார்பு நிலை.	31
9.	மனித உடலுக்குள் ஆவி, ஆத்துமா இவைகளின் இருப்பிடம்	33
10.	மனிதனைத் தீமை தாக்கிய வரலாறு	36
11.	ஆவி, ஜீவன், உடம்பு இவற்றை ஆத்துமா தாக்குதல்	41
12.	பாவத்தின் கெடுதி	44
13.	பாவம் இருளென்பது	52
14.	தீயோரின் முடிவு	55

இரண்டாம் பாகம்.

15.	கதி பெறும் வழி	57
16.	இயேசு பிறப்பின் சம்பவங்கள்	59
17.	ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள பேதாபேதங்கள்	62

		பக்கம்
18.	இயேசுவின் சோதனையின் அந்தரங்கம்	64
19.	குரு வடிவம்	70
20.	இயேசுவே வழி	78
21.	ஆத்தும ஈடேற்றத்திற்கடுத்த இயேசுவின் செய்கை	83
22.	மெய்யடியார்களை உலகம் பகைத்தல்	88
23.	“வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக”	91
24.	சிலுவை	93
25.	பாதாளம்	103
26.	காவலிலுள்ள ஆவிகள்	106
27.	ஜீவ விருக்ஷம்	112
28.	கிருபையின் வலிமை	113
29.	வேறு வழிகள்	119
30.	கிருபை பெற்றோரின் வழி	123
31.	தேவபுத்திரரின் சிலாக்கியங்கள்	133

ஆத்ம தத்வம்.

முதலாம் பாகம்.

1. திரித்துவ விளக்கம்.

" சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதா யிருக்கும்படி காக்கப்படுவதாக." 1 தெச. 5.23.

1. மனிதன் ஆவி ஆத்துமா சரீரம் ஆகிய மூன்று பிரிவுகள் உடையவனுயிருப்பினும் ஒருவனுகவே இருக்கிறான். இதையிட்டே மோசே முனிவர் மனுஷ உற்பத்தியின் வரலாற்றைக் கூறுங்கால் " தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாகவே அவர்களை சிருஷடித்தார்" என ஆதி: 1.17ல் மொழிகின்றார். " பரலோகத்திலே சாக்ஷியிடுகிற பிதா வார்த்தை பரிசுத்தாவி ஆகிய மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" 1 யோவா. 5: 7 என்பதின் இரகசியத்தை மேற்கூறிய வாக்கியத்தினின்று தெளிவாயறியலாம். திரியேகத்துவத்தை மறுக்க முயலும் எம்மனிதனும் தனக்குள் அடக்கமாயிருக்கும் திரித்துவத்தைக் காணும்போது தனது அறியாமையை அறிக்கை செய்வான்.

2. ஒருமுறை திரித்துவத்தை மறுக்க முயன்ற ஒருவர் " தேவ சாயலின்படியும் தேவ ரூபத்தின்படியும் படைக்கப்பட்ட ஆதாம் ஒருவனுயிருக்க தேவன் மூவராயிருப்பதெப்படி ? என ஒரு கேள்வி கேட்டார். விடை பகர்ந்த

நண்பர் 'ஆதாம் ஒருவனே, அவனுடைய ஏகாந்தத்தை நீக்க எண்ணி, அவனுக்கு அயர்ந்த நித்திரை வரச்செய்ப வும், அவனது துணைவியாகிய ஏவாள், விலாவினின்று தோன்றினள்' ஆதி. 2:21,22. அவ்வாறே அநாதியில் பிதாவோடும் பிதாவுக்குள்ளும் இருந்த அநாதி வார்த்தை யோவா. 1: 1. குறித்த காலத்தில் ஏவாள் ஆதாமின் விலா வுக்குள்ளிருந்து தோன்றினாற்போல் அவ்வார்த்தை காலம் நிறைவேறினபோது "மாம்சமாகி கிருபையினாலும் சத்தி யத்தினாலும் நிறைந்தவராய் உலகத்தில் வெளிப்பட்டார்" யோவா. 1: 14. இந்த நுட்பத்தையறிந்த பவுல் ஆனந்தத்தி னால் பொங்கி "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" 1 தீமோ 3: 16 என்று கீதம் பாடினார். அன்பன் யோவான் அதைப்பற்றிச் சொல்லும்போது 1 யோவா. 1: 1, 2 வசனங் களில் ஆதிமுதல் இருந்த ஜீவவார்த்தை வெளிப்பட்டது என்கிறார். இதை உறுதிப்படுத்த அநேக வசனங்களை அருள்வேதத்தின் பற்பல பாகங்களிலும் காணலாம். வெளி. 19: 13 ; 1 கொரி. 2: 7 ; எபி. 1: 3 ; 13: 8; கொலோ 1: 15-17.

3. ஆதாம் ஏவாளிலிருந்து காயீன் என்னும் புத் திரன் புறப்பட்டதுபோல் ஆதி. 4: 1. பிதாவிலும் குமார னிலுமிருந்து புறப்படுகிறவரான பரிசுத்தாவியானவரும் சுவிசேஷ யுகம் முடியும்போது பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்படையானார். லூக். 24: 29 ; யோவா. 14: 16 ; அப். 2, 4.

4. ஒரு ஆதாமுக்குள் ஏவாளும் காயீனும் மறைந் திருந்ததுபோல் பிதாவுக்குள் குமாரனும் பரிசுத்தாவியும் இருந்தார்களென்பதறிக.

5. இப்பரம இரகசியத்தை இன்னொரு முறையாயும் விளக்கலாம். அதற்கு முகப்பில் கூறியுள்ள 1 தெச. 5: 23 மிக்க உதவியாம். மனிதன் தனக்குள் அமைந்திருக்கும் ஆவி ஆத்துமா சரீரம் இவைகளைப்பற்றித் திட்டமாயறியும்

போது முதற்சந்தேகம் பறந்தோடிவிடும். இம்மூன்றும் இவனுக்குள் பிரிக்கப்படாவண்ணம் நெருக்கமாய் இணைக்கப் பட்டிருப்பதுபோல் தோன்றினும் வல்லமையும் கூர்மையு முள்ளதான அருள் வேதவாக்கியங்கள் இவைகளைப் பிரித் துக்காட்டுமென்பதை எபி. 4: 12லிருந்து தெளிவாய் அறிக. மனிதனின் மூன்று தத்துவங்களையும் ஒரே நேரம் வெளி யிடும் வேதவாக்கியங்கள் இவ்விரண்டு மட்டுமே.

6. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளராதவர் வேதத்தின் அந்தரங்கங்களை அறியமுயலுவது வீண். எவ்வளவுக்கு நேர்மையும் உண்மையும் "கற்றதற்கிசைய நிற்கையும்" ஒருவன் ஜீவியத்தில் காணப்படுமோ அவ்வளவுக்குத்தான் அவன் புதை பொருள்களை அறியக்கூடியவனாவான். சங். 25: 14. பிதா, வார்த்தை, பரிசுத்தாவி இம்மூவரும் எவ் வாறு ஒருவராகவும் மூவராகவும், பிரிக்கப்படாதவர்களாக வும் பிரிகிறவர்களாகவுமிருக்கிறார்கள் என்பதை ஒருவன் தெளிவாய் அறியவேண்டுமானால், தானும் யோவானைப் போல் வெளி. 4: 2, தன் சரீரத்தைவிட்டு "ஆவிக்குள் ளாகும்" அப்பியாசமுடையனாகவும், பவுலைப்போல் ii கொரி. 12: 2. "கர்த்தருக்குள்ளாகும்" அநுபோக முடையவனாகவும் ஆதல்வேண்டும். இச்சிலாக்கியத்தை இவ் வுலகில் பெறாதவன், தன் சரீர மரணம் வருமட்டும், அதா வது அவனைவிட்டு அவன் ஆவி தன்னைத் தந்த தேவனிடத் தில் பிர. 12: 7 சேருநேரமளவும் இதையறியான்.

7. முட்டைக்குள்ளிருக்கும் ஒரு கோழிக்குஞ்சினிடம் அதன் தாய் வெளியுலகத்தின் இயற்கையமைப்பைப் பற்றி யும், அதன் இரமணீயத்தைப்பற்றியும் எவ்வாறு புகழ்ந்து பேசினும் அக்குஞ்சு அவைகளை ஏற்றுக்கொள்ளாது. முட் டைத்தோடு உடைந்து, குஞ்சு வெளியேறி, தாயைப்போல் தன் கண்ணால் அக்காட்சிகளைக் காணும்போது, தன்முந்தின அறியாமையை நினைத்து வெட்கப்படும். அதுபோல ஆவிக் குரிய இரகசியங்களை அறிய முயலுவோனிடத்தில் அவ்வா

விக்கிசையும் ஜீவியமும் சிந்தையும் காணப்படல் வேண்டும். 1 கொரி. 2; 11. மனித சரீரத்துக்குள் வாசம்பண்ணும் உள்ளான மனிதன் இச்சடலமாகிய கோட்டை உடைத்து வெளியேறும்போது பல அதிசயங்களைக்கண்டு ஆச்சரியப் படுவான்.

8. நமது அநுபவத்திற்கு எட்டாத எந்த சத்தியத் தையாவது நாம் ஆராயும்போது, அச்சத்தியங்களைத் திட்ட மாய் அறிந்தோரின் அநுபவ சாஷியங்களை ஏற்றுக்கொள் ளல் வேண்டும். அக்காரணத்தையிட்டே நமது ஆராய்ச் சிக்கு இவ்வருள் வேதத்தை ஆதாரமாய்க் கொள்ளுகிறோம். எவரேனும் இதை மறுக்க முயலுகில் நம்பப்படத்தக்க வேறு ஆதாரம் காட்டல்வேண்டும். அப்படி இன்னொரு ஆதாரம் இல்லையாகில் இவ்வாதாரத்தை மறுக்க முயல்வது மதியீன மாகும்.

2. ஆத்ம இலக்ஷணம்.

9. ஆத்துமாவைப்பற்றிக்கூற அருள்வேதத்துக்குள் செல்வோம். ஆத்துமா என்பதென்ன? 1 கொரி. 15: 44-46ல் ஜென்ம சரீரம், ஆவிக்குரிய சரீரமென்னும் இரு வகை சரீரத்தைப்பற்றிப் படிக்கிறோம். இவற்றில் ஸ்தூல சரீரமாகிய காணப்படும் புறம்பான மேனிக்கு 'ஜென்ம சரீ ரம்' என்றும், அதற்கு உள்ளிருக்கும் சூட்சம சரீரத்துக்கு 'ஆவிக்குரிய சரீரம்' என்றும், அச்சூட்சம சரீரத்தைப் பிரகாசிப்பிக்கும் ஒளிக்கு 'காரண சரீரம்' என்றும் பெயராம். நமது தமிழ்நாட்டு வழக்கச்சொற்படி இம்மூன் றிற்கும் முறையே 'ஜீவாத்மா,' 'பரமாத்மா,' 'அந்தராத்மா' என்றும்; வேதாந்த முறைப்படி இவற்றின் கூறு களை 'அத்துவிதம்,' 'துவிதம்,' 'துவிதாயுதம்' என்றும்; அருள்வேதம் 'சரீரம்,' 'ஆத்துமா,' 'ஆவி,' 1 தெச. 5: 23 என்றும் முறையே கூறுவதிலிருந்து "ஆத்துமா" என்பதைப்பற்றி அருள்வேதம் கூறும் இலட்சணத்தை (definition) ஓர்ந்துணர்ந்து அறிந்துகொள்க.

10. மனிதனுக்கும் மிருகத்திற்கு மிடையில் இருக்கும் சில வித்தியாசங்களையும் கூறுகிறேன். யானை ஒன்று ஓர் ஊரில் 300 வருஷம் உயிரோடிருந்தபின் இறந்து போகிறது. ஆனால் அதன் பிறப்போ, வளர்ச்சியோ, இறப்போ மனுக்குலத்திற்குள் எவ்வித மாறுதலையும் கொண்டு வருகிறதில்லை. ஜனசமூகத்தினுடைய சாசுவத உணர்ச்சியைத் தொடக்கூடிய சத்துவம் யாதொன்றும் அதற்குள்ளில்லை. அப்படியே ஒரு மரம் எவ்வளவு செழிப்புள்ளதாய் வளர்ந்தபோதிலும் உலக சரித்திரங்களை ரூபகாரப்படுத்துவதில் அதற்குப் பங்கில்லை. மனிதனுடைய கூறோ அவ்வண்ணமானதன்று.

11. புத்தனுடைய பிறப்பு இந்துதேசத்தில் ஓர் பெரிய மாறுதலை உண்டுபண்ணிற்று. சங்கராசாரியார் ஜீவியம் இந்துமார்க்கத்தின் நவீகரணத்திற்கேதுவானது. ஜூலியன், நப்போலியன், உல்லியம் கைசர் முதலியோர் ஐரோப்பிய சரித்திரத்தில் மாறுதலைக்கொண்டுவந்தனர். நபிநாயகம் முஸ்லீம் கொள்கையை உலகத்தில் ஸ்தாபித்தோராயினர். கமால் பாஷா துருக்கி தேசத்தில் தொன்றுதொட்டு வழங்கி வந்த சில துர்ப்பழக்கங்களை மாற்றக்கூடியவரானார். இயேசுவின் சிலுவை மரணம் உலகத்தைப் புரட்டி உருட்டுகிறது. யோவா. 12: 32. இதை வாசிக்கும் நண்பா! உனது ஜிவியமும் நல்லதாயினும் கெட்டதாயினும் அதற்கேற்ற ஒரு பலனை உனது சமுதாயத்தில் செய்யாமல் போகாது. "அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்." எபி. 11: 4 என்பதின் கருத்து இதுவே.

12. இந்த மாறுதலுக்குக் காரணம் கேள். மனிதனுக்குள் மிருகத்திற்கில்லாத (personality) ஆள் தத்துவம் அமைந்திருக்கிறது. ஆகையால்தான் பரிசுத்த வேதம் இவைகளின் படைப்பிலேயே மனிதனை வித்தியாசப்படுத்தி, ஆத்துமாவைப் பெற்றவனாக்கி, மிருகத்தையோ வெறும் மண்ணாக்கிக்காட்டுகிறது, ஆதி. 2: 7, 19 மிருகம் பிறப்பு

முதல் இறப்புமட்டும் மாற்றப்படக்கூடாத பழக்க வழக்கங் களையுடையதா யிருக்கிறது. 5000 வருஷங்களுக்குமுன் தூக்கணாங்குருவி எப்படிக் கூடு கட்டுமோ, அப்படியே இப் பொழுதும் கட்டுகிறது. அதில் யாதொரு சீர்திருத்தமும் இடையாது. வௌவால் அன்றும் இன்றும் 'நீயும் தொங்கு நானும் தொங்கு' என்றபடியே தலைகீழாய்த் தொங்குகிறது. பல படித்த பண்டிதர்கள் குரங்கைப்பார்த்து, 'நீயே எங்கள் பாட்டன், நாங்களும் எங்களைப்போலுள்ள குரங்குகளும் உன்னிடமிருந்தே தோன்றினோம்' என்று புத்தகங்களை எழுதியபோதிலும் அம்முன்னோர் தங்கள் மரமேறும் தொழிலை நிறுத்தவாவது, கண்ணியமாய் வீடுகட்டி வாசம் பண்ணவாவது படிக்கக்காணோம். மனிதன் இவைகளுக்கு மாறாக எவ்வளவு சீக்கிரம் நாகரீகமடைந்து, முன்னேறிச் செல்கிறான் என்பதைப்பார்க்க மனமுள்ள எவரும் கண்ணைத் திறந்தால் காணலாம். குடிசை கூரைவீடும் பின் ஓட்டடுக் கும் காரையுமாய் மாறிப்போவது நம்மவரில் எவரும் காணா ததில்லையே. காரணம் தேவ வள்ர்ச்சியாய் (தேவனுக்கொப் பாகுமட்டும்) வளர்ந்தேறக்கூடிய ஆத்தும தத்துவம் மனித னுக்குள் அடக்கமாயிருப்பதாகும். கொலோ. 2: 18.

13. 1 கொரி. 13: 12ல் "இப்பொழுது கண்ணாடியில் நிழலாட்டமாய் பார்ப்போர் பின்னொருகால் முகமுகமாய் தரிசிப்பர்" என்பதற்குள்ளும் இவ்வந்தரங்கத்தைக் காண லாம். அப்படியாயின் மனிதரில் ஒருவரும் மற்றெவரையே னும் முகமுகமாய்ப் பார்த்தல் கூடாதென்பதையறிக. நமது சரீர கண்களே மற்றோருடைய புறம்பான சரீரத்தின் தோற்றத்தைக் காண்கிறதேயொழிய, 'நாம்' நமக்குப் புறம்பானவர்களைக் காண்கிறோம் என்பது உற்றுப்பார்க்கில் கருத்தற்ற மொழிகளேயாம். ஆதலின், இவ்விடம் நமது புறம்பான சரீரத்தைமட்டும் குறிப்பிடாத "நாம்" என்கிற மொழி ஆத்துமாவை சுட்டிக்காட்டுமென்றறிக. மேலும் 2 கொரி. 4: 16ல் 'புறம்பான மனுஷன்,' 'உள்ளான மனுஷன்' என்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் வார்த்

தைகளில், 'உள்ளான மனுஷன்' என்பது ஆத்துமாவையே குறிக்குமென்றறிக.

14. என்னை ஒருவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்தால், என் கன்னமேயென நான் கத்துவேன். கையில் அறைந்தால் என்கை என்றும், தலையைப்பற்றி என் தலை என்றும், இவ்வாறு சொல்லக்கூடியவனாயிருக்க, 'என்' என்னும் உரிமை பாராட்டும் சொல், உடலைப்பற்றியதாய் மட்டுமிராமல், உள் உயிரைப்பற்றியதாகுமென அனுமானிக்கலாம். இவ்வுரிமை பாராட்டக்கூடிய "நான்," "என்," எனக்குறிப்பிடும் வஸ்துவே "ஆத்துமா"வாகும்.

3. ஆவி, ஆத்துமாவின் உற்பத்தி.

15. ஆத்துமா என்பதென்ன என்பதைப்பற்றியே கிறிஸ்துசமயத்திற்கும் மற்றெச்சமயத்திற்கும் விகற்பம் ஏற்படுகிறதானதால், பின் அதைப்பற்றிக்கூறும் எந்தக் காரியங்களானாலும் ஒவ்வுவது கூடாததாயிருக்கும். அது அநாதி நித்ய வஸ்து என்பதற்கு இந்துமார்க்கத்தில் பல ஆதாரங்களுண்டு. அவைகளைப்பற்றி எழுதி பின்மறுப்பு எழுதுவதைப்பார்க்கிலும், அருள்வேத சத்தியத்தைமட்டும் கூறுவதே போதுமானதென்றெண்ணுகிறபடியால் தர்க்க விஷயமானவைகளை இதில் எழுதத்துணியேன்.

16. ஆத்துமாவின் உற்பத்தியைப்பற்றி அறியவேண்டுமானால் மனிதனின் உற்பத்திப்படலத்தை வாசிக்கவேண்டும். ஆதி. 2: 7ல் "தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே மனுஷனை உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், அவன் ஜீவாத்துமாவானான்" என்று காண்கிறோம். இதனுள் பல ஆழ்ந்த புதையல்கள் அமைந்துள. சரீரம் மண்ணிலிருந்துண்டாகிறது. பஞ்சபூதியங்களே சரீரத்தின் அமைப்பு என்பது சாஸ்திர ஆராய்ச்சிகளால் திட்டமாகிறது.

17. அப்படியானுல் மனிதனுடைய சரீரத்திற்கும், மற்ற மிருக ஜீவன்களுடைய உடல்களுக்கும் ஏதாவது வித்தியாசம் தன்மையிலாவது பரீக்ஷையிலாவது காணப்படுகிறதா? பிர. 3:18ல் "மனுப்புத்திரர் தாங்கள் மிருகங்களைப்போலிருக்கிருர்கள்..............மனுப்புத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும். அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏகசம்பவமுண்டு. இவைகள் சாகிறதுபோல அவர்களும் சாகிருர்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே...........21ம் வாக்கியத்தில் உயர ஏறும் மனுஷனுடைய ஆவியென்றும், தாழப் பூமியில் இறங்கும் மிருகத்தின் ஆவியென்றும்" சொல்வதற்குள்ளேயே நாம் காண விரும்பும் பேதாபேதங்களைக் காணக் கூடும்.

18. மனிதன் மண்ணினுலுருவாகிறது போலவே, மிருகங்களும், பக்ஷி, பறவைகளும் மண்ணினுலுருவாக்கப் பட்டவைகளென்பதற்கு அத்தாக்ஷி ஆதி. 2:19ல் காண்க. தேவனுகிய கர்த்தர் வெளியின் சகலவித பறவைகளையும் மண்ணினுலே உருவாக்கினுர். அப்படியே மரம், செடி முதலிய தாவரவஸ்துக்களும் மண்ணிலிருந்தே முளைத்ததென அருள்வேதம் கூறுவதற்கு அத்தாக்ஷி ஆதி. 2: 9ல் காண்க.

19. இப்படியிருக்க, மனிதனுக்கும் மற்றும் ஜீவபிராணிகளுக்குமிருக்கும் வித்தியாசம் என்ன? வித்தியாசம் இருப்பின் அது படைப்பிலேயே இருத்தல்வேண்டும். அப்படியில்லாதிருப்பின் அதற்குப்பின் பேதாபேதம் காண எண்ணுவதுவீண். ஆதலின் அருள்வேதம் படைப்புக்குள்ளேயே இவைகளுக்குள்ளிருக்கும் வித்தியாசங்களை விளக்கிக்காட்டுகிறது. மரங்கள் பூமியிலிருந்து முளைக்கிறது ஆதி. 2: 9. மிருக ஜீவன்கள் மண்ணினுல் உண்டாக்கப்படுகிறது. ஆதி. 2:19. மனிதன் மண்ணினுல் உருவாக்கப்பட்டபின் ஜீவசுவாசத்தையும் தேவனிடமிருந்தே பெறுகிருன். ஆதி. 2-7.

20. இந்த ஜீவசுவாசமாவது என்ன? தேவன் மனுஷனுக்குள் ஊதினார் என்பதின் அந்தரங்கமென்ன? அப்படியானால் தேவனாகிய கர்த்தருக்கு ஊதக்கூடிய வாயும், மனிதரைப்போல மற்றும் அவயவங்களும் இருந்ததென கருதுதல் தகுமோ? அப்படிச் செய்வது அவரது தன்மைக்கு மாறாகுமே. ஏசாயா 40: 25. 'ஊதினார்' என்னும் வார்த்தையை நாம் எப்படி விளக்கல் வேண்டும்? அவர் ஊதியது அவரது தன்மையின் ஒரு பங்கா? அல்லது வல்லமையா? அருள்வேதம் இதை எவ்வாறு விளக்குகின்றது?

21. ஜீவசுவாசம் ஊதப்படுமுன்னும், மண்ணினால் உருவாக்கப்பட்ட உடம்பிற்கு மனுஷன் என்றே பெயர். அப்போது அவன் உயிரற்ற ஒரு பிணம்போலல்ல, உயிருள்ள ஒரு பிராணியாகவே யிருந்தான். ஆதி. 2: 7 எனக் கொள்ளல் வேண்டும். ஜீவசுவாசத்தைப் பெறாத அந்நிலைமையில் பிர. 3: 18-20ல் கூறப்பட்டிருக்கிறபடி அவன் மிருகத்தையே ஒத்திருப்பான். இந்த ஜீவசுவாசத்தைப்பெற்ற பின்னாலோ, மனுஷன் சிரஞ்ஜீவியான, அல்லது முடிவில்லாத நித்திய ஜீவியான "ஜீவாத்துமா" வானான் என்று வாசிக்கிறோம். இந்த ஜீவசுவாசமே மனிதனை மற்றெல்லாப் பிராணிகளினின்றும் பேதப்படுத்திக் காட்டுகிறது.

22. தற்காலம் அதிகமாய் வழங்கப்படும் ரூபாய் நோட்டுக்கும் மற்றக் கடுதாசிகளுக்கும் இடையிலிருக்கும் வித்தியாசமே மனுஷனுக்கும் ஜீவபிராணிகளுக்கும் இடையிலிருக்கிறதென்பதையறிக. இரண்டும் கடுதாசியாயினும் ஒன்றில் வரையப்பட்டிருக்கும் அரச முத்திரையானது அதைச் சிறப்பித்து விலையுள்ளதாக்குமாப்போல் மண்ணான மனுஷனுக்குள் தெய்வரூபமும் தெய்வசாயலும் படைப்புக்குள் அமைந்தபடியால் அவன் மற்றெவைகளினும் விசேஷித்தவனாகிறான்.

23. சாதாரணமான ஒரு கடுதாசிமேல் இராஜமுத்திரையும், மற்றும் சில சின்னங்களும் பதிக்கப்படும்போது அக் கடுதாசிக்கே Currency note ரூபாய் நோட்டு என்னும்

பெயர் கிடைக்குமாப்போல் மிருகபிராணிகளையொத்த மானிட உடலுக்குள் தேவனின் ஜீவசுவாசம் ஊதப்படவும், அம்மனிதனுக்கே "ஜீவாத்துமா" என்னும் சிறப்புப் பெயர் சூட்டப்பட்டது.

4. உடலுயிர் ஆவியின் தொழில்.

24. ஆவி, ஆத்துமா, சரீரம் என்பவற்றின் தனித் தனி பாகுபாட்டைக்காண முயல்வோம். ஆவி என்பது என்ன? கிறிஸ்தவர்களிலநேகர் ஆவி, ஆத்துமா இவைகளின் பேதங்களை அறியாதோராவர். பண்டைகாலங்களில் இவை இரண்டும் ஒன்றேயாம் எனப் பலர் எண்ணினர். அவைகளிரண்டும் ஒன்றல்ல என்பதற்கு நமது திறவுகோல் வாக்கியங்களாகிய 1 தெச. 5: 23ம், எபி. 4:12ம் ஆதாரங்களாய் நிற்கின்றன. பூர்வீக கிரேக்க ஞானிகள் இவ்வித்தியாசங்களைக் காண, தங்களது லௌகிக ஞானங்களால் வெகுவாய்ப் பிரயாசப்பட்டனர். அந்த ஞானங்களில் மிகத் தேர்ச்சியடைந்தோரான பரிசுத்த பவுல் முனிவர் கிறிஸ்தேசுவின் கிருபைகளைப் பெற்றபின் அவற்றைப்பற்றிய தெளிவான அறிவுடையவரானார். அவரது நிருபங்களிலிருந்தே நாமும் இச்சத்தியங்களை நன்கறிய முயல்வோம்.

25. ஆவியும், சுவாசமும் ஒன்றேயாகும் என்றெண்ணுவாரும் இக்காலத்திலும் பலருளர். மனிதனுக்குள்ளிருக்கும் மூச்சே ஆவியாகும் என்று நினைக்கும் படிப்பறிந்த கிறிஸ்தவர்களும் பலர் இல்லாமலில்லை. உற்றுப் பார்க்கில் இவை ஒன்றல்ல என்பதையும் பரிசுத்த ஆகமங்கள் விளக்கும். இவை ஒன்றேயாகுமானால், மனிதனை மற்றப் பிராணிகளினின்று வித்தியாசப்படுத்துதல் கூடாதகாரியமாகும். பிர. 3:19ல் 'ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே' என்பது மெய்யே. யாவும் பிராணவாயுவை உட்கொள்ளுகிறது கரிமலவாயுவை வெளியேற்றுகிறது. (Oxygen and Carbondioxide) பிராணவாயு உடலைவிட்டுப் பிரியும் போது உடல் உபயோகமற்ற வெறும் மண்ணாய் மாறி

விடுகிறது. அதையிட்டே சாலொமோன் 'அவைகள் சாகிறதுபோல் இவர்களும் சாகிறார்கள்' என்கிறான்.

26. ஏசாயா 42: 5ல் "பூமியில் இருக்கிற ஜனத்திற்கு சுவாசத்தையும், அதில் நடமாடுகிறவர்களுக்கு (மனிதருக்கே) ஆவியையும் கொடுக்கிற தேவன்" என்று காண்பதால் ஆவியும் சுவாசமும் இரண்டேயாகும். யோபு 34: 14ல் "அவர் தமது இருதயத்தை மனிதனுக்கு விரோதமாய்த் திருப்பினால் அவனுடைய ஆவியையும் சுவாசத்தையும் தம்மிடம் இழுத்துக்கொள்ளுவாராம்." இன்னும் யோபு 27: 2 லும் சுவாசமும் ஆவியும் வெவ்வேறு என்பது தெளிவாய் விளங்குகிறது. சுவாசம் என்றால் என்ன என்பது எவரும் அறிந்த விஷயமாதலால் ஆவி என்பது என்ன என்று பார்ப்போம்.

27. ஆவி யென்பது என்ன? அதன் உற்பத்தி எங்கே? அதன் தொழிலும் முடிவும் என்ன? பிர. 12: 7ல் 'ஆவி தன்னைத்தந்த தேவனிடம் திரும்புமாம்.' யோபு. 27: 2ல் 'தேவன்தந்த ஆவி' யென்றும், சகரியா. 12: 1ல் மனுஷனுடைய ஆவியை அவனுக்குள்ளுண்டாக்குகிற கர்த்தர்' என்றும் காணப்படுகிற சொற்றொடர்களிலிருந்து 'ஆவி' தேவனிடமிருந்து கிடைத்ததென்று காண்கிறோம். படைப்பில் அவருக்குள்ளிருந்த ஆவியே மனிதனுக்குள் ஊதப்பட்டது என்பதற்கு பல அத்தாக்ஷிகளுண்டு. இக்காலத்தும் அவர் பிறக்கும் பிறக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் ஊதிவருகிறாரோ? இல்லையே. துணையாகிய ஏவாளுக்கும் ஊதினதைப்பற்றி யாதொன்றும் வேதம் கூறவில்லை. ஒருவனை மட்டுமே படைத்து அவனுக்குள் அவருக்குள்ளிருந்த ஆவியையும் ஊதினார்.

28. மனிதனைப் படைத்ததின் நோக்கந்தானென்ன? இக்கேள்விக்குப் பலர் பலவிடை கொடுப்பார்கள். அவைகள் யாவற்றையும் நாம் கவனிக்கவேண்டியதில்லை. மல். 2: 15ல் அவர் ஒருவனை என் படைத்தாரெனில், 'தேவபக்தியுள்ள

சந்ததியைப்பெறும்படியாய்த்தானும்' பரிசுத்த ஜீவாத்துமாக்கள் உலகிலுதயமாக வேண்டியே அவர் பரிசுத்த மனிதனைப் படைத்தார். அந்நோக்கம் நிறைவேருததினால் பல தொல்லைகள்பட்டு மறுபடியும் முடிவில் அந்நோக்கத்தை நிறைவேற்றுவதைப்பற்றிய சரித்திரத்தையே அருள்வேதத்தில் தெளிவாய் எழுதியிருக்கிருர்கள்.

29. ஆவி என்ருல் என்ன? அது தேவனுக்குள்ளிருந்தது. அவருக்குள் என்ன இருந்தது யோவா. 1:4. அது ஜீவன். அந்த ஜீவனை மனிதர் பெறவும் அது அவர்களுக்கு எப்படி மாறுகிறது? அது மனிதருக்கு ஒளியாயிருந்தது. அப்படியானுல் தேவன் ஊதின ஆவி மனிதருக்கு ஒளியாகவேயிருந்தது. சாலொமோன் இதையறிந்தே நீதி. 20: 27ல் 'மனிதனுடைய ஆவி, கர்த்தர்தந்த தீபமாயிருக்கிறது' என்று எழுதுகிருன்.

30. பரமாத்மதரிசியாகிய தாவீது முனிவர் இதையறியவும் "கர்த்தர் என் வெளிச்சம்" சங். 27:1; "அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கு" சங். 132: 17 என்றும், பரிசுத்த பவுல் 'ஆவி'யைப்பற்றிப் பேசும்போது, அதை ஒரு சுடருக்கு ஒப்பிட்டு "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" 1 தெச. 5: 19 என்றும், இயேசு ரக்ஷகர் "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" லூக். 11: 35 என்றும், இதற்கு சார்பான வாக்கியத்தொடர்களிலிருந்து 'ஆவி' யென்பது மனிதனுக்குள் தங்கும் ஒரு வெளிச்சம் என்பதை யறிகிருேம்.

31. ஆவி மனிதனுக்குள் தங்கும் இடம் எது? ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் அமைந்த மனிதனுக்குள் இவை தனித்தனியே நிலைபெற்றிருக்கிற இடங்களை ஆராய்வோம். இப்பிரிவைக்கண்டு இதைப்படிக்கும் நண்பர் கலங்கக்கூடாது. ஜீவியத்திற்கடுத்த போதனையை யடைவதற்கே இம்முறையைக் கருவியாய்க் கையாடுவோம். சரீரம் யாவரும் காணக்கூடியதாயிருப்பதாலும், ஆவி அவனுக்கு உள்

என்றும், ஆத்துமாவுக்கு உள்ளான மனிதன் என்று பெயர் இருப்பதாலும் உடற்கூற்றுக்குள்ளேயே இந்த இரகசியத்தைக் காணமுயல்வோம்.

5. மனித உடல்.

32. இதை வாசிக்கிறவனே! உன் உடல் மிக அருமையானது. அமைப்பில் அது ஆச்சரியப்படத்தக்கது. உலகப் படைப்பு யாவற்றிலும் சிறந்து விளங்குவது மனிதப் படைப்பே. ஆங்கிலத்தில் இதைப்பற்றி 'மனிதன் படைப்பின் கிரீடமாக்கும்' Man is the crown of creation என்பர். சிருஷ்டிப்பின் ஆறுநாட்களிலும் யாவும் முடிந்த பின்னால், இவைகளை ஆளவென்றே மனிதன் கடைசியில் படைக்கப்படுகிறான். படைப்பிலேயே நீ ஆச்சரியமானவன்.

33. அரூபிகளான தேவதூதர்களைப்பற்றி அதிக தெளிவான வாக்கியங்களை அருள்வேதம் கூறுகிறதில்லை. உலகப்படைப்புக்கு முன்னே அவர்கள் படைக்கப்பட்டார்கள். யோபு 38: 3-7. 'காணப்படாத அவர்களும் அவராலேயே படைக்கப்பட்டார்கள். கொலோ 1:16 ; யோவா. 1: 3. அவர்களை ஸ்தூல சரீரமற்ற சூக்கும ரூபிகளாகவே அமைத்தார் எபி. 1: 7, 14, அவர்கள் அழிவுக்குரியவர்களல்ல. லூக் : 20: 36.

34. சராசரங்கள் யாவையும் அருள்வேதப்படி ஆறு நாட்களுக்குள் படைத்தார். யாவும் அழிவுக்குரியதே. இப்போதிருக்கிற சகலமும் வெந்துருகிப்போம். 2 கொரி. 4: 18 ; எபி. 1. 10, 11 ; 2 பேது. 3: 10. மிருகங்கள் யாவும் வெறும் மண்ணாலாக்கப்பட்டவைகளே. யாவும் அழிந்து மண்ணுக்குத்திரும்பும். உன் படைப்போ மெத்த விசேஷமானது.

35. முந்தின இருவகைப் படைப்புகளும் உனக்குள்ளிருக்கிறது. அழிவற்ற நித்தியவஸ்துவாகிய ஓர் ஆத்துமாவும், அழிவுக்குரியதான ஒரு சரீரமும் நீ பெற்றிருப்பது

எவ்வளவு ஆச்சரியம். உனது புறம்பான மனுஷன் மிருகத்தைப்போலவும், உள்ளான மனுஷன் தேவதூதரைப்போலவும் இருப்பினும் நீ இதை உணராமலிருப்பது விந்தையேயாகும்.

36. பிராணிகள்யாவும் கீழ்ப்பார்வையுடையவைகள். எப்போதும் அவைகள் மண்ணையே நாடி நோக்குகின்றது. மிருகங்கள் எப்பொழுதும் குனிந்தே நடக்கின்றன. நீயோ நிமிர்ந்து நடக்கிறாய். மேலே பார்க்கக்கூடிய அமைப்பே உனக்குள்ளிருக்கிறது. 'வானத்தைப்பார்' என்று சொன்னாற்போல் உன் உருவம் இருக்கிறது. அது மெத்த விசேஷமாகும்.

37. உன் உடம்பைப்பற்றிய விசேஷங்களை நன்கறியும்போது ஆச்சரியப்படுவாய். அது "ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமென்பதை" இன்னம் நீ அறியவில்லையோ. 1 கொரி. 3: 16. எள்ளுக்குள் எண்ணெய்போல், ஊனுக்குள் ஈசன் என்பதைக் கேட்டதுமில்லையோ. அப்படியிருக்க, நீ எப்போதும் உன் சரீரத்தை சுத்தமாக்கி, ஆசை, இச்சை முதலிய பல தீமைகளை அகற்றி, அன்பு என்னும் சிறந்த பூவினின்று காய்க்கும் நீடிய பொறுமை, சாந்தம் சந்தோஷம், தயவு, நற்குணம், விசுவாசம், சமாதானம், இச்சையடக்கம் முதலிய கனிகளால் அலங்கரித்து, கடவுளுக்கு ஏற்ற ஜீவபலியாக அர்ச்சனைசெய்ய மறந்துபோனதென்ன? ரோம. 12: 1.

38. ஜீவாத்துமாவுக்குள் பரமாத்துமாவும் அதற்குள் அந்தராத்துமாவும் இருக்கும் மகிமையை நீ சற்றே ஆராய்தல் வேண்டும். சரீரத்துக்குள் ஆத்துமாவும், அதனுள் ஆவியும் தங்கி, தனித்தனியே செய்யும் மகத்துவங்களைச் சுருக்கமாய் உரைக்க விரும்புகிறேன். இதை நீ தெளிவாய் அறியுமுன் பழைய ஏற்பாட்டில் நீ அசட்டைபண்ணும் சில நுட்பங்களைக் காணவா. பின் அது உன் சரீர, ஆத்தும, ஆவியின் கூறுகளை விளக்கிக்காட்ட மிகுந்த உதவியாகும்.

39. யாத்திராகமம் அதி. 25-30 மட்டும் கூறப்பட்டிருக்கும் ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றிய சில அந்தரங்கம் கேள். அது உனக்கு மெத்தப் பிரயோசனமாயிருக்கும். அது குறிப்பிடும் பொருள் இயேசு. பழைய ஏற்பாடு இயேசுவைச் சுட்டிக்காட்டும் ஓர் கைகாட்டியேயாகும்.

6. அருள்வேத மகத்துவம்.

40. இவ்வருள் வேதத்தின் மகத்துவத்தையும் நீ அறிய விரும்புகிறேன். நான் சிறிதுகாலத்துக்கு முன் உலகப் பிரசித்திபெற்ற இக்காட்சிசாலையைப் பார்க்க முயன்று அதன் முகப்பு மண்டபமாகிய ஆதியாகமத்திற்குள் புகுந்தேன். ஆதம் முதல் நோவைமட்டுமுள்ள பல தொண்டர் தங்கள் நீடியகால ஆயுளினால் எனக்கு மிக வியப்பைத்தந்தனர். ஆபிரகாமைப் பிரித்து, அவன் சந்ததியை நான்காம் தலைமுறையில் எகிப்தின் மந்திரியாக்கிய வரலாறும் கண்டேன். அடுத்த அறைக்குள் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்ட இசரேலர் (யாத். 2:23) மோசே, ஆரோன் முதலியோரால் விடுதலை பெற்று கானான் நோக்கிப் பிரயாணம் செல்லும் படங்கள் வரையப்பட்டிருந்தன. யோசுவா நியாயாதிபதிகள் வருமட்டும் எல்லாம் மன வெறுப்பைக் கொடுக்கும் வனாந்தரப் பிரயாண வரலாறே. ஒரு சிற்றறைக்குள் ரூத்தென்னும் பெண்ணின் சரித்திரம் அபிநயித்துக் காட்டப்பட்டபின்னால் பல பெரிய யுத்தங்களும் கொலைகளும் நடந்தது. இரத்தத்தைக் கண்டு நான் பயப்படாதபடி எலியா, எலிசா முதலிய உத்தம புத்திரர் இடையே என்னை சற்று முசிப்பாற்றினர். நாளாகம அறைக்குள் சாலொமோன் கட்டிய அழகிய ஆலய சாயலும் அதற்கிடையில் சில குரங்குகள் மர மேறுவதைக்கண்டு, எனது ஊரிலிருந்து நீ இவ்விடம் எங்ஙனம் வந்தாய் எனமட்டும் விளம்பியபின், மறுபடியும் நடந்தேன். முன்கட்டிய ஆலயம் இடிக்கப்பட்டு போகவே, எருசலேமைக்கட்ட முயன்ற சிலர் "மண்மேடு மிச்சமாயிருக்கிறது, வேலை கஷ்டம்" என்று சோர்படைந்து

நிற்பதைக் கண்டேன். பத்து நரம்பு வீணையுடன் இசரேலின் இனிய குரலோன் தாவீது பாடுவதாகக் கேள்விப்படவே, ஆத்திரமாய் சங்கீதக் கச்சேரிக்குப் போகவும், வழியில் புண்பிடித்த யோபு இதுவும் ஈசன்செயல் என வருந்துவதைக் கண்டு, சற்றே பொறுமையாயிரு என்னச் சொல்லி சங்கீதத்தினுட் புகுந்தேன். இச்சங்கீதங்களின் இனிமையால் இம்மட்டோடே நிற்கலாம் என்று எண்ணியபோதிலும் முழு மாளிகையையும் பார்க்க எண்ணிய ஆவல் என்னை அப்புறம் துரத்தினது. சாதுரிய பிரசங்கி ஒருவன் "எல்லாம் மாயை" எனக் கத்தும் சத்தம் காதில் விழவே, அச்சொற்பொழிவைக் கேட்க ஆத்திரப்படவும், பக்கத்தில் ஒரு சிற்றறைக்குள் பழையதும் புதியதுமான பழமொழிகள் பல சாக்குகளாய்க் கிடந்தன. பிரசங்கத்தின் முடிவுரை, முன்னுரையிலும் மிக அருமையானதால் முடிவில் கூறியதைமட்டும் கருத்தில் வைத்துப் பின் ஓர் மணவறைக்குள் புகுந்தேன். அங்கு இருமணமக்கள் தங்கள் அந்நியோந்நிய அன்பை வாயின் முத்தங்களாலும் வாய் மொழிகளாலும் வெளியிட முயன்றனர். பதினாயிரம்பேரில் சிறந்தவரான மணவாளனை அவ்வறைக்குள் காணவும், போதும், இங்கேயே இருக்கிறது நல்லது என்று சற்று பின்னிட்டேன். எனது வழிகாட்டியோ, முழுவதும் பார்த்துமுடி, அதற்கு முன் தாமதியாதே எனச் சொல்லவும், ஏசாயா முதலிய தீர்க்கதரிசனங்களில் எனக்கு எளிதில் கிரகிக்கமுடியாத பல காரியங்கள் மறைந்து கிடக்கக்கண்டேன். பல ஜோசியர் பின் அறைகளில் ஏடும் கையும், கண்ணாடியும் சூரிய கடியாரமுமாய் ஏதோ ஒரு ராஜாவாகப் பிறக்கப்போகும் சமாதானப் பிரபுவுக்கு சாதகம் எழுதுவதாகக் கண்டேன். தானியேல் முதல் சிற்றறைகள் பதிமூன்றுக்குள்ளும் சில தூரதிருஷ்டி கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன. அவற்றினூடே வானத்தின் ஜோதிகளைப் பார்க்கவும் உதிக்கப் போகிற நீதியின் சூரியனையும் அதற்கு முந்திய விடிவெள்ளியாகிய ஸ்நானக யோவானையும் மங்கலாய்க் கண்டேன்.

41. மாளிகையின் மீதிப்பாகம் துண்டாய் நின்றது. ஆகையால் யானும் பிரமித்து நின்றேன். அப்போது 'கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்' என்னும் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாயிற்று. நாலு வாசலுள்ள ஓர் மண்டபத்தின் நடுவில் ஒரு புருஷன் நின்றார். முதலில் அவர் பரலோக ராஜ்யத்துக்குரிய இராஜனாகவும், இரண்டாவதில் அவர் ஓர் ஊழியனாகவும், மூன்றாம் வாசலின் வழியாய்ப் பார்க்கில் அவர் ஓர் மனிதகுமாரனாகவும், முடிவில் அவர் முடிசூட்டப்படவேண்டிய தேவகுமாரனாகவும் தோன்றினும், அவர் இன்னார் என்பது எளிதில் விளங்காதபடியால் அப்போஸ்தலர் நடபடி அறைக்குள் புகுந்து கூடியிருந்தோரிடம் முற்கண்ட அறையினின்று சிலுவையின் மரணத்தால் திடீரென்று மறைந்துபோன இயேசுதான் மேசியாவோ எனக் கேட்டேன். மலையப்பர் மறுமொழியாக "இரட்சிக்கப்படுகிறதற்கு வானத்தின் கீழெங்கும் வேறொரு நாமமுமில்லை" என முழங்கவும், காரியம் இப்படியா இருக்கிறது என்னும் வியப்புடன் குமஸ்தாக்களடங்கிய ஓர் எழுத்தறைக்குள் சென்றேன். கண் நோவினால் சின்னப்பர் அடிக்கடி கண்ணீரோடு நிருபம் எழுதியபோதும், மலையப்பருக்கு அவை கருகலாய்த் தோன்றிற்று. ஆதலின் பவுலடியாரைப் பலர் "அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்" என நற்சாக்ஷி கொடுத்தனர். பேதுரு, யூதா முதலியோர் தள்ளப்பட்ட தூதனைப்பற்றியும், மோசேயின் தூல சரீரத்தைப்பற்றியும் எழுதினர். சுவிசேஷ மண்டபத்தில் இயேசுவின் திருமார்பை ஆசனமாகப்பெற்ற யோவான் அவரது அழகிய கழுத்திற்கு 'அன்பு' என்னும் ஒருக்காலும் வாடாத பூவினால் ஓர் அழகிய ஆரம் செய்தது பார்ப்போரின் கண்களைக் கவர்ந்துகொண்டது. கடைசியாக வெளிப்படுத்தின விசேஷத்திற்குள் புகவும், நிலையங்கி தரித்து, பொற்கச்சை கட்டி, அக்கினி ஜுவாலைபோன்ற கண்களையுடையவரும், கோடாகோடி தூதர்களால் ஓயாமல் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் எனப் போற்றப்பெற்றவருமான

எம்பெருமான் இயேசுவையும் கண்ணாரக்கண்டு, முன் கண்ட யாவும் நிழலேயாம், பொருள் இவரே. "இவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட மேலான தேவன்" என்று கண்டு அவர் பாதம் சாஷ்டாங்கமாய் விழுந்து

எல்லாருக்கும் மா உன்னத
கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தேவ மனிதன்
நீர் வாழ்க இயேசுவே

என்று பாடி ஆர்ப்பரித்தேன்.

7. ஆசரிப்புக் கூடாரத்தின் அரும்பொருள் விளக்கம்.

42. சத்திய வேதத்தின் அதிசய தன்மையைப்பற்றி நீ தெளிவாய் அறியவேண்டும். வேதத்தின் மொத்தப் பொருள் இயேசு. "ஆதியிலே தேவன்" என்று துவக்கி, "கர்த்தராகிய இயேசு" என்று முடிவுபெறும் வேத புத்தகம் சுட்டிக்காட்டும் ஏக பொருள் இயேசுவே. பழையேற்பாட்டில் வாசிக்கும் ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றி மட்டும் தற்சமயம் பார்ப்போம்.

43. எகிப்திலிருந்து புறப்பட்டுப்போன ஆறு லக்ஷம் எபிரேயருக்கும், தொழுதுகொள்ளும் ஸ்தலம் ஒன்றேயொன்று. உலகமுழுவதற்கும் ஒரே தொழுகையும் வணக்கமும் இருக்கவேண்டு மென்பதற்கு அது முன் குறி. யோவா. 10:16, சகரியா 14:9. எல்லாருக்கும் ஒரே தேவன் உண்டு. 100 முழ நீளமும், 50 முழ அகலமுமான ஓர் பிராகாரத்தினுள்ளே வாசஸ்தலம் நின்றது. பிராகாரத்தின் மூடு திரைகள் 5 முழ உயரமாயிருந்தது. அதன் நிறம் தூய வெள்ளை. மெலலிய பஞ்சு நூலாலாக்கப்பட்டவை. கிறிஸ்து சபைக்கு வேலிகளைப் போன்ற விசுவாசிகள் பரிசுத்தமும் (மத். 5:48), எளிமையும் (மத். 5:2), உள்ளே நிற்கும் வாசஸ்தலத்தை தன்னூடே காட்

டக்கூடிய மெல்லிய துணியைப்போல், கிறிஸ்துவை உள்ளடக்கி, அந்நன்மை வடிவத்தை பிரதிபிம்பிக்கிறவர்களாதலும் வேண்டும்.

44. பிராகார வாசல் இயேசுவே. யாத். 27:13-16. அது கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டிருந்தது. தொழுகையில் அடியார் மேற்கு முகமாய்த் தொழ ஏவியது இவ் வாசலே. சூரிய வணக்கத்தாரினின்று பிரிக்கப்படவே, இது கட்டளையிடப்பட்டது. கிழக்கே தோன்றுகிற சூரியனையல்ல, அதையுண்டாக்கிய கடவுளையே கும்பிடவேண்டுமென்பதே யதன் பொருள். பிராகார வாசலில் 20 முழ நீளமும், 5 முழ உயரமுமான சதுர் வர்ணங்களடங்கிய ஓர் திரை தொங்கியது. அது இயேசு பெருமானின் நாலு விசேஷ குணங்களைக் காட்டும். இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு, வெள்ளையாகிய நாலு நிறங்களும் பல குணங்களைக் குறிக்கும். நாலு சுவிசேஷங்கள் பல நிறங்களைக் காட்டினும் அவைகள் வர்ணிக்கும் இயேசுவாகிய வாசல் ஒருவரே. உலகத்தாரின் இரத்தாம்பரமான பாவத்தை (ஏசாயா 1:18) இயேசுவின் சிவந்த இரத்தம் (யோவா. 1:29) போக்கடித்து 1 யோவா 1:7. மனிதாத்துமாக்களில் படிந்த பாவக்கறையை மாற்றுவதினாலே, அவைகளைப் பஞ்சைப் போல் வெண்மையாக்கி, முடிவில் இளநீலநிறம் குறிப்பிடும் உன்னதங்களுக்குள் கொண்டு செல்லும். யோவா. 14:3. சுவிசேஷ வரலாற்றையே இந்தத் திரை விரித்துக் கூறுகிறது.

45. இப்பெரிய ஆசரிப்புக் கூடாரத்திற்கு வாசல் ஒன்றே. உள்ளே பிரவேசிக்க வேறு வழியில்லை. இரட்சிக்கப்பட இயேசுவின் நாமம் ஒன்றைத்தவிர வானத்தின் கீழெங்கும் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. அப். 4:12 அவரே ஏகவாசல் யோவா. 14:6; 10:9. சிநேகிதனே! இந்த மெய்யான ஒரே வாசலை விட்டுவிட்டு வேறெங்கும் சென்று முட்டாதே. வீணிலே உனது பிரயாசத்தையெல்லாம் செலவு பண்ணாதே.

Jebamalai.

46. காவடி சுமந்து தோளெலாந் தடித்துக்
கடும் பயணங்களை நடந்து
கழுத்தினில் அரிகண்டங்களைப் போட்டு
கயிறுகள் செடில் குத்தியாடி
கூவியே தீயிற் குதித்துக் கொக்கரித்துக்
கொடிய பந்தங்களாற் சுட்டுக்
கொண்டு கூத்தாடி உடம்பெலாங் கீறிக்
கோணியே வலித்து மாரடித்து
யாவருமறியத் தலையையுஞ் சிரைத்து
நடைவிளக் கேற்றியே தோளின்
நடுவினில் சுட்டு செருப்பதிட்டடிக்க
ராமா ராமா வெனக்கத்தி
மேவியங்கப் பிரதட்சண முருண்டு
விரதங்கள் நோன்புகள் பிடித்தும்
மெய்ப்பலன் காணுதப்பனே யலைந்தேன்
வினைதவிர் இயேசு நாயகனே.

47. தாடிகள் சடைகள் வளர்த்து ருத்திராட்சத்
தாவடம் பலபல தரித்துத்
தண்டுடன் கமண்டலங்களும் கொண்டு
சாம்பலும் வீம்பதாய்ப் பூசி
ஆடிய மயிற்றோகையதுடன் காவி
ஆடையும் அயிணமும் குறடும்
அங்கமாய்க்கொண்டு கவசகுண்டலமிட்
டரகரா வென்று கூப்பிட்டு
காடுகள் மலைகள் கெபிகளிற் புகுந்து
கந்தமூலங்களைப் புசித்து
காயசித்தியதற் குடலையும் ஒறுத்துக்
கடுந்தவங்களையெல்லாம் புரிந்து
வாடியே யோகத்திருந்து மூச்சடக்கி
மவுன சாதனைகளும் செய்தும்
வஸ்துவினிலை காண்பதற்கரிதெனவே
வந்தனன் இயேசு நாயகனே.

48. 'வாசல் வழியாய் பிரவேசியாமல் வேறு வழியாய் பிரவேசிக்க, விரும்புகிறவனே! நீ கடைசியில் இவ்வாறு புலம்ப வேண்டியதிருக்கும். சத்தியத்தை இன்னும் நீ காணவில்லையாக்கும். வழியாகிய இயேசுவால் உட்பிரவேசி. அப்படிச் செய்தால் உனது உள்உடலுக்கும் வெளியுடலுக்கும் தேவையாயிருக்கும் ஞான நன்மைகளையெல்லாம் பெற்று நீ களிப்பாய். யோவா. 10: 9.

49. கிறிஸ்தவனே! நீயும் சடங்காசாரங்களின் வழியாய் நித்திய ஜீவனைக் கண்டடையலாம் என்று கனவிலும் நினையாதே. நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனமும் உன்னை இரட்சியாமல், இயேசுவைப் பற்றும் விசுவாசம் ஒன்றே நன்மை பயக்குமென்பதை ஆழமாய்த் தியானித்து சிந்தை செய். அப். 16: 31; எபே. 2: 8. ஜீவனைக் கண்டடையப்பண்ணும், (ஜீவன்முக்தனுக்கும், பிறப்பறுக்கப்பண்ணும்), வாசல் இயேசுவே. யோவா. 14: 6. வேறு வழியாய்ப் பிரவேசிக்கிறவன் எவனும் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். யோவா. 10:1.

50. இந்தப் பிராகாரத்தினுள்ளே பிரவேசித்தவுடன் வலது பக்கமாய் யாவரும் காணத்தக்கதாய் ஒரு யாக பீடம் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தைச் சேர்ந்த எல்லாப் பொருட்களிலும் இதொன்றே மிகப் பெரியது, சிலுவையே கிறிஸ்துமார்க்கத்தின் பெலன் 1. கொரி. 1:18; 2: 2. உலகமுழுவதையும் அன்பினால் இழுக்கக்கூடிய சத்துவம், தன்னை ஒறுத்தலாகிய (சுயபரித்தியாகம்) சிலுவையினின்றே புறப்படுகிறது. யோவா. 12: 32.

51. இந்த பலிபீடம் மிக உறுதியான சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டது. சிலுவைப்பயன் நித்தியமானது. அதை நம்புவதினால் உண்டாகும் பலன் நித்தியமட்டும் உதவக்கூடியது. இழந்துபோன திவ்ய சுபாவத்தை அடைய முயலுகிற எந்த மனிதனும் தன்னை இந்த பலிபீடத்தில் படைக்கவேண்டும். மத். 16: 25ல் "என்னைப் பின்பற்ற

விரும்பினால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்து" என்பதின் கருத்து இதுவே. பலிபீடத்தில் படைக்கப்பட்ட பொருள் கொடுத்தோனைச் சேராமல் ஆசாரியனையே சேரும். நீ உனது சரீரத்தை ஒருமுறை ஆண்டவருக்கேற்ற ஜீவபலியாகப் படைத்தால் ரோம. 12: 1 மறுபடி அதை உனதிஷ்டப்படி உபயோகியாதே. இனி நீ முற்றிலும் அவருக்கே. 1 கொரி. 6: 19.

52. சற்று தாண்டின் ஒரு வெண்கலத்தொட்டியைக் காண்பாய். தினம் தினம் ஆசாரியர் உள்ளே பிரவேசிக்கும்போது, தங்கள் கைகளையும் கால்களையும் கழுவவேண்டும். தீத்து. 3: 5, நீ உன்னை பலியாக ஒப்புக்கொடுத்த பின்னும் இவ்வுலகத்திலேயே இருக்கிறபடியால் இதின் தூசி உன் கால்களில் படியுமாதலால் தினம்தினம் நீ பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலே உன்னைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். கையும் காலும் செய்கையையும் நடக்கையையும் குறிக்கும், ரோம. 12: 2; 2 கொரி 3: 18.

53. முப்பதுமுழ நீளத்தில் பத்துமுழ உயரமும், பத்துமுழ அகலமுமுடையதாக நிற்கும் மூடப்பட்ட இடத்திற்கே வாசஸ்தலமெனப்பெயர். அதின் கிழக்குப்பாகம் முழுவதும் வாசல்தான். அங்கேயும் நாலு நிறங்களான நூலால் செய்யப்பட்ட திரையில் அழகிய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும் யாத். 26 : 36. அதின் நீளம் 10 முழம் உயரம் 10 முழம். ஆகையால் பரப்பளவு 10×10 = 100 சதுரமுழம். பிராகாரத்தின் வாசலும் 20×5 = 100 சதுரமுழமே. இவ்விரண்டும் ஒன்றேயாகும். இயேசுவே பாவிகளை இரட்சிக்கிறவர். இயேசுவே விசுவாசிகளை பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் நடத்துகிறவர். முன் பலர் பிரவேசிக்கக்கூடிய 20 முழ நீளமுள்ள பிராகார வாசல், இப்போ சற்று சுருங்கி 10 முழமாகிறது. அழைக்கப்பட்டோர் அநேகராயினும் உட்பிரவேசிப்போர் சிலர்மட்டுமே கன்னிகைகள் 10ல் 5 பேர் மட்டுவே மணவாளனுடன் பிரவேசித்தவர்களாயினர் மத். 25 : 18.

54. வாசஸ்தலம் 20 முழ நீளமும், 10 முழ அகலமும், 10 முழ உயரமுமானது. அதின் சுவர்கள் பலகைகளால் செய்யப்பட்டவை. விசுவாசிகள் உறுதியுள்ள சித்தீம் மரம்போல் காணப்படவேண்டும் மத். 11 : 12. அப்பலகைகள் நிமிர்ந்து நின்றன. காற்றில் அசையும் நாணலைப் போன்ற அற்ப விசுவாசமல்ல, எம்மழைக்கும் விழாத கல் வீடுபோல் மத். 7 : 26 இயேசுவாகிய கற்பாறைமேல் விசுவாசிகள் அஸ்திபாரமிடப்பட்டு ஏசாயா 28 : 16 நிமிர்ந்து நிற்கவேண்டும். பலகைகள் ஒன்றோடொன்று இசைந்திருந்தது. கிறிஸ்துவுக்குள்ளான வர்களிடத்தில் ஒற்றுமை காணப்படவேண்டியது மெத்த அவசியம் பிலி. 2 : 1-4. அவைகள் பொன் தகடுகளால் மூடப்பட்டிருந்தன. அப்படியே மனுஷீகம் மறைக்கப்பட்டு, இயேசுவை அணிவதினால் தேவரூபம் காணப்படவேண்டும். கலா. 2 : 20. அவைகள், மேலும் கீழும் இசைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள் மேலே ஆவிக்குரிய விசுவாசக் கொள்கைகளிலும் (ஆவியின் ஒருமை) கீழே கொள்வனை, கொடுப்பனை, ஜாதிபேதமின்மை முதலிய உலகத்துக்கடுத்த விஷயங்களிலும் ஒற்றுமைப்பட்டிருத்தல்வேண்டும். பலகைகள் 5 தாழ்ப்பாள்களையுடையதாயிருந்தது. எதிரிகள் நெருக்கும்போது விசுவாசிகள் விழாதிருக்கத்தக்கதாக பல வரங்களை இவர்கள் பொதுவாய் பெறல்வேண்டும். நடுத்தாழ்ப்பாள் பலகைகளினூடே பாய்ச்சப்பட்டிருந்தது. உறுதியாகிய இயேசு எல்லாருக்குள்ளும் பெலத்தைக் கொடுக்கிறவராய் இருத்தல்வேண்டும். 1 யோவா. 4 : 4.

55. வாசஸ்தலத்திற்குள் பிரவேசித்தவுடன் வலதுபுறமாய் ஒரு மேசையும் அதின்மேல் சமுகத் தப்பங்களும் வைக்கப்பட்டிருந்தது. விசுவாசிகள் சோர்ந்து போகும் போது அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் பிரயாணப்படுகையில் இவர்கள் புசிக்கவேண்டிய ஞான அப்பம் இயேசுவே. யோவா. 6 : 48, 54. அவரை உட்கொள்ளாதவனுக்கு ஜீவன் இல்லை. நன்மைபயக்கும் சத்துவம் இயேசு

வின் சிந்தையே. அவருடைய சிந்தையும் ஆவியுமில்லாத வன், அழியாப்பாக்கியத்தைப் பெறுவதில்லை. இரக்ஷகருக்கு ஒப்பிடப்படும் பொருட்கள் அவரது அடியாரையும் சம்பந்தித்திருக்கும். தன்னைப் பிரதிஷ்டையாக்கி, அனுதினமும் பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கப்பட்ட விசுவாசி, மற்றவர்களுடைய ஆத்தும பசியைத்தீர்க்கும் ஞான போஜனமாய் மாற வேண்டும். கலா. 5: 22ல் காணும் ஆவியின் கனிகளால் இவர்கள் அலங்கரிக்கப்படவேண்டும். "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அறுத்துப்போடுகிறார், என்னில் கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்." யோவா. 15 : 2, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவா. 15: 8,

56. வாசஸ்தலத்தின் உட்புறத்தில் இடதுபக்கமாய் ஏழு அகல்களுள்ள ஒரு பொன் குத்துவிளக்கு இருந்தது. அதுவும் இயேசுவே. அவரே உலகத்தில் வந்த மெய்யான ஒளி. யோவா. 1: 9; 8: 12; 9: 5; 12: 35. 'ஏழு' என்பது பூரணத்தைக் குறிக்கும். ஆதலின் இவ்வொளிக்கு மேலான ஒளி இல்லை. அது குறைவற்றது. மனிதருடைய இருதயங்களைப் பிரகாசிப்பிக்கக்கூடியது. 2 கொரி. 4: 6. கிறிஸ்தவர்களும் உலகத்துக்கு வெளிச்சம் கொடுக்கவேண்டியவர்கள். மத. 5: 12-16. இரவுபகலாய் இவ்விளக்கு ஓயாமல் எரிந்துகொண்டேயிருந்தது. சிற்சில வேளைகளில் உற்சாகமடையும்போது மட்டுமல்ல, எப்போதும் உனது நன்னடக்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியா யிருத்தல்வேண்டும். தெளிவான ஒலிவ எண்ணெயால் இது எரிக்கப்படவேண்டும். ஆத்திர புத்தியாலுண்டாகும் கொந்தளிப்பின் கனிகளல்ல, அமைதியான நிலையான குணங்கள் கிறிஸ்தவர்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

57. இவ்விரண்டிற்கும் இடையில் சற்றுமுன் தள்ளி ஒரு தூபபீடம் ஓயாமல் புகைந்துகொண்டிருந்தது. இயேசு

பிதாவின் சந்நிதானத்தில் ஓயாமல் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார். 1 யோவா. 2: 1. அவருடைய ஆசாரிய மன்றாட்டிலேயே நமது பூரணப்படுதல் தொங்கிநிற்கிறது. உனது ஜீவியத்தில் இடைபறாத ஜெபம் மிகவும் அவசியம். புகைமேலேயே எழும்புமாப்போல் ஜெபம் உன்னைத் தேவனிடம் சேர்க்கும். தூபம் மற்றோர்க்கு நற்கந்தமளிக்குமாப்போல் ஜெப ஜீவியம் நம்மை சாரமேற்றுகிறது. நமக்காக மட்டுமல்ல, நமது சத்துருக்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும். மத். 5: 44.

58. முடிவில் 10 முழ நீளமும் 10 முழ அகலமும் 10 முழ உயரமுமான 'மகா பரிசுத்த ஸ்தலம்' கூடாரத்தின் மேற்குபாகத்தில் நின்றது. பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இதைப்பிரித்தது ஓர் அழகிய திரையே. இத்திரையில் முந்திய இரண்டு திரைகளிலுமில்லாத கேருபீகள் சித்திரிக்கப்பட்டிருக்கும் யாத். 26: 31. நெருங்க நெருங்க விசுவாசிகள் இயேசுவை அழகுபொருந்திய வராகக்காண்பாரென்பதே அதின் பொருள். வருஷம் ஒரு முறைதான் பிரதான ஆசாரியன் இரத்தத்தோடு இதினுள் பிரவேசிக்கக்கூடும். இரக்ஷகர் சிலுவையிலறையப்படவும் இத்திரை, மேல்தொடங்கிக் கீழ்மட்டும் இரண்டாகக் கிழிந்தது. எபி. 4: 16. எவரும் இனி தைரியமாய் தேவ சந்நிதியில் போகக்கூடிய சிலாக்கியம் இதனால் நமக்குண்டாகிறது. உள்ளே ஒரு உடன்படிக்கைப்பெட்டியும், அதற்குமேல் கிருபாசனமும், கேருபீன்களும் காணப்பட்டது. ஆக்கினைத் தீர்ப்புக்கொடுக்கும் கற்பலகைகள் பெட்டிக்குள் இருந்தன. தேவ நீதி வெளிப்பட்டால் உலகம் தாங்காது. கிருபாசனம் அதின்மேல் நிழலிட்டிருந்தது. விசுவாசிகளைத் தமக்காளாக்கக் 'கிருபை' யென்னும் ஏக வழியே தவிர வேறு வழியில்லை. எபி. 2: 8. தேவகோபத்தைத் தணிக்கக்கூடியது 'கிருபை' ஒன்றே. கிருபைக்குமீறின் பிரமாணம் யாதொன்றுமில்லை. இதின் அந்தரங்கத்தைத் தெளிவாய் அறிய தேவதூதரும் இதையிட்டு ஆச்சரியப்பட்டு உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள். 1 பேது. 1: 12.

59. "நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும்" இடம் இதுவே. சங். 85 : 10 தேவன் மனிதனை சந்திக்கும் இடமும் இதுவே. யாத். 25: 22.

60. இன்னொரு முறையாய் இதை விளக்குவோம். பிராகாரத்தில் நாடோறும் அதிகமாய்க்காண்பது பலியிடப் படக் கொண்டுவரப்படும் மிருகங்களும், பக்ஷி பறவைகளுமே. பிராகாரத்தினுடைய பணிமுட்டுகளில் சம்பந்தப் பட்டது மிருகம். பரிசுத்த ஸ்தலத்தில் அனுதினமும் பிரவேசிக்கவேண்டியது மனுஷன். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் மகிமைப்படுபவர் கடவுள். இம்மூன்றுக்கும் மனிதன் சம்பந்தப்பட்டவனாகவே இருக்கிறான். பலியிடுகிறவனும், தன்னை சுத்தம் பண்ணுகிறவனும், அப்பம் சுட்டு, விளக்கெரித்து, தூபம் புகைத்துவருபவனும், வருஷமொருமுறை மகா பயபக்தியோடு மூன்றாந்திரைக்குள் இரத்தத்துடன் செல்லுபவனும் மனிதனே. ஆயினும் இவ்விடங்கள் பல நுட்பங்களைக் குறிப்பிடுகின்றன.

பிராகாரம்—அழிந்து போகவேண்டிய மிருகம்.
பரிசுத்த ஸ்தலம்—தன்னைக் காக்கவேண்டிய மனிதன்.
மகா பரிசுத்த ஸ்தலம்—நீதியையும் கிருபையும் அளிக்கும் கர்த்தர்.

61. மனிதனுக்குள்ளிருக்கும் ஆவி, ஆத்துமா, சரீரம் இவைக்குத் தனித்தனியே கொடுக்கப்படும் ஸ்தலங்களெவை? இதைக்காண முயன்றே ஆசரிப்புக்கூடாரத்துக்குட் புகுந்தோம். இந்தக்கூடாரமும் நமக்கு உதவுகிற ஒரு ஒப்பனையாக விருக்கிறது. எபி. 9: 8.

ஆசரிப்புக் கூடாரத்தின் மொத்தம் பரப்பளவு.
$100 \times 50 = 5000$ சதுர முழம் யாத். 27 : 10-26.

அதில் பரிசுத்த ஸ்தலம் மொத்தப் பரப்பளவு.
$20 \times 10 = 200$ சதுர முழம் யாத். 27 : 10-16.

மகா பரிசுத்த ஸ்தலம் மொத்தப் பரப்பளவு.
$10 \times 10 = 100$ சதுர முழம் யாத். 27 : 10-16.

62. மனித உடலையும் மூன்று பாகமாகப் பிரிக்கலாம்; ஆவிஸ்தானம், ஆத்தும ஸ்தானம், சரீரஸ்தானம். இதில் ஆவிஸ்தானத்தை மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும், ஆத்தும ஸ்தானத்தைப் பரிசுத்த ஸ்தலத்திற்கும், சரீரஸ்தானத்தைப் பிராகாரத்திற்கும் ஒப்பிடலாம். ஆவிஸ்தானம் அளவில் சிறிதாயினும், அழகில் (மகிமையில்) சிரேஷ்டமானது. ஆத்துமஸ்தானம் முன்னுள்ளதைவிட சற்றுபெரிதும், சரீரஸ்தானம் மற்ற இரண்டையும் பார்க்கிலும் அதிக இடவிஸ்திரணம் கொண்டதுமாயுள்ளது. இவைகளின் அந்தரங்கத்தைப் பின் தெளிவாய்க் காண்போம்.

63. ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றிய பல அந்தரங்கங்களை நீ அறியவேண்டுமென்றிருக்கிறேன். முன்னொரு முறை அது உன்னைக்குறிக்கும் ஒரு பொருளென்றேன். இம்முறை அதுமுழுவதும் இயேசுவே என்று நீ அறிய வேண்டும்.

64. தூரத்தின் பார்வைக்கு 5 முழ உயரமான, திரித்த மெல்லிய பஞ்சு நூலாலாக்கப்பட்ட திரைகள் மட்டுமே தென்படும். இயேசு ஏழையாகவும், அசட்டைப்பண்ணப்படுகிறவராகவும் சாதாரணமாய்த் தோன்றுவார் ஏசாயா 53: 2. துணி விலையுயர்ந்ததல்லாத போதிலும் அதின் நிறம் தூய்மைபோல், இயேசு உலகமுறையில் ஏழையாயினும் பரிசுத்தத்தில் ஒப்பற்றவர். யோவா. 8: 46.

65. கீழ்த்திசையில் வந்து உட்பிரவேசிக்க விரும்பும் மனிதர் மட்டுமே, பிராகார வாசலில் தொங்கும் அழகிய நான்கு நிற நூல்களாலாக்கப்பட்ட தொங்குதிரையைக் காணக்கூடும். மேற்கிலிருந்தாலும் இயேசுவைத் தங்கள் சொந்தமாக்கவேண்டுமென்னும் ஆத்திரத்துடன் கிழக்கு தேச சாஸ்திரிகளைப்போல் நெடுந்தூரம் நடந்துவரும் தொண்டர் அவரை அழகுபொருந்தியவராகக்கண்டு அவர் பாதம் சாஷ்டாங்கம் செய்வார்கள். மத். 2: 11.

66. இவ்வாசரிப்புக்கூடாரம் ‘ பாளையத்தின் மத்தியில்’ ஸ்தாபிக்கப்பட்டதுபோல் இயேசு சகலத்திலும் மத்தியிலேயே நிற்கிறார். பிறப்பு, வளர்ப்பில் மேற்கு தேசத்திற்கும் கிழக்கு தேசத்திற்கும் மத்தியில். பூமி சாஸ்திர அளவின்படி சிலுவையிலறையப்பட்ட இடம் உலகமுழுவதற்கும் மத்தியிலிருக்கிறதாம். அவருடைய ஊழியம் எவரேனும் ஒரு வகுப்பாரைமட்டும் சாராது. ‘வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்துவந்த’ எவனுக்கும் ஆத்தும சமாதானத்தைக் கொடுத்தது. யூதராயினும் கிரேக்கராயினும், விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போவதில்லை. கொலோ. 3: 11; கலா. 3: 28.

67. ஜீவனைக் கண்டையப்பண்ணுகிற ஏக வழியும் இயேசுவே.

68. உட்பிரவேசிக்க பலிபீடத்தைக் கண்டோம். பலியும் இயேசுவே. பலிபீடமும் அவரே. ஏசாயா 53 : 4-6 ; யோவா. 1: 29; 1 யோவா. 1: 7. ஈசாக்கை மீட்டுவிட புதரில் சிக்கிய ஆடு அவரே. நாம் பிழைக்கத்தக்கதாக தீமை வடிவமாக்கப்பட்டவரும் அவரே. 2 கொரி 5: 21. பலிபீடம் ஓர் அறைக்குள்ளல்ல, யாவரும் காணத்தக்கதாய் பிராகார முற்றத்தில் நின்றாற்போல் இயேசுவும் ஒரு மூலையிலல்ல, யாவரும்காண, பாளையத்தின்புறம்பே, மத்தியான வேளையில் தியாகமாயினர். மனுக்குலம் முழுவதையும் இழுக்க, தெய்வீக அருளால் நிரப்பப்பட்ட இடம் சிலுவையே, யோவா. 12: 32.

69. வெண்கலத் தொட்டியும் இயேசுவே. தங்கள் சுயநீதியால் திருப்தியடையாமல், தெய்வீக நீதியால் சுற்றப்படவேண்டும் என்று தாகங்கொள்ளும் ஆத்துமாக்களுடைய வாஞ்சையைத் திருப்தி செய்பவரும் இயேசுவே. மத். 5: 6. “ விருப்பமுள்ளவனுக்கு ஜீவ தண்ணீரைக் கொடுப்பவரும்” அவரே. வெளி. 22: 17. நீ ஆத்தும தாக சாந்தியடைய விரும்பினால், மற்றெங்கும் போகாமல்,

தாகசாந்தி யளிக்கக்கூடிய ஒருவராகிய அவரிடம் மட்டுமே செல். யோவா. 7: 37. மற்றோரைக் களிப்பிக்கும் சந்தோஷ நிலைபெறவேண்டுமானால் உனக்குள் ஓயாமல் ஊறிக்கொண்டேயிருக்கும் அன்பு வெள்ளத்தைப் புறப்படப்பண்ணக் கூடியவரும் அவரே. யோவா. 4 : 14. இந்த ஜீவதண்ணீரைப் பருகுகிறவன் பின் ஒருக்காலும் தனது ஆன்ம நெறியை இழந்து தாகமடையான். ஏனெனில், நித்தியஜீவ ஊற்று அவரே. தமது அருள் வெள்ளத்தால், உனது உள்ளத்தை பூரணமாய் நிரப்பக்கூடியவரும் அவரே. தீங்கனுடைய பொல்லாப்புகள் கொள்ளிக்கட்டைகள்போல் உன்மேல்வரினும், உனக்கு தீங்குவராமலிருக்கப் பண்ணக்கூடிய பெருவெள்ளப் பிரவாகத்தை, ஓயாமல் உன்னிலிருந்து நாலா பக்கமும் பாயச்செய்து, உன்னை உனக்குமட்டுமல்ல, பலருக்கும் உலகமுழுவதற்கும் உபயோகமாக்கக்கூடிய ஜீவதண்ணீர் நதியாக்கக்கூடியவரும் இயேசுவே. யோவா. 7 : 38.

70. வெண்கலத் தொட்டி தாகசாந்திக்காக மாத்திரமல்ல, சுத்திகரிப்புக்காகவும் ஏற்படுத்தப்பட்டது. சரீர அழுக்கைமட்டும் நீக்கக்கூடிய சத்துவம் அமைந்த தண்ணீரைக் கொண்டிருந்த வெண்கலத் தொட்டிபோலல்ல, ஆத்துமாவை மாசு மறுவின்றிக் கழுவி சுத்திகரிக்கும் திவ்விய வல்லமையும் இயேசுவே. எபி. ௯ : 13, 14.

71. தம்மை அண்டும் தொண்டரை பாவ நினைவுகளறக் கழுவக்கூடிய சத்துவம் இயேசுவுக்குண்டு. ஆதலின், 'அக்னிதீர்த்தம்' செய்யக்கூடியவர் என்னும் நாமதேயமும் அவருக்குண்டாயிற்று. மத். 3·11. நெடுநாள் நோன்பு பிடித்தபின் குளித்து அவ்வீரத்துடனேயே எரிந்து அமைந்து சாம்பல் படிந்திருக்கும் தீக்குழியில் ஒரு காலும், மறு கரையில் மறு காலும் வைத்து, வைத்த காலுக்கு யாதொரு சேதமுமில்லாமல், தீக்குழி தாண்டுபவர்களைப் போலல்ல, தனதுளத்தைக் கறைப்படுத்தக் கூடிய பாவச் சோதனைகள் நாலு பக்கமிருப்பினும், தான் தனது பரிசுத்தத்தை சற்றேனும் கைநெகிழாது, தன்னைச் சுத்தவானாகக்

காத்துக்கொள்ளக்கூடிய அருளைக் கொடுப்பதுவே இயேசு பெருமானின் தொழில்.

72. இவ்வருள் பெற விரும்புவோர் இயேசுவுடனே தங்களையும் தியாகமாக்கி முற்றிலும் தங்களை நன்மைக் கென்று கையளிப்பதால் 2 கொரி. 5:15, இனி 'நான்' 'என்' என்றல்ல, எனக்காகத் தம்மையே கொடுத்த இயேசுவுக்காகவே இருக்கிறேன். கலா. 2:20. என்று சொல்லிப் பழகவேண்டும்.

73. அப்படிப்பழகி வருவோர் மறுபடியும் பாவம் நிறைந்த உலகிலேயே இருப்பதால் தங்கள்மேல் படியும் தூசியை இவர்கள் அடிக்கடி உதறவும், கழுவவும் வேண்டும். பஸ்காவுக்குமுந்தின இரவு இவர்களின் காலைக் கழுவுவதி னுடைய இரகசியம் இதுவே. சுத்திகரிப்புக்கேற்ற வெண் கலத்தொட்டி இயேசுவே.

74. பரிசுத்த பணிமுட்டுகளை யெல்லாம் அடக்கப் பெற்றிருக்கும் வாசஸ்தலமும் இயேசுவே. தெய்விக லக்ஷ ணங்கள் சகலமும் சரீர சம்பந்தமாக இவருக்குள்ளேயே வாசமாயிருக்கின்றன. கொலோ. 2: 9. உயரமும் நீளமும் பத்து, பத்து முழமாகி சதுரமாய் விளங்கும் நான்கு நிற முடைய தொங்கு திரையும், நான்கு சுவிசேஷகர்கள் கூறும் இவரே.

75. வாசஸ்தலத்திற்குள் வலதுபுறமாய், இவர் பசாசு மாம்சம், லோகம் இவற்றோடு போர்செய்து, சோர்ந்துவரும் தொண்டருக்கு முசிப்பாறுதலைக் கொடுக்கும் ஜீவ அப்ப மாக யோவா. 6 : 48 விளங்குகிறார். ஏதேனிலிருந்த ஜீவ விருக்ஷம் இவரே. குத்துவிளக்கும் இவரே. தூபபீடமாய் மனிதருக்காகவேண்டி நிற்பவரும் இவரே.

76. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் மற்றவர்களைப் போகவிடாதபடி தடுத்தது தேவநீதியே. இவர் முன்

னளித்த நியாயப் பிரமாணம் எவரையும் உள்விடாமல், திரைக்குப்புறம்பே தள்ளிற்று. தேவநீதிக்கிசைய ஒருவரும் மீட்கப்படுதல் கூடாத காரியமாம். இந்தத் திரையானது, பெரிய பஸ்காதினமாகிய பெரிய வெள்ளிக்கிழமையன்று தேவகோபாக்கினை மேல்நின்று இயேசுவின் தலைமேல் விழுந்த உடனேயே, மேல்தொடங்கிக் கீழ்வரையும் கிழிந்தது. எசாயா 53: 5; மத். 27: 51. இயேசு அடிக்கப்பட்டதினிமித்தம் நாம் தேவனிடம் சேரும் சிலாக்கியம் பெற்றோம். எபி. 10:19-22.

77. உடன்படிக்கைப் பெட்டியும் இயேசுவே. 2 கொரி. 5: 19. தேவன் இயேசுவுக்குள்ளிருந்துகொண்டு, உலகத்தைத் தம்முடன் ஐக்கியப்படுத்தினார். இயேசுவில்மட்டும் தான் மனுஷீகமும் தெய்வீகமும் சந்திக்கக்கூடியது. யாத். 25: 21, 22. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரும், ஜாமீனும் இவரே. I தீமோ. 2: 5.

78. பெட்டிக்குள் அடக்கமாக்கப்பட்டிருந்த கற்பலகைகளும் இவரே. தேவநீதியும் இவரே. 1 கொரி. 1: 31. மன்னாவாகிய ஜீவ அப்பமும், ஆரோனுடைய உயிரற்ற கோலுக்கு உயிர்கொடுத்து, அதைத் துளிர்க்கப்பண்ணினவருமாகிய அவர் சாவுக்கினமான இந்த சரீரத்தையும் உயிர்ப்பிக்கிறவராய் ரோம. 8: 11; உயிர்த்தெழுதலும் யோவா. 11: 25; நித்திய ஜீவனுமாய் 1 யோவா. 5: 20 இருக்கிறார்.

8. உடலுயிர் ஆவியின் அந்நியோந்நிய சார்பு நிலை.

79. தற்காலம் ஓர் பெரிய நகரத்திற்குள்சென்று பார்க்கில், நாடக சாலைகள், படக்காட்சி சாலைகள், விளையாட்டு சாலைகள், வேடிக்கை ஸ்தலங்கள் மிகுதியாயிருக்கும். அதின் ஒரு சிறு சந்துக்குள் கடவுள் வணக்கத்திற்கு வேண்டிய ஒரு சிறு தேவாலயமு மிருக்குமாப்போல், மனித உடலிலும்

கடவுளுக்கேற்ற பாகம் மிக சிறிதுபோல் தோன்றும். இன்னும் விளக்கில், அழிந்துபோகிற உலக காரியங்களிலே தங்கள் காலத்தை செலவுபண்ணுகிற ஏராளமான மனிதரைக் காணக்கூடிய இக்காலத்தில், மெய்யைத் தேடும் உண்மை மனத்தாரைக் காண்பது மிகக் கஷ்டம், நாடகமும் நடிப்பும், களியாட்டும் வெறியும் அதிகப்படும் இப்பூவுலகில் பக்திக்குரியவர்களுக்கு இடமில்லாததுபோல் தோன்றும். மனிதன் பல வீண்காரியங்களில் தனது சமயத்தைப்போக்கி கடவுள் வணக்கத்திற்கு சிறிதே செலவு பண்ணுகிறான்,

80. மனிதன் ஓர் விசேஷித்த பிராணியென்பதை முன் தெளிவாய் விளக்கினோம். ஏதாவது ஒரு பிராணி மரிப்பதைச் சற்று கவனித்துப்பார். அது மண்ணைபே நோக்கி உயிரைவிடும். மனிதனோ இதற்கு மாறாக, எவ்வளவு பெலவீன நிலைமையிலிருந்தாலும் ஆத்திரமாய் எழும்பி, துடித்து மேலே ஏறப்பிரயாசப்பட்டுக் கூடாமல் பதறி விழுந்து உயிர் துறப்பதைக் காண்பாய், இவன் பார்வையே மேலே நோக்கி, மேலே ஏற விரும்புகிறேன் என்று சொன்னாற்போல் சாக்ஷி கூறும், இதற்குக் காரணம், மற்ற மிருகங்களில் எவற்றிற்கும் கிடையாத, தெய்வீகத்துவம் மனிதனுக்குள் அடக்கமாயிருப்பதினாலேயாம், சங். 8: 2,6; யோவா. 10: 34.

81. ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பாகங்களில் மகா பரிசுத்த ஸ்தலம் ஓர் கடைசியிலும் (மேற்கு), பிராகாரம் கீழ் கடைசியிலும், பரிசுத்த ஸ்தலம் மத்தியிலும் நின்றாற்போல், உனக்குள் ஜீவாத்துமா கீழ் கடைசியிலும், அந்தராத்துமா மேல் கடைசியிலும், பரமாத்துமா மத்தியிலும் அமைதல்வேண்டும், ஆகிலும், மகா பரிசுத்த ஸ்தலமும, பரிசுத்த ஸ்தலமும், பிராகார வேலிக்குட்பட்டிருந்ததுபோல, ஆவியும் ஆத்துமாவும் உனது சரீரத்துக்குள்ளேயே தங்கி நிற்கவேண்டும். அதில் ஆவி கடவுளுக்குரியதாதலால், அதை மேலே காட்டலாகும்.

9. மனித உடலுக்குள் ஆவி, ஆத்துமா இவைகளின் இருப்பிடம்.

82. அருள்வேதம் மூன்று உலகங்களைப்பற்றியும் கூறுகிறது. யாத். 20 : 4. மேலோகம், பூலோகம், கீழ் லோகம். பரலோகம், பூலோகம், பாதாளலோகம். சந்தேகத்துக்குள்ளான மனிதன் இதை ஒருவேளை நம்பாமல் அலக்ஷியம் செய்துவிடுவான் என்று எண்ணி, இவன் போக்குச் சொல்லக்கூடாதபடி இவனுக்குள்ளேயே அவைகளின் சாயலையும் உண்டாக்கியிருக்கிறார். பிர. 3 : 11. அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்து, உலகத்தையும் அவர்கள் (மனிதர்) உள்ளத்திலே வைத்திருக்கிறார். ஆயினும் திரித்துவத்தை யறியாத மனிதன் இதின் அந்தரங்கத்தையும் அறியவில்லை.

83. தேவன் பரலோகத்திலிருக்கிறவர் சங். 115: 3. சாத்தான் பாதாளத்தில் கிடக்கிறான் ஏசாயா. 14:15. மனிதன் உலகத்தில் நடமாடுகிறான் அப்.17-26. இவைகளின் நிழலாட்டமாக, ஆவிஸ்தானம் பரலோகத்திற்கும், சரீரஸ்தானம் பாதாளத்திற்கும், ஆத்துமஸ்தானம் பூவுலகத்திற்கும் மாதிரியாய் நிற்கின்றன. இதில் ஆவிஸ்தானம் சிரசு. அதிலும் நாசியின் அடியைப்பற்றி பல விசேஷ எண்ணங்கள் பல வகுப்பாரும் கொண்டுவருகின்றனர். எரே. 17 : 12. இதற்கு பரிசுத்தஸ்தானம் என்றும் பெயருண்டு. சீயோன் என்னும் வார்த்தை குறிப்பிடும் ஆவிக்குரிய இடமும் மனிதனுக்குள் இதுவே. சங். 132 : 13, 14. 'தேவன் தந்த ஆவி என் நாசியில்' என்று யோபு. 27 : 2ல் வேதம் கூறுகிறது. ஜீவ சுவாசத்தை (ஆவியை) நாசியில் ஊதினார். ஆதி. 2 : 7.

84. இதற்கு வெளி ஆதாரங்கள் உண்டோ எனப் பார்ப்போம். மனிதர் தங்களுடைய சக்திக்கடங்காத காரியங்களைக் காணும்போது 'கடவுளே' என்று பலமுறையும் சொல்வதுண்டு. அப்படிச்சொல்லுகையில் தங்கள் கைகளை

தலைக்குநேராய் உயர்த்துவதையும், சில வேளைகளில் தலைமேல் அடிப்பதையும் கண்டுவருகிறோம். "உங்கள் கைகளை பரிசுத்தஸ்தலத்திற்கு நேராக எடுத்தெடுங்கள்" சங். 134 : 2 என்பது அக்கால யூதருக்கு எருசலேமைக்குறித்துச் சொன்னது மட்டுமல்ல, ஜெபிக்கையிலும், துதிக்கையிலும், கைகளைத் தலைமேலுயர்த்துங்கள் என்னும் பொருளிலும் வரும். மோசேமலையில் ஏறி, அமலேக்கியரோடே யுத்தம் செய்கையில், கைகளை எடுத்தெடுத்தான் என்பதின் பொருளும் இதுவே.

85. மனிதனில் மகிமைக்குரிய இடம் தலையே. அருமை இரக்ஷகர் ஜெபிக்கையில், அவருடைய பாதங்களல்ல, அவருடைய முகமே சூரியனைப்போல் பிரகாசித்தது மத். 17 : 2 என்று காண்கிறோம். மோசேமலையிலிருந்து இறங்குகையில் அவனுடைய முகம் அப்படியே ஒளிமயமடைந்திருக்கக் கண்டார்கள். யாத். 34: 35. ஸ்தேவானின் மரணவேளை கிட்டக்கிட்ட அவனுடைய மனுஷீகம் மாறி தேவரூபமாகிய தேவதூத சாயல் காணப்பட்டது அவன் முகத்திலேயே அப். 6 : 15. தேவன் மனிதனில் தமக்குரிய இடமாகிய ஆவிஸ்தானத்தையே மகிமைப்படுத்தி வருகிறார் என்று மேற்கூறியவைகளின்று காண்கிறோம்.

86. தேவ ஆவியைச்சிரசில் பெற்ற யோபு அதை யிட்டு, 'தன் தலையின் கிரீடம்' என்றான். யோபு. 19 : 9. சங்கீதக்காரனும் சங். 132 : 18. அப்படியே "கிரீடம்" என்றான். இரக்ஷகர் அதை "உன்னிலுள்ள வெளிச்சம்" லூக். 11 : 35 என்றார். பவுல் இதையே "மீட்கப்படும் நாளுக்கென்று பெற்ற முத்திரை" எபே. 4: 30 என்றார். ஞானி இதை 'தீபம்' என்றார். நீதி. 20: 27.

87. பூலோகத்திற்கு மாதிரியான ஆத்துமஸ்தானத்தைப்பார்ப்போம். கழுத்திற்குக் கீழ்ப்பட்ட ஒரு பாகத்திற்கே இப்பெயர் தகும். "நான்," "என்" என்றிவ்வாறு உரிமைபாராட்டக்கூடிய ஆத்துமா, இவ்விடத்தில்

இருப்பதினாலேயாக்கும், மனிதன் மாரடித்துப்புலம்பி, 'என் பிள்ளை' 'என் பணம்,' 'நான் விடுவேனா' என்று சொல்லும்போதெல்லாம் தன் கைகளை நெஞ்சில் வைக்கிறான், லூக். 18: 13; 23: 48.

88. பஞ்சபூதியங்களாலமைக்கப்பட்டிருக்கும் உலகத்தினின்று உட்செல்லும் ஆகாரங்கள் எத்தன்மையதாயினும் இவ்வைந்து பூதியங்களின் சேர்க்கையாகவே யிருக்கும். இவற்றைச் சீரணிப்பிக்க, உள்ளுலகம் என்று அழைக்கப்படும் பஞ்ச கருவிகள் மனிதனுக்குள் உள. பிருதுவிக்கு மண்ணீரலும், தண்ணீருக்கு குண்டிக்காய்களும், (Kidneys) நெருப்புக்கு பித்தும் (bile), வாயுவுக்கு நுரையீரலும் (lungs), ஆகாயத்துக்கு கரூஈரலும், வயிற்றுக்கு மேற்பட்டதும், கழுத்திற்குக்கீழ்ப்பட்டதுமாகிய நடு பாகத்திலேயே அமைக்கப்பட்டிருப்பதுதான் பிர. 3: 11ல் சாலொமோன் 'உலகம்' மனிதனுக்குள் என்று சொல்லக் காரணம்.

89. இன்னும் பாதாளலோகத்தைக் குறிப்பிடும் பிரகாரமாகிய சரீரஸ்தானம் எது? திருப்தியடையாத ஓரிடமே பாதாளம் நீதி. 30: 16. அதில் செல்லும் பொருட்களையெல்லாம் சங்கரிப்பதே அதின் தொழில். அது வயிற்றின் கீழ்ப் பாகமேயாம். 'வயிறே, உன்னோடு வாழ்தலரிது' என்று முன்னோர் கூறினர்.

ஒரு நாளுணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய்
ஒருநாளும் என் நோய் அறியாய்
இடும்பைகூர் என் வயிறே
உன்னோடு வாழ்தலரிது.' இதையிட்டே பவுலும் "சரீரமுயற்சி அற்பப் பிரயோசனமுள்ளது" என்கிறார், 1 தீமோ. 4: 8.

90. இனிமேல் ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றின் தனித்தனி தொழில்களையும் மனிதனை அவர்கள் தாக்கும்

விதத்தையும் கவனிப்போம். தெய்வசிந்தையுள்ள பக்தரை யும், மிருக்குணமுள்ள துஷ்டரையும் உலகத்தில் நாம் காண் கிறோம். காரணம் தேடுவோம்.

10. மனிதனைத் தீமை தாக்கிய வரலாறு

91. மண்ணான சரீரத்துக்குள் தேவ ஆவியாகிய தேவசக்தி பிரவேசிக்கவும் ஆத்துமா ஆதி. 2: 7 உருவா கிறது. ஆதலால் மனிதனில் ஆவிக்கிசையும் தன்மையும், மண்ணை நாடும் மாம்ச சிந்தையும் ஒரே நேரத்தில் காணப் படும். ஆவி தேவனிடமிருந்து கிடைத்தபடியால் அது எப்போதும் தேவநாட்டமுடையது. நீதி. 20: 27ல் காண் கிறபடி அது எல்லாவற்றையும் ஆராய்ந்துபார்க்கும். அது கடவுளுக்குரியவைகளை எப்போதும் தேடும். எந்தப் பிர பல துஷ்டனிடமும் வேளாவேளைகளில் தெய்வநாட்டம் காணப்படக் காரணம் அதுவேயாகும். மனிதனுக்குள் தேவஞானத்தைப் புகட்டக்கூடிய பாகத்திற்கே (God-conscious part of Man) ஆவி என்று பெயர்.

92. சரீரத்துக்கு மிருகலக்ஷணங்களேயுள. போஜன, போக, விஸ்றம் (ஊண், உறக்கம், பலுகிப்பெருகுதல்) என் னும் மூன்றுதொழில்களை மட்டுமே, மிருகமும் மற்ற தாபர வஸ்துக்களும் இடையறுமல் செய்துவரக்காண்கிறோம். சரீ ரத்துக்கு உலகத்தை யறியக்கூடிய (World-conscious part of Man) அறிவுமட்டும்தான் உண்டு.

93. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஆத்துமாவா னது சுயேச்சைபெற்று தன்னறிவடையக்கூடிய சத்துவ முடையதாய் விருப்பு, வெறுப்பு முதலிய குணங்கள் அமைந்து நிற்கிறது. மனிதனுக்குள் தன்னைப்பற்றிய காரி யங்களை உணர்த்தக்கூடியதே (Self-conscious part of Man) ஆத்துமாவாகும்.

94. தேவபுத்திரர், மனிதபுத்திரர் என்று இருவகுப் பாரைப்பற்றி அருள்வேதத்தின் சிற்சில இடங்களில் (ஆதி. 6; 1-5) வாசிக்கிறோம். இவர்கள் யார்? தீவினை நீங்கிய

உடலின் சாயலையும், தீமையில் விருப்பின்றி, நன்மையையே நாடும் சரீரத்தையும், ஆத்துமா அடையும்போது, மனிதன் 'ஆவிக்குரியவன்' என்றும், இதற்கெதிரிடையாக தீமையை விரும்பும் உடம்பை நல்லதென்றெண்ணுகிற ஆத்துமாவை யுடையோன், மனிதபுத்திரனாகிய 'மாம்சத்துக்குரியவன்' என்றும் அழைக்கப்படுகிறான். ரோ. 8: 4-12.

95. தண்ணீர் மூன்று ரூபத்தில் உலகில் இருக்கக் கூடும். சாமானிய நிலையில் தண்ணீராகவும், சூடாக்கப்படும் போது, முன்னைவிட ஆயிரமடங்கு அதிக இடத்தை நிரப்பி நிற்கக்கூடிய நீராவியாகவும், குளிரில் கற்போன்ற பனிக் கட்டியாகவும் மாறும். ஆத்துமாவும் இப்படியே உயர்நிலை யுடையக்கூடிய ஆவியைச்சாரும்போது 'தேவபுத்திரனாக வும்,' கீழ்நிலையான சரீர இச்சைகளுக் கிணங்குகையில் 'மனிதபுத்திரனாகவும்' இரண்டிலும் சார்பில்லாமல் தனிச் சீவியாகும்போது 'ஜென்மபுத்திரனாகவும்' பேதப்பட்டு நிற்கும்.

96. பரமான்மா ஜீவான்மாவின்மேல் ஆட்சிசெய்யும் போது உயர்நிலையையும், ஜீவான்மாவுக்கிசையும்போது கீழ் நிலையையும், அந்தராத்துமாவைச்சாரும்போது பரமநிலை யையும் பெறுகின்றது. ஆதலின், படைப்பில் ஈசன் ஆத் துமாவைநோக்கி ஆதி. 1 : 28, நன்மைச்செய்கைகளால் உனதுளத்தை நிரப்பி, உனது சரீரத்தில் இருக்கக்கூடிய தீவினையாகிய பறவேச்சைகளையும், மத்ஸ்வேச்சைகளையும், மிருகேச்சைகளையும் முற்றிலும் அடக்கி, அரசநிலைமையை விட்டு அடிமைநிலைமைக்கு வராது, உன்னைப்பாதுகாத்துக் கொண்டால், எனது அருள்பெற்று சிரஞ்சீவியாய் வாழுவாய் என்றார்.

97. தீமையே உருவெடுத்த தீங்கன் மனிதன் அடை யக்கூடிய பரமபதவியை யடையாது அவனைத் தனக்கு பங் காளியாக்க முயன்று இவ்வுயர் வழியைத் தாறுமாறாக்கி விட்டான். மேல்நிலைமைக்கு, ஆவிக்குள் தூய்மையும், ஆத்

துமாவுக்குள் தன்னை ஒறுத்தலும், சரீரத்தில் கீழ்ப்படிதலும் காணப்படல் வேண்டும். (இவைகளைப்பின் நன்றாய் விளக்குவோம்). தீங்கனோ ஆவிக்குள் மாயையையும் (பொய்), ஆத்துமாவில் இச்சையையும் (காமம்), சரீரத்தில் மீறுதல், அகங்கரித்தல் ஆகிய (ஆணவத்தை)யும் ஊட்டிவிட்டான்.

98. அழியா ஜீவனை அளிக்கும் ஜீவ விருக்ஷத்தின் கனியைப்புசித்து மனிதன் என்றும் சிரஞ்சீவியாய் நித்திய ஜீவனை அடைந்து வாழவேண்டு மென்பதே கடவுளது நோக்கம். அசலுக்குப்பதிலாய் இமிற்றேஷனை (imitation) வாங்கி, ஏமாந்துநடக்கும், சில தற்காலமனிதரைப் போல, ஆதிமனிதர் தங்கள் ஆவிக்குள் சத்தியத்தைக்காக்க மனமற்று, பொய்யன் வசம் சிக்கி, 'சாகவே சாவாய்' ஆதி. 2: 17 என்னும் உண்மையைக் கைவிட்டு, 'சாகவே சாவதில்லை' ஆதி. 3: 4 என்னும் பொய்யறிவையறிந்ததினிமித்தம் தங்கள் ஆவிக்குள் மாயையை அடைந்தார்கள். இதினிமித்தமே பிற்காலங்களில் 'நன்மை வடிவம்' உலகில் 'இயேசுவென்னும்' பெயராலுதித்து, தப்பிநடக்கும் மாயாவாதிகளைநோக்கி, "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்." பொய்க்கு விலகி, "சத்தியத்தை அறிந்து" களிப்பீர்கள். அப்பொழுதுமட்டும் உங்களுக்கு அடிமைத்தனம் மாறி, சுயராஜ்யம் ஆகிய விடுதலைகிடைக்கும் யோவா. 8 : 31-32 எனக்கூறினர்.

99. பாசமற்ற நிலையில், ஆத்துமா 'எல்லாம் இறைவனுக்கே, எனக்கொன்றும் வேண்டியதில்லை' என்று சொல்லவேண்டும். தீங்கன் தீமையை மனிதனுக்குள் நாட்ட எண்ணி, தேவன் தமக்கென்று மீத்துவைத்த மரத்தையும், அதின் கனியையும், ஆத்துமாவுக்குள் இச்சிக்கத்தூண்டினதினிமித்தம் 'காமம்' ஆகிய பாவம் ஆத்துமாவைத் தாக்கினது. மனுக்குலம் முழுவதிலும் இத்தீமையைக்கண்ட இயேசு "நீங்கள் உங்கள் பிதாவின் (ஆவிக்குள் மாயையை ஊட்டிய தீங்கனின்) இச்சைப்படியெல்லாம் செய்து, யோவா

8. 44, உங்களுக்கே தீங்கை வருவித்துக்கொள்ளுகிறீர்களென்று கண்டித்தார்.

100. ஆவிக்குள் அறியாமையாகிய மாயையும், ஆத்துமாவுக்குள் இச்சையாகிய காமமும் சிக்கியவுடன், சரீரம் தனது கீழ்ப்படிதலாகிய நிலை மீறி, தொடாதே என்பதைக் கையினாலும், பாராதே என்பதைக் கண்ணினாலும், புசியாதே என்பதை வாயினாலும் மீறி, தனக்குள் அகங்காரத்தைக்கொண்டு, தேவனைப்போலவே எதிர்த்துநின்று ஆணவமாகிய மலத்தில் விழுந்து சிக்கிற்று. ஆதி. 3: 6.

101. மனிதனுக்குள் ஆணவம், காமம், மாயம் ஆகிய மும்மலமும் சரீரம், ஆத்துமா, ஆவியாகிய மூன்றையும் தாக்கிய விதத்தைக் கவனித்தோம்.

102. தனக்குரியதல்லாததை, தனக்கென்று சொந்தமாக்கியவுடனே, ஆத்துமா, தேவமகிமையற்றது. ரோ. 3: 23. அம்மட்டுமல்ல. ஆதி. 1: 28ல், 'ஆண்டுகொள்ளுங்கள்' என்னும் அரசநிலைமை, இச்சையால் ஆளப்படுதலாகிய அடிமை நிலைமையாய் மாறவும், ஆவிக்குள்ளிருந்த முன்னிலைமையின் ஞானம், போலி யறிவாகிய அஞ்ஞானமாக மாறிற்று. இதினால் மனிதன் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறவனானான். யோவா. 3: 19, 20.

103. "நன்மையைக்கைவிட்டு, தீமையை நாடுபவனுடைய வெளிச்சம் அந்தகாரப்படும். அவனை நல்வழியில் நடத்தின விளக்கு அணைந்துபோம்." யோபு. 18 : 5, 6. தீமைக்குமுன் மனுஷனை சந்தோஷிப்பித்துக்கொண்டிருந்த வெளிச்சம் பாவத்தால் இருளாகிவிடும். நீதி. 13· 9. துன்மார்க்கனுடைய ஒளி அவனைவிட்டு எடுபடும் யோபு. 38: 15. ஆத்துமஸ்தானத்திலிருந்து ஆவிஸ்தானத்திற்கு இவன் தாண்டக்கூடாதபடி இடையில் ஓர் வேலி ஏற்படும் யோபு. யோபு. 19 : 8. பாவிகளுடைய வழிகள் முற்றிலும் இருளடையும். மனிதனின் சிரசுக்கு அலங்காரமாயிருந்த

கிரீடம் அவனைவிட்டு நீங்கும். யோபு. 19 : 9. அடிமை நிலைமைக்கு அரச கிரீடத்தை எதிர்பாக்க என்ன நியாயமுண்டு ?

104. இவனுடைய சிந்தைகள் பரத்துக்கடுத்தவைகளாயிராமல் பூமிக்குரியவைகளா யிருக்கிறபடியால் இவனுடைய மகிமை இலச்சையாய் மாறும். பிலி, 3: 19. ஜீவனைப்பற்றிக்கொண்டிருக்க அவனுக்கு மனதில்லாமற் போகிறபடியால் அவனுடைய வழிகள் மரணத்தையே நோக்கும். உலகமாயையாகிய (அழிந்துபோகிற பூமி) பெண்ணை இவன் விரும்பி நேசிப்பதால், முடிவில் அவளுடனேயே அழிவாகிய மரணத்தையும் தேடிக்கொள்கிறான்.

105. சிறந்த பாதையாகிய ஜீவவழியை விட்டுவிட்டபடியால் மரணமே இவனுக்குப்பங்காய் நிற்கிறது. 'ஜீவவழி நெருக்கம்' என்பதை இவன் மறவாமலிருக்கத்தக்கதாக ஆத்துமஸ்தானத்துக்கும் ஆவிஸ்தானத்துக்கும் இடையில் 'மரண இருளின் பள்ளத்தாக்காகிய' நெருக்கமான கழுத்தைக் கவனியாது, தா, தா. என்று வாய்பிளந்து நிற்கும் விரிவான வயிற்றிற்கு நேராய்ப் போகும் வாசலே, இவன் கண்களைப் பகட்டியபடியால் வயிற்றையே தெய்வமாகக் கொண்டு முடிவில் மாம்சசிந்தைக்கிசைய மரணத்தை வருவித்துக்கொள்ளுகிறான். ரோ. 8: 6 ; பிலி. 3: 19.

106. "உபத்திரவங்களின்மூலமாய் மட்டுந்தான்" அப். 14: 22 "பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கக் கூடுமென்பதை மறந்து, 'நெருக்கமான பாதை' நடத்திச் செல்கிற "ஜீவனை" நாட மனமற்று மத். 7: 13, 'கேட்டுக்குப்போகும்' விரிவான பாதையைத் தெரிந்ததினிமித்தம் பாழாக விடப்பட்ட ஜீவபாதையில் முள்ளும் கொறுக்கையும் முளைத்து, சம பரப்புநிலை மாறி மேடு, பள்ளம், கோணல், கரடு முரடு ஆகிய பல ஒழுங்கீனங்கள்பற்றியதினிமித்தம் இந்த வழியில் ஜீவனுக்குரியவர் நடக்கமுடியாது. 'பாதையைச் செவ்வை பண்ணுங்கள்' என்று வனாந்தரத்திலே

தானே கூப்பிட்டுச்சொல்லுகிற ஒரு சத்தம் பிறந்தது. மாற்கு. 1 : 3 ; ஏசாயா. 40 : 3.

11. ஆவி, ஜீவன், உடம்பு இவற்றை ஆத்துமா தாக்குதல்.

107. உடல், உயிர், ஆவி இவைகளுக்கிடையில் இருக்கும் நெருங்கிய சம்பந்தங்களைக் காண முயல்வோம். சரீரத்தின் செய்கைகள் ஒவ்வொன்றிற்கும் ஆத்துமாவின் மனமும், ஆவியின் அறிவும் மெத்த அவசியம். மனமில்லாத இடத்தில் செய்கையைக் காண்பது கூடாதகாரியம். மனம் உடலைப்பற்றியதல்லவென்பதை நாமறிவோம். அது தன்னறிவுடைய ஆத்துமாவைப்பற்றினது.

108. ஆன்மதத்துவம் ஐந்தென்பர். அவையாவன : புத்தி, சித்தம், சுயத்வம், தேவத்வம், சுருதிஞானம். சுருக்கிக்கூறில் இவையாவும் ‘free will’ என ஆங்கிலங்கூறும் விருப்பு, வெறுப்பு முதலியவற்றிற்குக் காரணமாகிய ‘சுய சித்தம்’ என்னும் ஓர் பதத்துக்குள் அமையும்.

109. அந்தராத்துமா என்றழைக்கப்படும் ஆவியின் தன்மைகள் தெய்வஞானத்திற்கடுத்த விவேகம், ஞானம், பரிசுத்தம், சத்தியம் என்பவையாம். இவற்றில் சத்தியம் முக்கியமாகையால் ஆவிக்குள் எப்போதும் தூய்மை காணப்படல்வேண்டும். அங்கு மாயம் பற்றும்போது சகலமும் இருளடையும். மனிதனை ஆண்டு நடத்தி, அவனுக்குரியவைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்வது அவனுக்குள்ளிருக்கும் ஆவியேயாம் 1 கொரி 2:11 ஆதலின் அந்த தீபம் இருளடையும்போது அது ஆன்மதத்துவங்களையும் நிச்சயமாகவே தொடும். ஆதலின் ஆவிக்குள் ஞானத்தைக் காத்துக் கொள்ளல்வேண்டும். அங்கு ஞானமில்லாதவனே அஞ்ஞானியாகிறான்.

110. ஆன்மாவின் உயிரே ஆவியாகும். உடலை விட்டு உயிர் பிரியவும் மனிதன் பிணமாகுமாப்போல், ஆன்மாவை விட்டு ஆவிபிரியும்போது, ஆன்மா மரணத்திற்குள்ளாகி

றது. ஈசனை அறியும் அறிவே ஜீவன். நித்தியமாய் அறிந்து கொண்டுபோவதே நித்திய ஜீவன் யோவா. 17:3. ஆவிக்குள் ஞானத்தையடைந்தவன் முக்தன். அங்கு இயேசுவாகிய ஞானம். நீதி. 8. இல்லையேல், தேவகுமாரனில்லாதவன் ஜீவனையும் இழந்தவன் 1யோவா. 5:12.

111. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். உள்ளான மனிதனின் தூண்டுதலினால் சரீரம் கிரியைசெய்யும். நல்ல மனிதன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து, நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். . . . பொல்லாதவனும். . . , . பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் " மத். 12:34, 35. பேசுகிறது வாயானாலும், அப்பேச்சைத் தூண்டுகிறது இருதயமென்பதை இவ்வாக்கியம் நன்கு விளக்குகிறது. ஆதலால் கடைசி நாளில் இருதயத்தின் நினைவு மட்டுமல்ல, வாயின் வார்த்தைகளையும் நியாயத்திலே கொண்டுவருவார் மத். 12: 36, 37; 1 கொரி. 4:5. இருதயத்திற்கும் (ஆத்துமாவைப்பற்றியது) சரீரத்திற்கும் நெருங்கிய ஐக்கியமுண்டு.

112. கோபம், விருப்பு, வெறுப்பு, அனுதாபம், பசி, தாகம், திருப்தி, சந்தோஷம், துக்கம் முதலியவற்றைக் காட்ட முகரூபம் என்னமாய் மாறுதலடைகிறதென்பதை தினசரி அனுபோகத்தில் காண்கிறோமாயினும், இவைகளைத் தூண்டும் சத்துவம் உடலைப்பற்றியதாயிருக்கவில்லை என்பதை யறியும்போது, உடலுயிர்களின் அந்நியோந்நியசார்பு நிலையைத் தெளிவாய்க் காணக்கூடும்.

113. பசித்தவேளை ஆகாரத்துக்கு முன்னிருக்க, தனக்கருமையான ஒருவன் இறந்தானென்னும் தந்திசெய்தி கையில்கிட்ட, சாப்பிடக்கூடாமல் இவனை மயக்கும் வல்லமை சரீரத்திற்குண்டோ? சரீரத்தின் செய்கை ஆத்துமாவைத் தாக்குகிறதில்லையென்று எண்ணுபவர்களுக்கு அவர்களுடைய மதியீனத்தின்படி ஒரு உத்தரவு கொடுக்கவேண்டும்.

114. 'ஆத்துமா' எல்லா வஸ்துக்களிலும் கலந்திருக்கிறதென்றும், அந்த வஸ்துக்கள் ஆத்துமாவைத் தாக்கா

மலிருக்கிறதென்றும், நினைக்கும் மனிதன் பாவ புண்ணிய வித்தியாசம் அறியாதவனாய் மாயையினால் சிக்கி, வழி தெரியாமல் கலங்கி, வெறும் வெள்ளெலும்பைக்கடித்த நாய் அவ்வெலும்பில் எவ்வித சத்துமில்லையாயினும் மறுபடியும் மறுபடியும் அதைக்கடித்துத் தன் வாயைக் காயப்படுத்தி அதினின்று புறப்படும் இரத்தத்தைக் குடித்து மமதைகொள்ளுமாப்போல், தனது பொய்யறிவால் தனக்கும், ஏனையோருக்கும், ஜனசமூகத்திற்கும் நேரிடும் கெடுதியை யுணராமல் தனது பைத்தியத்தை உண்மையென நம்பி, முடிவில் தன்னையும் தன்னைப் பின்பற்றும் சபையாரையும், படுகுழியில் தள்ளுகிறவனாய்க் காணப்படுவான்.

115. மேற்கூறியபடி நினைக்கும் மனிதனிடம் இக்கேள்வியைக் கேட்போம். ஒருவனுக்கு ஒரு மனைவியும் இரு பெண்மக்களும் உண்டென்று வைத்துக்கொள்வோம், அவர்கள் சரீரத்தினுள் ஆத்துமா இருக்கினும், சரீரத்துக்கு நேரிடும் எந்த செய்கையும் ஆத்துமாவைப் பற்றுகிறதில்லையென்று சொன்னால், அவர்கள் சரீரத்தைமட்டும் தாக்குகிறதென்று சொல்லும் ஓர் கற்பழித்தல் என்னும் பாதகம் அவன் கண்முன் நடந்தால் அவன் பொறுத்திருப்பானோ? அவன் அப்படிப் பொறுக்கலாம் என்று ஓர்வேளை சொல்லக்கூடுமானால் அப்படிப்பட்டவனை மனிதவகுப்பிலா மிருகவகுப்பிலா சேர்ப்பது?

116. ஆதியாகமம் 34-ம் அதிகாரத்தை வாசிக்கும் எம்மனிதனும் யாக்கோபின் ஆண்மக்களோடு அநுதாபம் காட்டாமலிருக்கக்கூடுமோ? சரீரத்தைத் தொடும் காரியங்கள் ஆத்துமாவைத் தாக்குகிறதில்லையென்று எண்ணி, உலகத்தார் முழுவதும் ஜீவித்தால் உலகத்தின் நிலை எப்படியிருக்கும்?

117. கார்பன் (carbon paper) கடுதாசியென்னும் கரித்தாளை வெள்ளைத் தாளின்மேல்வைத்து ஒரு குச்சால் அதின்மேல் என்ன எழுத்தெழுதினும், யாவும் வெள்ளைத் தாளில் பதிந்து அதைக் கறைப்படுத்துமாப்போல் சரீரம்

செய்யும் எந்த செய்கையும் உடனுக்குடனேயே ஆத்துமா வைத் தாக்குகிறதால் ஏதேனின் முதல் மனுஷனாகிய ஆதாம் தேவரூபமும் தேவசாயலும் பொருந்தினவனாயிருந் தும் ஒரேசெய்கையினால் அவ்வழகிய நிலையை இழந்து வெறும் மண்ணானான் ஆதி. 1:26,27;3:19.

118. ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கிடையிலிருக்கும் சம்பந்தம் இவ்வளவு நெருக்கமானபடியால் சகலமும் இயேசு இரக்ஷகர் வரும்போது குற்றமற்றதாய்க் காக்கப்படவேண்டு மாம் 1 தெச. 5:23. "ஆதாம் என்னும் ஒரே மனிதனு டைய கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல" ரோ. 5:19, மனிதனின் முக்கூறுகளில் ஒன்றின் மீறுதல் சகலத்தையும் கறைப்படுத்துகிறதென்பதை அறிக.

12. பாவத்தின் கேடுதீ

119. ஆதாமின் (மனிதனின்) ஆத்துமாவாகிய தோட்டத்தில் படபடப்பு, ஆத்திரப்புத்தி முதலிய மத்தி யான சூரியனாவது, சோம்பல், நிர்விசாரமாகிய நித்திரை யாவது இல்லாதிருக்கையில், பகலின் குளிர்ச்சியான வேளை யில் ஆத்தும நேசராகிய கர்த்தர் உன். 7:12; நீதி. 8:17; ஆதி. 3:8 உலாவ வருவார். ஆனதுபற்றியே அத்தோட் டத்தில், நித்திய ஜீவகரையில் சேர்க்கும் ஜீவவிருக்ஷமும், படுகுழிக்கிழுக்கும் நச்சுமரமும் நாட்டப்பட்டிருந்தது.

120. புறாப்போன்ற பரிசுத்தத்தைமட்டும் நாடும் மேலோக ஆவி இருதயத்தின்மேல் நிழலிடுமானால், அப் பொழுது உன்னதத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து 'இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று சாக்ஷிகூறும். மனிதன் ஆவிக் கிசைய நடக்கையில் ஜீவவிருக்ஷத்தின் கனியைப் புசிக்கிறவ னாகிறான். மீறுதலுக்கு நேராய் வழிநடத்தக்கூடிய நச்சு மரமும் இவனுக்குள்ளேயே இருப்பினும் இவன் அதில் சாயாது தன்னைக் காத்துக்கொள்ளல் கூடுமாதலால் இவ னது நிலமை மிக்க சிரேஷ்டமானதே.

121. மனிதன் நன்மையை விரும்பாமல் தீமையையே விரும்பியபடியால் ஜீவவிருக்ஷம் இவனுக் கெட்டாதபடியும், தனது தீவினையின் கொடுமையை இவன் உணரத்தக்கதாக அதை மறுபடி பறித்துப் புசிக்கவேண்டுமென்று விரும்பும் போதெல்லாம், இவனுடைய அபாத்திரத்தன்மையையும் தேவநீதியையும் உணர்த்தக்கூடிய அரூபிகள் வீசிக்கொண்டிருக்கும் சுடரொளிப் பட்டயத்தைப் பிடித்தவர்களாய் நிற்பதை தோட்டத்தின் வாசலிலே காண்பான் ஆதி. 3:24.

122. ஆவிக்கிசையும் சிந்தையில் நடக்கவேண்டிய மனிதன் பாவத்தினால் மாம்சசிந்தைக் கிசைந்தானென்பதைக் கண்டோம். ஆத்துமாவுக்குக் கீழ்ப்படிந்து ஆத்துமாவையே நோக்கிக்கொண்டிருக்கவேண்டிய சரீரம், உலகத்தை நோக்கியது. ஆவியை நோக்கவேண்டிய ஆத்துமா, உடலைநோக்கி, அதற்குக் கீழ்ப்படிந்தது. தேவனைச் சேரவேண்டிய ஆவி, ஆத்துமாவைச்சார்ந்தது. சரீரத்தால் ஆளப்படவேண்டிய உலகம் சரீரத்தை அடிமையாக்கிற்று.

123. பழத்தை ஆண்டு அடக்கவேண்டிய கண், கை, வாய் முதலிய மூன்றும் பழத்தின் அழகால் (பகட்டால்) ஏமாற்றப்பட்டுப் போனது. உள்ளான மனிதன் தனக்குப் பாத்தியதை இல்லாத பொருளை இச்சித்து, இன்னொருவருடைய (கடவுளுடைய) பொருளைத் தன்னுடையதாகப் பாவித்தான். 'புத்தியைத் தெளிவிக்கும்' என்று எண்ணிய பேதைகள், புத்தி அந்தகாரப்பட்டதென்று கண்டார்கள். 'தேவர்களைப்போல் இருக்க' எண்ணியவன், தேவமகிமையற்று, வெறும் மாமிசபிண்டமானான்.

124. ஆவிக்குள் மாயை (பேதமை) சிக்கியதால், உலகத்தில் நேரிட்டிருக்கும் கெடுதிகளை உற்றுப்பார். "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினால் வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" ரோ. 1:21.

125. "அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும், பயித்தியக்காரராகி, அழிவற்ற தேவ மகிமைக்கு" ஈடாய், அவரை மனுஷர், மாடு, பறவை முதலிய சாயலுக்கொப்பிட்டு, சொரூபங்களைப்பண்ணி, தூக்கிச்சுமந்து வீண்வழி செல்லுகிறார்கள். ரோ. 1:23.

126. "காட்டில் ஒரு மரத்தை வெட்டி, தச்சன் கையாடுகிற வாச்சியால்பண்ணி, வெள்ளி, பொன், இரத்தினம் முதலியவற்றால் அதை அலங்கரித்து, அது விழுந்து விடாதபடி ஆணிகளாலும், சுத்திகளாலும் அதை உறுதிப்படுத்தி, அது நடக்கமாட்டாததினால் தூக்கிச் சுமந்து, தெருவலம் வந்து முடிவில் அதன்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து 'நீ என்னை விடுவி, விக்கினம் தீர்ப்பாய்' யென்று தொழுது தங்கள் நினைவில் வீணராகக் காரணம் ஆவியில் ஞானமில்லாமையே. எரே. 10:2-5.

127. "மனுஷருடைய கைவேலையான விக்கிரகங்கள், வாயிருந்தும் பேசாமலும், கண்ணிருந்தும் காணாமலும், காதிருந்தும் கேளாமலும், மூக்கிருந்தும் முகராமலும், காலிருந்தும் நடவாமலும், தங்கள் தொண்டையால் சத்தமிடாமலும்" சங். 115:4-7 இருப்பினும், ஆவிக்குள் ஞானமற்ற பேதைகள் அவைகளை நோக்கி வேண்டுதல்செய்து, குருட்டுக்கண்ணுக்கு மையிட்டாற்போல் விக்கிரகக்கோயிலை அலங்கரித்து, செவிடன் காதில் சங்கூதினாற்போல் இனிய வாத்தியக்கருவிகளை உபயோகிக்கப் பெரும்பணம் செலவு பண்ணி, முகராத மூக்குக்கு அலரிப்பூ முதலிய பூமாலைகள் சூடி, அசையாத கையைக் கண்டு பயந்து, அதின்முன் கைகட்டி, வாய் பொத்தி, தனது பொருட்களைத் திருடிச் செல்லும் திருடரைப் பிடிக்கக்கூடாதபடி அசைவற்று, கிடந்தவிடம் கிடக்கும் விக்கிரகத்தைச் சேவிப்பதினிமித்தம், தாங்களும் அவைகளைப்போலவே ஆவிக்குரிய, ஆத்தும விஷயங்களில் ஸமர்ணையற்றவர்களாகி, அவைகளை நம்புவதினால் அவைகளுக்கு ஒப்பாகிறார்கள். சங். 115:8.

128. ஆகையால் உண்மையை விசுவாசியாமல் பொய்யில் பிரியம் காட்டுகிற சகலரும், முடிவில் சாபத்திற்குள்ளாகும்பொருட்டு, தேவன்தாமே பேதைகள் அற்புதத்தையும் நூதன காரியங்களையும் கண்டு பிரமிக்கத் தக்கதாக கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள் அனுப்பி, அவர்களைத் தங்கள் போக்கிலேயே விட்டுவிடுவார். 2 தெச. 2: 9-12.

129. தேவனை அறியப்பண்ணும் அறிவாகிய ஆவிக்குள் உண்மையறிவு கெட்டதினிமித்தம் இவர்களின் ஆராதனைகளிலும் பெரிய பேதமைகள் விளங்கும். தங்கள் தெய்வங்களும் தங்களைப்போலவே யிருக்கக்கூடுமென்று நம்பி, அவர்களுக்கு மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் ஏற்படுத்தி திருக்கலியாண முதலிய திருவிழாக்களை யேற்படுத்தி, மனைவிகளிடையில் சண்டை சச்சரவுக ளேற்படுமாப்போல் தேவிகளுக்குள்ளு மேற்படுத்தி, இருவரையும் சேர்த்துவைக்க வருடந்தோறும் பெருஞ் செலவுபண்ணி தேவ அறிவை இழந்து நடக்கிறார்கள்.

130. "அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை" மத். 6:5. "ஆவியோடும், உண்மையோடும்" யோ. 4:24, "அறைவீட்டிற்குள் பிரவேசித்து" யாருங்காணாமல், வெளிச் சத்தம் ஏதும் உட்பிரவேசியாதபடி, தன் ஐம்புலன்களாகிய கதவுகளைப் பூட்டி, முற்றிலும் ஆவிக்குள்ளாகித் தொழவேண்டியதிருக்க, இவர்கள் வீதிகளிலும், தெருக்களிலும், சந்துகளிலும், வெடி, வேட்டு, கொட்டு முதலிய கூச்சலுடனும், தாரை ஊதுவித்து யாவரையும் பார்க்கவைப்பதினிமித்தமும், முழங்கால்களைமட்டும் முடக்கி, தூஷண வார்த்தைகளை விட்டு ஓயாத வாயுடையவர் ஒரு நிமிஷ நேரத்திற்கு மட்டும் ராமா ராமா வெனக்கத்தி, தாங்கள் தேவபூஜை செய்வதாக எண்ணிக்கொள்வது அவர்களது அறிவில் சிக்கிய மாயத்தினால் மட்டுமேயாகும்.

131. மாடு தன் எஜமானைக் கண்டவுடன் அறிந்துகொள்ளவும், நாய் ஒருமுறை தனக்கீந்தவனை மறவாமலிருக்

கவும் சத்துவமுடையதாயிருக்க, ஏசாயா 1:3. இந்த ஜனமோ, தன்னை உண்டுபண்ணின கடவுளை அறியாமற் போனதினிமித்தம், இவர்கள் தேசம் பாழாகி, இவர்கள் கைகளின் பிரயாசத்தை அந்நியர் சாப்பிட்டுத் திருப்தி யடைந்து, இவர்களையோ குற்றுயிராக்கி யிருக்கிறார்கள். ஆயினும் இவர்கள் தங்கள் நகரலான விக்கிரகங்களை விட்டு விலக மனமற்று, நாளுக்கு நாள் விக்கிரகக் கோயில்களை அதிகப்படுத்தி, புதுத் திருவிழாக்கள் ஏற்படுத்தி, ஆடு, கடாய் முதலியவைகளின் இரத்தத்தைச் சிந்தி, தேவனுக்குத் தொண்டு செய்வதாக நினைத்து, மறுபடியும் ஏமாந்து போகிறார்கள். ஏசாயா 1:7-11. இவர்கள் எவ்வளவாய் சுய ராஜ்யம் என்று சத்தமிட்டும், கூட்டம் கூடியும், தங்களைக் கழுவி சுத்திகரியாததினிமித்தமும், தீமை செய்தலைவிட்டு ஓயாமலும், நன்மை செய்யப்படியாமலும், குருட்டு வழியே பின்பற்றினதினிமித்தமும் இவர்கள் பிரபுக்கள் முரடராய் பரிதானத்தை விரும்பி, கைக்கூலியை நாடி, ஏழைகளுக்கு நியாயம் செய்யாமல், தீண்டாஜாதி முதலிய வகுப்புகளேற்படுத்தி, அவர்களைக் காலின்கீழ் மிதிக்கிறதினிமித்தம் இவர்கள் நியாயமும் விசாரிக்கப்படாமலிருக்கிறது. ஏசாயா 1:1-30.

132. இன்னும் இவர்கள் பேதமையினிமித்தம் பொருளைச் சுட்டும் நிழலை நிழலென்றெண்ணாது அதையே பொருளென நம்பி, சடங்காசாரம் குறிப்பிடும் ஆவிக்குரிய உள்ளந்தரங்கங்களை உணராது வெறும் சடங்காசாரங்களைப் பெரிதென்று கொள்ளுகின்றனர். கொலோ 2:16,17.

133. தேவாலயக் கூடாரத்தின் உட்பொருள்களைக் கவனியாது வெறும் பலியையும், கழுவுதலையும், அப்பம் சுட்டுத் திருவிளக்கேற்றி, தூபமிட, வருடமொருமுறை உட்பிரவேசிக்கும் சடங்கையுமட்டுமே அறிவிலிகள் செய்ததினிமித்தம் கடவுள் எரிச்சலுடையோராய், “உங்கள் பலிகளின் திரள் எனக் கென்னத்திற்கு” என்றெச்சரிக்கிறார். ஏசாயா 1:11.

134. 'ஆத்துமாக்கள் பாவமறக் கழுவப்பட்டதாக' தேவசந்நிதியில் பிரவேசிக்கவேண்டியதிருக்க, இவர்களோ தங்கள் உடலைமட்டும் அழுக்கற நீரினுற்கழுவி, ஆடைகளையும் நனைத்து விக்கிரகமுன் சென்று விழுகிறுர்கள்.

135. 'ஏக சிந்தையும்' 'ஏக அன்பும்' 'பரோபகாரமும்' பிலி. 2:2-4 இவர்களில் காணப்படவேண்டியதிருக்க, அவைகளை விட்டுவிட்டு, கூட்டம்கூடி, சுண்டல், புளியோதரை முதலியன சாப்பிட்டுத் திரும்புகிறுர்கள்.

136. 'நற்குணங்களாகிய' நறுமணம் தங்கிய உண்மையானமனதைக் கடவுளுக்குப் படைக்கவேண்டியதிருக்க, இவர்கள் வெறும் பலநிறமும் மணமுமுடைய பூக்களை மாலையாக்கி, காணிக்கையாக்குகிறுர்கள்.

137. 'தனது உருவிழந்து மற்றோர்க்குப் பிரயோஜனமாயிருக்கவேண்டிய 'சுயபரித்தியாக'த்திற்குப் பதிலாக வெறும் கற்பூரத்தைக் கொளுத்தி, ஆலயத்தைமட்டும் புகையாக்கித் திரும்புகின்றனர். மத். 5:12-16, 15 : 24-27.

138. 'துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல், தீமை செய்யவிரும்பும் கால்களை நல்வழியில் படுத்தாது, சங். 1: 1-3 ; கோவில்களையும், வீதிகளையும் மட்டும் வலஞ் சுற்றிவருவதின் நோக்கம் யாதோ ?

139. 'தங்கள் கைகளால்' நற்செய்கைகளைச் செய்யவேண்டியதிருக்க, பொருளை நழுவவிட்டு மலரெடுத்தல், அர்ச்சித்தல்மட்டுமே செய்துவருகிறுர்கள். ஏசாயா. 1 : 16, 17 ; மத். 7 : 21.

140. 'அசுத்தமான பேச்சை'யும், 'புறணி' முதலிய நாவின் சர்ப்பனைகளையும் அகற்றுமலே, ஓயாமல் கடவுள் நாமத்தைப் பல ரூபங்களில் உச்சாடனம் செய்ய முயலுகிறுர்கள்.

141. 'நற்சன சமுகத்தைக்காண மனமற்று, பிறர் தீமையையே காணமுயலும் கண்களை அப்பழக்கங்களைவிட்டு விலக்காமலே 'மேட்டிமையாய்ப்பார்த்தும்' சங். 101. 5; 'வெருட்டிப்பார்த்தும்' ஏசாயா. 3 : 16; 'இச்சையோடே' பார்த்தும் மத். 5 : 28; 'பாவத்தோடே' பார்த்தும் 2 பே. 2: 14; முடிவில் மாயமாய் விக்கிரகத்தையும், தங்கள் மூக்கின் நுனியையும் பார்த்தும் பிறரிடமிருந்து நன்மையான விஷயங்களைக் கேட்பதற்காகவே காது படைக்கப்பட்டிருக்கிறதென்பதை யுணராமல், ஆலயத்தில் அழகிய திருப்புகழைமட்டும்கேட்க விரும்பி பொழுது போக்குகிறார்கள்.

142. "ஆலயத்தில் அழகிய திருப்புகழ் கேட்பது மட்டும் போதாமல், பிறர் கோள் கேட்கக்கூடாதென்றெண்ணுகிறதில்லை. இவ்விதமாய் உட்பொருள் யாவையும்விட்டு வீணான சடங்குகளால் தங்களை பாரப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

143. ஆவிக்குள் பொய்பற்றியவுடனே, ஆத்துமாவுக்குள் இச்சைபற்றி, மனிதன் பேராசையுடையவனாய் மாறுகிறான். எந்த நிலைமையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொள்ளவேண்டியதிருக்க, இவன் எப்பொழுதும் முறுமுறுக்கிறவனாகிறான். தனக்குரிமையில்லாததைத் தனக்கென்று நாடுவதினால் உலகில் பலதீமைகளும் உண்டாகிறது.

144. 'சகல தீமைக்கும் வேராகிய பொருளாசை' இவனைப்பலமாய்த் தாக்கவே, யுத்தங்களும் சண்டைசச்சரவுகளுமேற்படுகிறது. கனகமூலம், காமினிமூலம் என்னும் இருவகைக் காரணங்கள் (பொன், பெண்) பற்றியே, உலகில் சர்வதீங்கும் விளைகின்றன. பலர் இவ்வித இச்சைகளிற் சிக்கி, பக்திநிலை தவறி, அநேக விதமான அவஸ்தைகளைத் தானே இழுத்துவைத்து அவைகளால் சீர்குலைந்து போகிறார்கள். 1 தீமோ. 6 : 10.

145. இப்படிப் பொருளாசையால் நடத்தப்படுகிறவர்கள், பொய், லஞ்சம், அநியாயவட்டி, பரிதானம் முதலிய

பலவித சோதனைகளில் சிக்கி, மற்றநேகரை கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிறார்கள். ஆதலால் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே பெரிய காரியம். 1 திமோ. 6 : 6-10.

146. ஒரு ஆதாமுக்கு ஒரே ஏவாள் என்னும் உயர் நிலைப்பிரமாணத்தை இவர்கள் மீறி அவனவன் அதிகாலையிலே இருட்டோடே எழுந்து, பரஸ்திரீகளைநாடி, அவர்கள் பின்னால் கனைக்கிறான்' எரே. 5: 8.

147. ஆவியும், ஆத்துமாவும், பொய்யிலும், இச்சையிலும் (மாயம், காமம்) சிக்கியைதக்கண்ட வுடல் உடனேயே அவைகளுக்கிசைய மீறுதலாகிய தனது கீழ்ப்படியாமையைக்காட்டுகிறது.

148. இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான காரியங்களைச்செய்ய ஒப்புக்கொடுக்கிறார். ரோ. 1 : 25, 26. ஏனெனில் அவர்கள் தங்களை உண்டுபண்ணின சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், அவருடைய செய்கைகளாகிய கல், மண் இவைகளைச் சேவிக்கத் தலைப்படுகிறார்கள்.

149. விக்கிரகத்தைக் கும்பிடுகிறவன் அதைப்போலவே ஸ்மரணையற்றவனாகிறபடியால் பாவமெது, புண்ணியமெது என்கிற வித்தியாசம் அவனுக்குத் தெரியாமற் போகிறது. ஆதலால் விக்கிரகக்கோவில் எங்கேயுண்டோ அவைகளைச்சுற்றிலும் கற்புநெறி தவறி, சீர்குலைந்து நடக்கும் 'சேலைகட்டிய மாதரை' ஏற்படுத்தி, திருவிழாக் கொண்டாடப்போய், பணத்தையும், மனதையும் தாசிகளிடம் ஒப்புவித்து, குளிக்கப்போய் சேற்றையும் வாரிப் பூசித் திரும்புகிறார்கள்.

150. தேவனை அறியும் அறிவைப்பற்றிக் கொண்டிருக்க, அவர்களுக்கு மனதில்லாதபடியால், தகாத காரியங்களைச் செய்யும்படி, தேவனே அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும், நிறையப்பட்டு,

பொருமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும், நிறைந்தவர்களாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவப்பகைஞருமாய், தூராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாயிருக்கிறார்கள். ரோ. 1:28-31. இதை வாசிப்பவனே! நீ இந்த வகுப்பைச் சேர்ந்தவனா?

151. விக்கிரக ஆராதனை எங்கேயுண்டோ அங்கெல்லாம் விபசாரமும் இருக்கக் காரணம் இதுவே. தேவதாசிப் பிரமாணத்தை நாட்டிலிருந்து அகற்றவேண்டுமானால் முதல் முதல் விக்கிரகங்களை அகற்றல் வேண்டும். மனிதனின் சிரேஷ்டாம்சமாகிய ஆவி, மாயையினின்று விடுவிக்கப்படுமட்டும், சகலமும் சுய இஷ்டத்தினாலேயல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கும். ஆத்துமா மாம்சத்தோடே சேர்ந்து, மனித புத்திரனாகிவிட்ட மதியீனத்தை யுணர்ந்து, மனந்திரும்பி, மத். 3:2 அதிக தூரமில்லாத, தனக்குள்ளேயேயிருக்கும் லூக். 17:21, நீதியும், சமாதானமும், சந்தோஷமுமாகிய பரலோக ராஜ்யத்தை யடைந்து, ஆவிக்கிசைய நடப்பதினால் சரீரத்தின் செய்கைகளை யழித்து கலா. 5:16, கிறிஸ்துவின் ஆவியாகிய தேவ ஆவியை மறுபடியும் பெற்று ரோ. 8:9, தேவ புத்திரராய் வெளிப்படும் வரைக்கும், சிருஷ்டி சம்பந்தமான சரீரப்பற்றுகளின் அடிமைத்தனம் நீங்காமல் யாவும் மாயைக்கே கீழ்ப்பட்டிருக்கும் ரோ. 8:19-21. இதை அதிக தெளிவாய்ப் பின் விளக்குவோம்.

13. பாவம் இருளென்பது.

152. ஆத்துமா மேலோகம் செல்லவேண்டிய ஆவிக்குரிய பாதை பாவத்தினால் இருளடைந்தது என்று முன்

கண்டோம். ஆதலால் இருள் பூமியாகிய ஆத்மஸ்தானத்தையும், காரிருள் அதில் குடியிருந்த ஜனங்களேயும் மூடிற்று ஏசாயா 60:2. மனிதனுடைய பாவம் தேவனுக்கும் அவனுக்குமிடையில் பிரிவினையாகிய சுவரை உண்டுபண்ணிற்று ஏசாயா 59:2. தேவனுடைய சாயலுக்கொப்பாய் மனிதனை வளரச்செய்யும், கிறிஸ்து சமய வெளிச்சம், பாவிகளுக்கு நலமாய் தோன்ருதபடி, இந்த உலக அதிபதியாகிய தீங்கன் யாவருடைய மனதையும் குருடாக்கிப் போட்டான் 2 கொரி. 4:4.

153. திரிகால சம்பந்தமான செய்கைகள் யாவற்றிலும் இவ்வறியாமையாகிய இருள் பற்றியது. அதுமட்டுமல்ல, மனிதன் தன்னைப்பற்றி 'நான் எங்கிருந்தேன்,' 'எங்கு வந்தேன்,' 'எங்கு போகிறேன்' என்று நினைப்பதிலும் இருளே பற்றினது. கடந்த கால பாவத்திற்கு சாந்தியென்ன? தற்காலம் நடக்கவேண்டிய வழியென்ன? நல்வழி நடப்பின், அதின் பயனென்ன? என்னும் முக்கிய விஷயங்களிலும் இருளே மேல் நின்றது.

154. இருளுக் குரியவர்களுடைய மார்க்கங்களில் தெளிவு சற்றேனுமில்லாதபடியால் குருடனுக்குக் குருடன் வழிகாட்டுமாப்போல, அவர்கள் பெரியோரும் சிறியோரும் யாவரும் படுகுழிக்குள் அறியாமையினல் விழித்தீவிரிக்கின்ருர்கள். அன்னவர் சாஸ்திரங்களில் இந்த இருளின் பயனுய், கூறியது கூறல், மிகைபடக் கூறல், மாறுகொளக் கூறல், மயக்க வைத்தல், மற்ருென்று விரித்தல், நின்றுபயனின்மை முதலிய பத்துக் குற்றங்கள் நிறைந்து கிடக்கும். ஆதலால்தான்,

> 'சாஸ்திரத்தைச்சுட்டு சதுர்மறையைப் பொய்யாக்கி
> சூத்திரத்தைக்கண்டு சுகம்பெறுவதெக்காலம்'

(பத். புலம்.)

என அன்னவரே புலம்பினர்.

155. 'செய்த பாவத்திற்கு மன்னிப்பே கிடையாது' என்னும் சத்தம் இருளுக்குள்ளிருந்து புறப்படுகிறது. அவர்களில் எவருக்கேனும் பாவமன்னிப்பின் நிச்சயம் கிடையாது. 'தீர்த்தமாடினாலும் அகப்பேய் தீவினை தீராதே' என்பதை அவர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர். பாவம் செய்த மனுக்குலத்தாருக்கு ஈடேறும் வழி யாதொன்றும் இருளிலிருப்போருக்குத் தெரியாது. 'துஷ்ட சம்ஹார, சிஷ்டபரிபாலன' என்பதே அவர்கள் அவதார மூர்த்திகளின் கீதம். "நீதிமான்களையல்ல, பாவிகளை இரக்ஷிக்க வந்தேன்" என்னும் சத்தம் அவர்கள் நூல்களில் காணக் கிடையாது. இருள் மூடி, யாவும் அந்தகாரப்பட்டிருக்கிறது.

156. 'தற்கால' ஜீவியத்திற்கு வேண்டிய வெளிச்சமும் அவர்களுக்கில்லை. மனிதனுடைய 'ஜீவிய இலக்கு' (ideal) என்ன என்று கேள், நாஸ்தி என்பதே விடை. "பாதை வெளிச்சம்" சங். 119:105 எனும் அருள்வேத மொழிகளும் அவர்களுக்கில்லை. "உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிக்குதலுக்கும், சீர்திருத்துதலுக்கும்" 2 தீமோ. 3:17. உதவக்கூடிய வேத மொழிகளுமில்லாததால், 'எல்லாரும் வழி விலகி, ஏகமாய் கெட்டுப்போய்;" தன் புத்தியே தனக்குச் சரி என்றவண்ணம், தன் தன் வழியிலே போகிறார்கள். அவர்கள் இருளிலிருப்பதினிமித்தம் பாவம் செய்கிறவர்களைக் கண்டிக்க, அவர்கள் தேவாலயங்களிலும் இடமில்லை. ஏனெனில் அங்கும் இருள். துரிச்சைக்கேதுவாய் உடலைப்பேணி அந்தகாரத்தின் கிரியைகளாகிய களியாட்டு, வெறி, வேசித்தனம், காமவிகாரம், வாக்குவாதம் பொறாமை ரோ. 13:12-14 ஆகிய இவைகளை நடப்பிக்கவும் இவ்விருளே அவர்களைத் தூண்டுகிறது.

157. மனிதனுக்கு 'மரணத்துக்குப் பின்' சம்பவிப்பதென்ன என்று கேட்கில், அங்கும் இருள். 'இருளானது அவர்கள் மனதைக் குருடாக்கினபடியால், அவர்கள்

போகும் இடமின்னதென்பதை அறியாமல்' 1 யோ. 2:11 ஒருவன் நான் 'பிரம்மத்தோடு ஐக்கியமாவேன்' என்றும், இன்னொருவன் 'நான் கடவுளாகி விடுவேன்' என்றும், வேறொருவன் 'தான் நாயாகவோ, நரியாகவோ, எழுபிறவிகளில் ஒன்றாகவோ ஆவேன்' என்றும், பெரும்பாலோர் 'நாங்களறியோம், கண்டதார், உண்டுறங்குவதே மிச்சம்' என்றும் சொல்லக்காரணம் ஆவிக்குள்பற்றிய இருளையாம்.

158. ஆயினும் இவ்விருளில் கிடந்து தவித்த சிலர்,

"எதுந்தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதா நீ நீக்கவொரு ஞானவிளக்கில்லையோ !" என்றும்,

"எங்களுக்கிருந்த அடையாளங்களைக் காணோம், தீர்க்கதரிசியும் இல்லை, இது எதுவரைக்கும் என்று சொல்லுகிறவனும் எங்களிடத்திலில்லை." சங். 74:9; "கர்த்தாவே உமது முகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும்" சங். 4:6; "நான் கடந்துபோகக் கூடாதபடிக்குத் தேவரீர் என் பாதையை வேலியடைத்து, என் வழிகளை இருளாக்கி விட்டீர்" யோபு. 19:8 என்றும் புலம்பினர்.

14. தீயோரின் முடிவு.

159. "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாக்கவும் வல்லமையுடையவர்" 2, பே. 2:9. ஊண், உறக்கம், போகமாகிய மூன்றைமட்டுமே செய்யும் மிருககுணமுள்ள மனுஷர் சங். 92:6. தங்களுக்குத் தெரியாத காரியங்களைப்படித்தறிய விரும்பாமல் அவைகளைத் தூஷிப்பதினாலே தங்கள் கேட்டிலேயே கெட்டழிவார்கள் 2 பே. 2-12.

160. "நிகழ்கால வாழ்க்கையே பெரிதென்று இவர்கள் நினைத்து, இலச்சைக்கிடமான காரியங்களால் தங்களைக் கறைப்படுத்தி, விபசார மயக்கத்தால் நிறைந்து, கண்களின் இச்சைகளின்படியே நடந்து, பெலயீன விசுவாசிகளைத் தங்

திரமாய்த் தங்கள் வலைகளில் சிக்கப்பண்ணி, நல்வழிகளைப் புரட்டி, எச்சரிக்கப்பட்டும், மறுபடியும் தங்கள் வழிகளிலே துணிந்து நடக்கிறபடியால், நித்திய இருளே இவர்கள் பங்காய் முடியும்'' 2 பே. 2:13-17.

161. “தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையைக் கர்த்தர் உடைப்பார்'' சங். 68:21; தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படியாத உலக மக்கள்மேல் தேவ கோபாக்கினை வானத்திலிருந்து வெளிப்படும். “வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரியாமல்'' 1 கொரி. 6:9-10 நித்திய சந்தோஷமற்றுத் தவிப்பார்கள்.

162. தன் குற்றத்தைக் கடவுள் கண்டுபிடித்ததினிமித்தம் “பயந்து ஒளித்த' ஆதாமைப்போல் ஆதி. 3:9. “பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யுரானைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' வெளி. 21:8.

இரண்டாம் பாகம்.

---

15. கதி பெறும் வழி.

163. ஆதியில் உலக சிருஷ்டிப்பு நடக்கவே, ஆதிக்கும் அனுகிக்கும் இடைப்பட்ட காலத்தில் படைக்கப்பட்ட தேவதூதர் உள் ரமணீயத்தைக் கண்டு மிகக் களிப்புற்று, விடியற்காலத்து நக்ஷத்திரங்களுடன் யாவரும் பாடி ஆர்ப்பரித்தார்கள் யோபு. 38:6-7. அப்படியே ஆறு நாள் படைப்பின் முடிவில், மனிதனைத் தமது சாயலில் உருவாக்கின தேவன் யாவற்றையும் திரும்பிப்பார்க்கவே, அவை, மிகவும் நன்றாயிருந்தது ஆதி. 1:31. எனச் சொல்லி மகிழ்ந்தார்.

164. ஆயினும், ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் வாக்கியத்திற்கும், இரண்டாம் வாக்கியத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த சில சம்பவங்கள் யாவின் தோற்றத்தையும் மாறுபடப் பண்ணியதால் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிற்று. படைப்பிலே இங்ஙனமிருக்க நியாயமில்லாததுமட்டுமல்ல, ஒழுங்கீனமான ஓர் பூமியைக்கண்டு அமரர்கள் களித்தார்களென்பது இழுக்கேயாம் எரே. 4:23. இருள் கிஞ்சித்தேனுமில்லாமல் ஒளியாகவே இருக்கிறவர் படைத்த ஆழத்தின்மேல் இருள் வரக் காரணம் ஏனோ?

165. 'மிகவும் நன்றாயிருந்தது' என்றவர் தாமே சற்று பின் ஆதி. 2:15 'மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல' என்பதும், சில காலத்தில் மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகி அவனது இருதயத்தின் தோற்றம் சிறு வயது தொடங்கிப் பொல்லாங்கானதால்' தமது செய்கை கறைப்பட்டுப்போனதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டார் என்பதும் ஆதி. 6:5 கவனிக்கப்பட வேண்டியவையே

யாம். ஆதலின், மனிதனில் முதலிலிருந்த பிரியம் அற்றுப் போகவே, மனிதனும் அதையறிந்து தனக்குள்ளே திகில் கொண்டவனாய் தனது சுயகிரியைகளாகிய 'அத்தியிலைகளை'த்தைத்து, தனது மாம்ச நிர்வாணத்தை மூடி ஒளித்தான்.

166. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுடையவராய் அவனை மறுபடியும் தேடிவந்து அவனது கந்தைபோன்ற அத்தியிலையாகிய சுயநீதி, ஒன்றுக்கும் உதவாதென்றும் மிகப் பெலனான வஸ்திரமே அவனுக்குத் தேவையென்றும் உணர்த்தி, ஏதோ மிருகத்தைப் பலியாக்கி, தோல் உடைகளை அவனுக்குடுத்தி "எனது சொந்தக் குமாரன் குறித்த காலத்தில் உலகத்தைப் புரக்க வந்து, தாமே பலியாகி, மனிதருக்கு தேவ நீதியை ஏற்படுத்துவதற்கு இது முன்னடையாளம்" என்றாற்போல் தமது பிரியத்தை வெளிப்படுத்தினார்.

167. நெடுங்காலம் பிள்ளையில்லாமலிருக்கும் ஓர் மனையாள் கர்ப்பந்தரித்து தனது கணவன் சாயலிலேயே ஓர் ஆண்குழந்தை பெறும்போது, கணவன் கொண்டிருந்த வைராக்கியம் நீங்கி, அவள்மேல் பிரியம் கொள்வதுபோல, பாவம்நிறைந்த மனுக்குலத்தாரின் மத்தியில், தமது ஒரே பேறான குமாரன் குறித்தகாலத்தில் பிறக்கவும், தேவ தூதர்கூடி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்மேல் பிரியமுமுண்டாவதாக" எனப் பாடி ஆர்ப்பரித்தனர். லூக். 2 : 14.

168. தேவசாயலாய் ஒழுங்காகப் படைக்கப்பட்ட ஜீவாத்துமாவானது தீமையைத்தானாய் நாடினதினிமித்தம் ஒழுங்கற்று, தேவனற்ற வெறும் மாமிசபிண்டமாயிற்றே. அதின்மேல் மறுபடி பிரியம்கொள்ள தேவன் ஒரு வழி ஏற்படுத்தினார். அதுவே இயேசுவாகிய நன்மைவடிவம் மனுக்குலத்துக்குள் உருவாகுதல். கலா. 4:19. ஆத்துமாவாகிய பெண் தேவஅருள் பெற்று, மனிதமுயற்சியாலும், மற்

றெவ்விதத்திலுமல்ல, கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தால், அவ்வடிவத்தை குழந்தையாய் தனக்குள் உருவாக்கி சுகமான பேறுகாலத்தையடையும்போது 1 தீமோ. 2: 15ல் கூறப்பட்டிருக்கும் 'பிள்ளைப்பேற்றினால் இரட்சிக்கப்படுதல்' நிறைவேறும்.

169. காணப்படாதவர் காணப்படத்தக்கதாக சிறுக்கவும், அவருக்கே மேலான நிலையில் மகிமை ஏற்படுமாப்போல், மனிதனுக்குள் நன்மை இயேசுவடிவமாய் உருப்படவே, உன்னதங்களில் பெரிய சந்தோஷமுண்டாகும். அன்பு, தாழ்மைமுதலிய நற்குணங்கள்தாமே மூர்த்தியாய் அவதரிப்பதையே இயேசுவின் பிறப்பில்கண்ட தேவதூதர் பரமசேனைகளுடன் சேர்ந்து பாடினர்.

170. ஆதியிலே இருந்த குமாரன் குறித்தகாலத்தில் பாலகனுக்குள் கொடுக்கப்பட்டவராயினும், அவரது நாமம் 'சமாதானப் பிரபு' என்றிருப்பதாலே ஏசாயா. 9 : 6. அவர் பிறந்தவுடனேயே உலகத்தில் சமாதானத்தையும் அமர தூதரே கூறினர். இயேசுபிறக்கும் எந்த இருதயத்துக்குள்ளும் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. யோவா. 14: 1 என்னும் சத்தம் கேட்பதுமட்டுமல்ல, "சமாதானத்தையே உங்களுக்கு வைத்துப்போகிறேன்" என்றவர், நித்திய சாந்தியை உள்ளங்களுக்களிப்பவராகவும் விளங்குவார். இவ்வுலகில் அவரது காலம் முடிவுபெறும் வேளை வந்தபோதும், உயிர்த்தெழுந்த சூக்கும சரீரநிலையில் அடைக்கப்பட்ட கதவுகளைக்கடந்து, உள்ளிருப்போரை நோக்கி, 'உங்களுக்குச் சமாதானம்' என்றவர் யோவா. 20: 19-26 இன்றும் என்றும் கலங்கித்திகைப்பவர்களுக்குச் சமாதானத்தையே இலவசமாய் ஈகிறார்.

16. இயேசு பிறப்பின் சம்பவங்கள்.

171. பலஸ்தீன நாட்டின் வயற்புறங்களில் ஆட்டு மந்தைகளை மடக்கிய மேய்ப்பருக்கு, ஒரு தேவதூதன் மூலமாகவும், ஏறக்குறைய இரண்டு வருஷங் கால்நடைப் பிர

யாணமுள்ளவர்களுக்கு ஓர் வானஜோதி மூலமாகவும், தம்மை வெளிப்படுத்தினவர், இக்காலமும் எக்காலமும் தொண்டருடைய மனோநிலைமைக்கிசைய வெவ்வேறான கருவிகள் மூலமாகவும் தம்மை வெளிப்படுத்துகிறார். இடையர்கள் தாங்கள் கேள்விப்பட்டபடியே போய்ப் பார்த்து சந்தோஷமடைந்ததற்கும், சாஸ்திரிகளும் வருத்தம் எண்ணாது விடாமுயற்சியுடன் பிள்ளையிருக்கும் வீட்டில் பிரவேசித்து ஆனந்த சந்தோஷமடைந்ததற்கும் காரணம், தங்கள் தரிசனங்களைப் பின்பற்றி, அவற்றிற்குக் கீழ்ப்படிந்ததே. பவுலைப்போல, 'அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிய' அப். 26:19 மனமுடையவர்கள் எக்காலமும் சிறந்த பக்தி நிலையை அடைந்து மகிழுவர்.

172. சூரியோதயத்தில் நக்ஷத்திரங்கள் மங்கித் தேயுமாப்போல், இந்த நன்மை வடிவத்தின்முன். மற்றும் சகல மேன்மையும் பணியுமென்பதைக் குறிப்பிடவே, கீழ்தேச சாஸ்திரிகள் மூன்றுவித பொருட்களைக் காணிக்கையாகப் படைத்தனர். உலகத்தின் ஞானம், உண்மையில் ஞானமாகவே பிறந்திருக்கும் நீதி. 8. குழந்தைக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து, இனி எனக்கல்ல, உமக்கே புகழ். என்னையுடையவரைப்பார்க்கிலும் உம்மையுடையோரே பெரியோர் என்றாற்போல் சாஸ்திரிகளே விழுந்து பணிந்தனர்.

173. தேவஞானம் உதயமாகும் உள்ளத்தில் மற்றெந்த ஞானமும் பணியவேண்டியதே கடமையாகும். அது மட்டுமல்ல, பொன்னைப் படைத்ததினால் உமக்கே இது தகும். உலகத்தார் இதில் விழுந்து உயிர் துறக்கின்றார்கள். நீர் இதைக்கொண்டு எகிப்துக்கு உயிர் தப்பிப்பிழையும். இப்பொன் சற்றுப் பின்செய்யவேண்டிய 40 நாள் பிரயாணச் செலவுக்கு அவசியமானதுமட்டுமல்ல, பொன்னாய் விளங்கும் தெய்வீகனே! உலகமும் அதின் ஆசை இச்சையும் உமக்கிடல்ல. உமக்கு இச்சகம் பேசி அடங்குவதே, இனிமேல் என் தொழில். பொருளிலும் அருளே பெரிது, என்று சொல்லி பொருள் அருள்முன் பணிந்தது.

174. உலகஞானமும், பணமும் குழந்தைமுன் பணிந்ததுமட்டுமல்ல, உலகத்தில் தெய்வீக வழிபாடுகளைத் தூண்டும் தூபவர்க்கமாகிய சடங்காசாரமும், இம்மட்டும் பற்பல முறைகளில் உம்மைப்பற்றி உலகத்திற்குச் சொல்லிச்சலித்தேன். என்னிலும் வல்லவர் நீரே. பிதாவை வெளிப்படுத்தும் பிதாவின் தற்சொரூபமாகிய கொலோ. 1: 15, 2: 9 உம் முன்நிழல்போன்ற சடங்காசாரமாகிய நான் எம்மாத்திரம் என்றாற்போல தூபவர்க்கமும் பணிந்தது. தொண்டர்கள் உள்ளத்தில் இயேசுவே உயர்ந்து தங்கள் ஞானமும், கனகமும், சடங்கும் எல்லாம் பணிய வேண்டியதே.

175. முடிவில் ஜீவனின் அதிபதிமுன், மரணமும் திகிலடைந்து பணியவேண்டியதினிமித்தம் வெள்ளைப்போளமும், " இதுமட்டும் நான் உலகத்தை எனது கூரினால் பயப்படுத்திவந்தேன். உமக்குமுன் நிற்க நான் அருகனல்ல. உம்மையுடையவர்கள் எனக்கஞ்சமாட்டார்கள். 1 கொரி. 15:55-57; பிலி. 1: 21; 2 கொரி. 5: 1. இனி நான் இருந்தென்ன, போயென்ன ' என்றாற்போல, பிரேதங்களின் கல்லறைக்கவசியமாகிற வெள்ளைப்போளமும் பணிந்தது. விசுவாசிகள்

மரணதூதன் வந்தென் ஜீவனைக் கேட்டிடில்
மங்களம் பாடியே, வாறேன் இதோ என்பேன் என்று

பாடி மகிழுவர்.

176. இப்படியெல்லாம் உலகமும் அதின் மேன்மைகளும் இயேசுவாகிய குழந்தைமுன் பணிந்தபோதிலும்; தீமைவடிவங்கொண்ட இருளன், ஏரோதிற்குள் புகுந்து, நன்மையை நசுக்கமுயன்று பல சிசுக்களின் உயிரை வாங்கினாற்போல இக்காலமும் மனிதனுக்குள் பிறக்கிற குழந்தையாகிய இயேசுவை நசுக்க பல எதிரிகள் தோன்றுவர்.

177. நன்மையின் உதயத்தில் ஆயிரம் தடைகள் வந்து நேரிடக்கூடுமாயினும் மிகுந்த பிரயாசையால் அந்

நன்மைவடிவத்தின் குழந்தைப் பருவத்தைக்காக்கக் கூடு மாறுல், வயதுடையவராகும்போது, மலையின்மேலேற்றி, தலைகீழாய்த் தள்ள நாசரேத்தூரார் கொண்டுபோகை யில் தாமே மறைந்துகொள்ளக்கூடியவராவர் லூக்.4:29-30. அவரை எறியக் கல்லுகளை எடுத்துக்கொள்ளுகையிலும் ஒரு முறை மறைந்தார் யோ. 8:59. ஆயினும் சிறு பிராயத்தில் ஏரோதரசன் கைக்குத்தப்ப அதன் பெற் றோர் குழந்தையைப் பாதுகாக்க வேண்டியிருந்ததுபோல நீயும் உனதுள்ளத்தில் தோன்றிய இயேசு முதிர்வயதுடை யவராகும் வரைக்கும் (விசுவாச ஜீவியத்தில் நீ முதிருமட் டும்) அவரைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிரு.

178. அமர்ந்த மெல்லிய சத்தத்தில் பேசுகிறவரு டைய எச்சரிப்பின் சத்தத்தை, யோசேப்பு தனது புலன் கள் ஒடுங்கி அமர்ந்த இராக்காலத்தில் சொப்பனத்தின் மூலமாய் மூன்று முறை மத். 2:13,20,22 கேட்டு அச்சொல் லுக்கிணங்கி, குழந்தையைக் காத்ததுபோல் நீயும் தேவ சத்தத்தைக் கேட்க வெகு அமைதியாயிரு. ஆத்திரப் படாதே. வைராக்கியங் கொள்ளாதே. உன்னை ஒடுக்கி அவர் பேசமட்டும் இடங்கொடு பிர. 5:2. அப்போது நிச் சயமாகவே நீ எச்சரிப்புப்பெற்று உலகில் தழைத்தோங்கு வாய். நீ பேசும்போதாவது, மற்றோர் சத்தத்தில் நீ மகி ழும்போதாவது அவர் பேசாமல், மற்றெல்லாச் சத்தமும் ஓயும்போது மட்டுமே அவரது மெல்லிய சத்தம் கேட்கக் கூடுமென்பதை ஒருபோதும் மறவாதே.

17. ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்குமுள்ள பேதாபேதங்கள்.

179. 'ஜீவாத்துமாக்களாகிய மனுக்குலம் முழுவதும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்' ரோ. 3:23. 'நல்லவன் ஒருவனாகிலும் இல்லை' எல்லாரும் வழி விலகி, ஏகமாயக் கெட்டுப்போனார்கள்' சங். 53:3,4. ஆவிக் குள் அறியாமையும், ஆத்துமாவுக்குள் இச்சையும், சரீரத்

தில் கீழ்ப்படியாமையும் பெற்ற மனுக்குலம் நற்கதியடைய வேண்டியே, இயேசுவாய் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் 1 தீமோ. 3:16.

180. புறம்பான தோற்றத்தில் இயேசுவுக்கும் மனிதருக்கும் மிகுந்த ஐக்கியம் இருப்பினும், உள் தத்துவத்தில் அதற்கெதிரிடையான குணங்களே அமைந்துள. 'மனித குமாரன்' என்று இயேசு பலமுறையும் தம்மை அழைத்த போதிலும், மற்றெம்மனிதருக்கும் அப்பெயர் தகாதென்பதை அவருடைய ஜீவியம் விளக்கினது. 'நானே மனிதன், நீங்களும் மனிதரா?' என்று கேட்டாற்போல, அவரது தூய நடக்கை எவரையும் குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கிறது. பிலாத்துவின்முன் பலவித இம்சையனுபவித்த பெருமானை நோக்கி பிலாத்து "இதோ இந்த மனிதன்" என்று கூறினான். ஆம், மனிதனெனத் தகுதியுடையோர் அவர் ஒருவரே. மீதி எல்லாரும் பாவத்தினால் ஒரு படி விழுந்தோம்.

181. மனிதராகிய நாம் தாழ்விலிருந்துண்டானவர்கள், அவரோ உயர்விலிருந்துண்டானவர்.' நாம் 'இவ்வுலகத்திலிருந்துண்டானவர்கள், இயேசு அப்படியுண்டானவரல்ல. யோவா. 8 : 23. 'அவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர்' 1 கொரி. 15: 47. நாம் பாவ மாம்சத்தையுடையவர்கள். தீமைதங்கிய உடலையே, வினையால் பெற்றுத் தவிக்கிறோம். 'நன்மையே இதில் வாசம்பண்ணுகிறதில்லை' ரோ. 7 : 18. அவரோ பாவமாம்சத்தின் 'சாயலை' மட்டும் உடையவர். தீவினைநீங்கிய வுடல் அவருக்கிருந்தது. ரோ. 8 : 3. நமக்குள் தந்திரமான நிலையில் பாவம் வாசம் பண்ணுகிறது. ரோ. 7 : 17. அவருக்குள் 'பாவம் உண்டென்று யார் அவரைக் குற்றப்படுத்தக்கூடும்?' யோவா. 8:46.

182. மனிதர் தங்கள் பாதைகளில் வெளிச்சமில்லாதிருக்கும்போது, கர்த்தரை நம்பி அவரிலேயே சார்ந்துகொள்ளவேண்டியவர்கள். அவர் ஒளியிலே நடக்கிறவரான

படியால் இடறுவதற்கேதுவானதொன்றும் அவர் நடையில் இல்லை. மனிதர் தீமையின் ஏவுதலுக்கிசைய, பொல்லாங்கனின் இச்சைகளின்படியெல்லாம் செய்கிறவர்கள். யோவா. 8 : 44. அவரோ பிதா செய்கிறதாகக் காண்கிறவைகளையும், செய்ய இவருக்குக் கட்டளையிடுகிறவைகளையுமே செய்பவர்.

183. ஆத்துமா மாம்சத்தைச்சார்ந்து, அதின் இஷ்டப்படி செய்யப் பழகினபடியால் அதின் முடிவாகிய மரணத்தைத் தெரிந்துகொண்டார்கள் மனிதர். ரோ. 8 : 6. தமது உடலை அடிமையாக்கி, ஆவியை எஜமானாக்கி, நெருக்கபாலதயைக் கைபிடித்த ஜீவனுடைய ஜீவாதிபதி இயேசு. யோவா. 11 : 25 ; 14 : 6 ; அப். 3 : 15.

184. உலகப் பொருட்களில் பிரமிப்புக்கொண்டு, பணப்பையைத்தூக்கிச் சுமக்கிற யூதாசைப்போலுள்ள மனிதருக்கு மாறாய், இயேசு அதைக் கையில் தொடாமல் ‘வரிப் பணத்தை எனக்குக் காண்பியுங்கள்’ லூக். 20 : 24 என்று மட்டும் சொல்லுகிறவர். அவரது பிறப்பில் பொன் பாத காணிக்கையாக வந்தெட்டினது. அவர் அதை மிதித்தாரெனத்தகும். உலகத்தை ஜெயித்தவர் இயேசு யோவா. 16 : 33. அதற்கடிமைகள் மற்றோர்.

185. பிசாசின் மூன்று கொடிய சோதனைகளையும் ஜெயித்ததினால், அவன் அவரைவிட்டு விலகிப்போனான். மத். 4 : 11. நாமோ அவனுக்கிணங்குகிறபடியால், அவன் நம்மைக் கிட்டிச்சேருவான். அவரோ ஆவியானவரால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, வெளியிலிருந்துவந்த பிசாசினால் சோதிக்கப்பட்டார். மத். 4 : 1. நாமோ நமக்குள்ளிருக்கும் சுயஇச்சையினாலே இழுப்புண்டு சோதிக்கப்படுகிறோம். யாக். 1 : 13, 14.

18. இயேசுவின் சோதனையின் அந்தரங்கம்.

186. முதல் மனுஷனைச் சாத்தான் ஆணவம், காமம், மாயம் என்ற மும்மலத்தால் தாக்கியபடியால், அவனது

வித்தினின்று தோன்றிய நாம் யாவரும் சாபத்திற்குள்ளானோம். ஆனால், அவன் வித்தினின்று தோன்றாமல், 'ஸ்திரீயின் வித்தாகிய' தனிப்பிறவி இயேசு உலகத்தில் இரண்டாம் ஆதாமாய்ப்பிறந்து, சாபத்தைமாற்றி, தமது மூலம் மனிதரை மறுபடியும் அழியா ஜீவகரையில் சேர்க்கப் போகிறாரென்று கண்ட கறுப்பன் இவரையும் சோதிக்க முயன்றான். எபி. 2 : 18 ; 4 : 15.

187. இரு சோதனைகளுக்குமிடையில் பெரும் வித்தியாசங்களுண்டு. ஒருவன் அழகிய ஏதேன் என்னும் தோட்டத்தில், பின்தினவரோ துஷ்டமிருகங்கள் நிறைந்த ஒரு வனாந்தரத்தில் மாற். 1 : 13. ஆதாம் சகலவிருக்ஷங்களின் கனியையும் புசித்து செழித்திருக்கையில், இயேசுவோ இரவுபகல் ஒரு மண்டலம் உபவாசித்தபின் சோதிக்கப்பட்டார். மத். 4: 2.

188. பரிசுத்தத்தில் வளர வளர, பாவத்திற்கு நேரான தீங்கனின் சோதனை அதிகக் கொடியதாயிருக்கும். கறுப்பனோடு உண்டு, உறங்குகிறவர்கள் சோதனை என்றாலென்ன என்பதையே அறியார். தண்ணீருக்குள் மூழ்கினவன் தன் தலைமேலுள்ள ஜலத்தின் பாரத்தை உணரான். அதைவிட்டு வெளியேறியபின் தனது கைகளால் குடத்தில் தண்ணீரை எடுக்க முயலும்போது அதின் பளுவை உணருமாப்போல் பாவ உலகில் சிக்கி, பாவத்தையே செய்து வருபவனுக்கு, சோதனையின் கொடுமை தெரியாமல், அதை விட்டுவிட முயலும்போது மட்டுமே அதின் பயங்காம் வெளிப்படும்.

189. எல்லா மனிதருக்கும் ஒரே விதமான சோதனைகளுமில்லை. கட்குடியை விட்டுவிட்ட ஒருவன் திரும்பவும் ஒரு கள்ளுக்கடைப் பக்கம் செல்லுகையில் அவனையறியாமலே அவனது வாயில் நீரூறும். அதில் பழகாதவன் அதின் துர்நாற்றத்தைக் கண்டு விலகியே போவான். கூலி வேலை செய்பவனுக்குத் தன் எஜமானின் கண்ணில் மண்

ணிடுவதெப்போ என்னும் சோதனை, படியாத மாணவனுக்குப் புஸ்தகம் பார்த்தெழுதல், திருடனுக்கு உண்டியல் பெட்டி, தட்டானுக்குப் பொன் திருட்டு, இச்சை ரோகிக்குப் பெண்வாடை, பயிரிடுகிறவனுக்கு அண்டை நிலத்தின் வேலி, வியாபாரிக்கு ஏமாற்றம் இப்படியாக எல்லா மனிதருக்கும் ஒரேவித சோதனையிராமல் அவரவர் நிலைமைக் கடுத்த போராட்டங்களே மலிந்து கிடக்கின்றன.

190. சற்றே கறுப்புமை ஒரு வெள்ளைத் துணியைக் கறைப்படுத்திவிடும். ஓர் கரிய நிறமுடைய சேலை ஒரு புட்டி மையை லேசாய் உட்கொண்டுவிடும். இயேசுவுக்கு நேர்ந்த சோதனைக்கும் நமக்கு நேரிடும் சோதனைக்கும் மெத்த வித்தியாசம். பாவ மாம்சத்திலிருந்துண்டாகிற உட்சோதனை இயேசுவுக்கிருந்ததில்லை. யோவா. 8:46. நாம் சாத்தானை உருவமாகக் காணக்கூடாதவர்கள். நமது பரிசுத்தம் பூரணப்படும்போது அவனை நாம் இயேசு கண்டது போல் காணக்கூடும். நமக்குள்ளேயே அவனிருக்கும்போது அவனைக் காணுவதெப்படி? பாவம் சற்றேனுமில்லாத பூரண பரிசுத்த நிலை பெறக் கூடுமானால் சாத்தானையும் உருவமாய்க் காணக்கூடும்.

191. சோதனை காலத்தில் எதிரி இயேசுபெருமானுக்கு வெளியேநின்று அவரைச் சோதிக்கிறான். மத். 4 : 1 ; லூக். 4 : 1 ; மாற். 1 : 13. சிலகாலம் அவரைவிட்டு விலகின இருளன், அவரது உலக ஜீவியமுடிவிலும் வந்து நெருங்குவதை அவர் கண்டு ‘இதோ இப்பிரபஞ்சத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை’ யோவா. 14 : 30 என்றார். ஆதலால் அவரடைந்த சோதனைகள் நம்மவர்களுக்கிருப்பதைப் பார்க்கிலும் மகா பெரியதும் கொடியதுமாகவே இருந்திருத்தல்வேண்டும்.

192. இம்மூன்று சோதனைகளையும் பலமுறைகளில் விளக்கக்கூடும். அவைகள்மூலமாய் சாத்தானின் நோக்கம், இயேசுவின் ஊழிய நோக்கத்தை சித்திபெறுமலாக்குவதே.

இரட்கிப்பின் கிரியையைச்செய்ய வந்த அவரை வேறுவழி களுக்கிழுக்கிறுன். தமது ஊழியத்தை எப்படி நிறைவேற்ற லாம் என்று ஆலோசிக்கவே இவர் மலைமீது போயிருப்பார். அப்படிச்செய்கையில் சிலுவைதான் தமது முடிவாக வேண் டுமென்று தீர்மானித்ததைக்கண்ட பொல்லாங்கன் மற்று இலேசான வழிகளைச் சுட்டிக்காட்டிச் சிலுவையினின்று அவரைப் பிரிக்கத்தேடுகிறுன். ஏனெனில் 'அவர் உன் தலையை நசுக்குவார்' என்று முன்ஞெருமுறை தனக்குக் கிடைத்த சாபமொழி நிறைவேறிவிடுமே என்னும் பயம் அவனுக்குள் பலமாய் கிரியை செய்தது.

193. பொருளைவிட்டு நிழலைக் கவ்வப்பண்ணுகிற தீங்கன் இரக்ஷகரிடம் வந்து அவரது உயர்ந்த எண்ணங்களை உலக காரியங்களுக்கு நேராய் இழுக்கமுபன்று, ஆவிக்குரிய ராஜ்யத்தை லூக். 17 : 20, 21 மனிதருடைய உள்ளங்களில் எப்படி ஸ்தாபிப்பது என்னும் யோசனைக்கெதிரில் ரோம ராஜ்யத்தை வேரறுக்கும் முறையைச் சுட்டிக்காட்டினுன். பரலோகத்திலிருந்திறங்கினவர். யோவா. 3 : 13. மறுபடி பலரையும் கொள்ளைப் பொருளெனக்கொண்டு மேலேறுவ தெங்ஙனம் என்றுயோசிக்க இவன்வந்து 'தாழக்குதியும்' என்று கீழுலகத்திற்கிழுத்தான். உயிரற்ற ஆத்துமாக்கள் பிழைக்கும் வழி எதுவென்று சிந்தித்தவரை, தோல்துருத் தியை நிரப்பக் கல்லை அப்பமாக்கச் சொன்ஞன். வயிறும் போஜனமும் இரண்டும் அழிந்துபோமென்பதை சாத்தானே நீ அறியவில்லையோ? தேவனைத்தேடுகிறவனும் உணர் வுள்ளவனுமில்லையே, மனிதர் 'ஆவியோடும் உண்மையோ டும்' கடவுளை பூஜைசெய்ய அவர்களைத் தூண்டுவதெங்ஙனம் என்று யோசிக்கப் போனவரிடம் இவன்வந்து, 'என்னைப் பணியும்' என்ற வீம்பு மகா கொடியதே.

194. ஆதிப் பெற்ருேரிடம் 'இதைப்புசிக்கும் நாளி லே சாகவே சாவாய்' என்றதை நன்கறிந்திருந்தும் ஏவா ளிடம் வந்து அந்தச்சொல்லை சந்தேகிக்கப்பண்ண 'தேவன் சொன்னதுண்டோ'? ஆதி. 3: 1 என்றுகேட்டவன், அறுதி

முதல் பிதாவின் மடியிலிருந்த செல்லப்பிள்ளையை 'நீர் தேவனுடைய குமாரனேயானால்' என்னும் சொல்லினால் பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள சம்பந்தத்தைச் சந்தேகப் படுத்த முயன்றான்.

195. நினைவு, வார்த்தை, செய்கையாகிய மூன்றிலும் தூய்மை பெறுபவன், திரிகரண சுத்தனாவான் என்பதை நன்கறிந்திருந்தும், அம்மூன்றிலும் தனது தீங்கை நுழைக் கத்தக்கதாக 'பணியும்' (நினைவுக்குரியது) 'சொல்லும்' (வார்த்தைக்குரியது), 'குதியும்' (செய்கைக்குரியது) என்று சோதிப்பது மெத்த ஆச்சரியமே.

196. சகல தீமைக்கும் காரணம் பாவமாம். அது வெளிப்படுவது கட்டளையைமீறுவதினால். அம்மீறுதலுக்குக் காரணம் இச்சை. இச்சையின் உற்பத்தி அறியாமை அல் லது மாயை. சரீரத்தை மீறவிடாதிருப்பவன் சுத்தன். அவன் இச்சையை ஜெயித்தவனாயிருப்பான். மெய்யறிவற் றவன் இச்சையை ஜெயிப்பதுகூடாத காரியம்.

197. 'கட்டளையை மீறுவது பாவம்'. 'பாவத்தின் சம்பளம் மரணம்'. தேவனுக்குப்பயந்து அவருடைய கட் டளைக்குக் கீழ்ப்படிவது எல்லார்மேலும் விழுந்த கடமை. காரியத்தின் கடைத்தொகை அதுவே. பிர.12:13. உலகமும் அதின் ஆசை இச்சையும் மாயை என்பதை அறியாதவன் கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டான். அப்படியே கீழ்ப்படி கிறவன் ஞானத்தைக் கண்டடைகிறான். ஞானத்தைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான். நீதி. 8:35 ஒன்றான மெய்த்தேவனை அறிவதே ஜீவன். யோவா. 17:3. அவ்வறிவில்லாமையே மரணம்.

198. ஆவிக்குள் மாயையையூட்டி, ஆத்துமாவுக்குள் இச்சையைக் கர்ப்பந்தரிப்பித்து சரீரத்தின் ஆணவமாகிய மீறுதலை முதல் மனிதனுக்குள் ஊட்டினவன் இயேசுவிட மும் அதே கருவிகளை உபயோகிப்பதை உற்றுப்பார். 'சாகவே சாவதில்லை' என்ற ஒரே பொய்யினால் இச்சையும்

மீறுதலும் தொடர்ந்தாற்போல் இயேசுவிடம்வந்து அவருடைய ஆவிக்குள் மாயையாகிய பொய்மைச் செலுத்த முயன்று 'தாழக் குதியும்' என்றதினால் தேவ பராமரிப்பை பரீக்ஷை செய்ய எவினன்.

199. அழிந்து உருகவேண்டிய உலக ராஜ்யங்களை ஆத்துமாவுக்குள் இச்சிக்கப்பண்ண முயன்று, 'இவைகளையெல்லாம் எனக்கிஷ்டமானவனுக்குக் கொடுக்கிறேன்' உமக்கு வேண்டுமானால், 'எனக்கொரு கும்பிடு போடும்' என்று அகங்கரித்தான்.

200. 'உன் கையை நீட்டு' என்பதற்குள்ளே நீட்டப்பண்ணுகிற வல்லமையும், 'எழுந்து வா' என்னும் மகா சத்தத்தில் மரித்தவனை எழுப்பக்கூடிய வல்லமையும் இயேசு பெற்றிருந்தும், அவ்வல்லமைகளை அவர் அடக்கி ஆண்டாரே தவிர, அந்த வல்லமை தம்மை ஆள விடவில்லை. அந்த வல்லமையை வீணாய் உபயோகிக்க எவி, மீறுதலுக்குள் அவரைத்தள்ளலாமென்றெண்ணி, 'கல்லை அப்பமாக்கச்' சொல்லியும் பலிதப்படாததால் ஒரே ஓட்டமாய் ஓடி, ஏறக்குறைய மூன்று வருஷகாலம் ஒளித்திருந்து லூக். 4 : 13. பின் கெத்செமனேயில் மறுபடியும் தலைகாட்டினான். யோவா. 14 : 30.

201. இரக்ஷணிய போர்வீரன் தன்னைக் காக்கவேண்டிய கச்சை, பாதரட்சை, தலைச்சீரா, மார்க்கவசம், கேடகம் இவைகளுக்குப்பின்னால், எதிரியைத்தாக்க உபயோகப்படுகிறபட்டயத்தை எடுக்கவேண்டியதை எபே. 6:12-16 வெற்றி வேந்தர் தாமே முன்மாதிரியால் நமக்குக்காட்டி, 'எழுதியிருக்கிறதே' 'எழுதியிருக்கிறதே', 'சொல்லியிருக்கிறதே' லூக். 4 : 4, 8, 12 என்னும் வேதமொழிகளால் எதிரியை மடங்கடித்தார்.

202. பிசாசின் சோதனைகளை எவனொருவன் ஜெயிப்பானோ, எவனுடைய ஜீவியத்திலிருந்து பாவத்தின் வல்லமை விலகிப்போகுமோ அவனுக்கு தேவதூதர் பணிவிடை

செய்யும் சுவர்க்க லோகம் சித்திக்கும் என்பதைக்காட்ட, இயேசுவின் சோதனையின் முடிவில் அரூபிகள் வந்து அவருக்குத் தொண்டு செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. மத். 4 : 11.

19. குரு வடிவம்.

203. "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்" மத். 23 : 8. "நீங்கள் குருக்களென்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாய் இருக்கிறார்" மத். 23 : 10. "எனக்குமுன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள். ஆடுகள் அவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை" யோவா. 10 : 8.

204. 'ரபீ' என்றும், 'குரு' என்றும் கண்ட பதங்கள் இயேசு ஒருவருக்கேதவிர மற்றெவருக்கும் தகாது. ஏனெனில் அவரே பிசாசின் சோதனைகள் யாவையும் ஜெயித்தவர், மற்றெவரும் இக்கண்ணிகளுக்குள் விழுந்து சிக்கினவரேயாவர்.

205. வடமொழிக்கிசைய, 'குரு' என்னும் பதத்திற்கு 'ஒளி' யெனப்பொருளாம்.

"கு சப்தம் அந்த காரம்தான்
ரு சப்தம் தன் நிரோதனம்"

கு என்னும் அந்தகாரமாகிய இருளை நிரோதனம் பண்ணுவது (மாற்றுவது) எதுவோ, அதுவே குரு. இதையறிந்தே தாயுமானவர் :

பந்த மெலாந்தீரப் பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே

என்று பாடினார்.

206. இயேசுவின் பிறப்பைப்பற்றி முன்னறிவித்த ஏசாயா அவரது ஊழியஸ்தலத்தைத் திட்டமாய்க் குறித்த பின்னால் (கடற்கரை, யோர்தான் நதியோரம், கலிலேயா) (பாவ) இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. ஏசா. 9 : 1, 2, என்றெழுதினான். சகரியா என்னும் வயோதிப ஆசாரியன் களிப்பாய் ஒருமுறை பாடவும் அதிலும் "உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்தது" லூக். 1 : 79 என்று துதித்தான்.

207. மல்கியா தன் தீர்க்கதரிசனத்தில், உண்மையாய் எகோவாவுக்குப் பயந்திருக்கிற எவர்கள்மேலும் நன்மை வடிவமாகிய இயேசு 'நீதியின் சூரியனா'ய் உதிப்பாரென்றும், அப்படி எவர்களுடைய அநீதி இருள் நீங்க, நீதி ஒளி பிரகாசிக்குமோ, அவர்கள் 'உள்ளான மனுஷனில்' ஆரோக்கியமடைந்து எபே. 3 : 16, நாலுதிசைகளுக்கும் புறப்பட்டுப்போய் கொழுத்த கன்றுகளைப்போல் வளருவார்கள். யோவா. 10 : 9 என்றும், அதற்குமுன் இவர்களை மிதித்துக் கீழ்ப்படுத்திவந்த துன்மார்க்கத்தை இதற்குப்பின் இவர்களே மிதிப்பார்களென்றும் மல். 4: 2, 3ல் உரைத்தான்.

208. ஒளியாகிய ஆவிக்குள் இருளாகிய அறியாமை (மாயை) பற்றவும், ஆத்துமா கீழ்நோக்குடையதாய் மரித்தோரின் தேசமாகிய பாதாள இலக்கைத்தொடர்ந்து, உயிரற்று, நித்திரையிலிருக்கவே, பல தொண்டர்கள் வந்து, 'இனி தூக்கம் வேண்டாம், எழும்பு, பழைய ஒளியைப்பெற்றுக்கொள். ஏனெனில் ஒளி வந்தது. இருள் உன்னைமூடிய போதும் கர்த்தர் உன்மேல் உதித்தார்' ஏசாயா. 60 : 1, 2 என்றும், 'தூங்குகிற நீ மரித்தோரைவிட்டு எழுந்தால், கிறிஸ்துவாகிய ஒளி உன்னைப் பிரகாசிப்பார்' எபே. 5 : 14 என்றும் கூறி உலகத்தைத் தூண்டினார்கள்.

209. இருளிலிருந்து இடறிநடந்த ஜனங்களை நோக்கி இயேசு "நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்

ஃனப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" யோவா. 8 : 12. "நான் உலகத்தி லிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" யோவா. 9 : 5. அதிக நாட்களில்லை. காலம் முற்றுகிறது. ஒளி போய்விடும். ஆகையால் 'இருளில் அகப்படாதபடி ஒளி யிலே நடவுங்கள். நீங்கள் ஒளியின் பிள்ளைகளாக வேண்டு மானால் ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்.' யோவா. 12 : 35, 36 என்றும் கூறினார்.

210. இயேசுவிடம்வந்த பலர் இந்த ஒளியைக்குறித்து சாட்சிகொடுத்து 'நான் குருடனாயிருந்தேன். கிறிஸ்து என் னப்பட்ட இயேசு சேறுண்டாக்கி, என் கண்களில் பூசி, கழுவு என்றார். நான் கழுவினேன். காண்கிறேன்' யோவா. 9: 15-25 என்றும், "மத்தியானவேளையிலே சூரியனிலும் அதிகப் பிரகாசமான ஒரு ஒளி வானத்திலிருந்து என்னைச்சுற்றிப் பிரகாசித்தது. நான் தரையிலே விழுந்தேன்............நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்னும் சத்தத்தைக் கேட்டேன்." அப். 26 : 13-15. "இப்பொ ழுது கிறிஸ்து சகல ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்து கிறவர் என்றும் சொல்லுகிறேன்." அப். 26 : 23 என்றும் கூறினார்கள்.

211. இந்த ஒளிவாகிய இயேசு சரீரத்துக்குப்புறம் பேமட்டும் பிரகாசிக்கக்கூடிய நாலாம் நாள் படைப்பிலுள்ள சூரிய ஒளியாக அல்ல, அதில்லாதிருக்கும்போதே வெளிச் சம் உண்டாகக்கடவது என்னும் சொல்லுக்குரிய வேதமா கிய வெளிச்சத்தை, தமது முகத்தினின்று உதிப்பித்தவ ரும் ஆதி. 1 : 3 ; நீதி. 6 : 23, கறை, இருள்நிறைந்த இரு தயத்துக்குள் பிரகாசிக்கிறவருமாகையால் பவுல் அவரைப் பற்றி "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்." 2 கொரி. 4 : 6 என்றார்.

212. காலா காலங்களில் உலகத்துக்குத் தோன்றி, தீமையை ஒடுக்கி, நன்மையைக் காத்துவர அவதரிக்கிறவனாக விருக்கிறேன் என்றுசொல்லும் மாய ஒளியான பொய் யொளியாக அல்ல, யூதனென்றோ, கிரேக்கனென்றோ, விருத்தசேதனமுள்ளவனென்றோ, அதில்லாதவனென்றோ, அடிமையென்றோ, சுயாதீனனென்றோ, புறஜாதியானென் றோ, புறதேசத்தானென்றோ, ஆணென்றோ, பெண்ணென் றோ வித்தியாசமில்லாமல் கொலோ. 3: 11; கலா. 3: 28; "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி' யாகவே இயேசு வந்தார். யோவா. 1: 9.

213. இயேசுவின் ஒளிசெல்லக்கூடாத இடம் ஏதுவு மில்லை. முக்காலங்களுக்கும் பிரகாசிக்கிற 'நேற்று,' 'இன்று,' 'நாளை,' என்றில்லாதவராகவே யிருக்கிறார். எபி. 13 : 8. 'எங்கிருந்தேன்,' 'எங்குவந்தேன்.' 'எங்குபோ கிறேன்' என்னும் வினாக்களுக்கு இயேசு தமது போதனை சாதனையால் விடைபகர்ந்தார்.

214. உலகத்தின் சமநிலைப்பிரமாண மீறுதலுக்கும், தீமைகளுக்கும் காரணம் மனிதர் முற்பிறப்பில்செய்த பாவ மேயாம் என்றெண்ணுபவர் இந்நாட்டில் இப்பொழுதும் பல ருளர். இயேசுவின் சீஷரும் இதைப்பற்றி சந்தேகித்தவர் போல் ஒருமுறை அவரிடம்சென்று ஒரு பிறவிக்குருடனை சுட்டிக்காட்டி, "ரபீ, இவன் குருடனாய்ப்பிறந்தது, இவன் செய்த பாவமோ, இவனைப்பெற்றவர்கள் செய்த பாவமோ" என்று கேட்டார்கள். யோவா. 9: 2. இயேசுவின் வெளிச் சம் அங்கும் பிரகாசித்தது. அவர் மறுமொழியாக, 'இவ னோ, இவனைப்பெற்றோரோ செய்த பாவத்தினிமித்தமல்ல, எனது மகிமை விளங்கும்படிமட்டுமே இங்ஙனமானான்' என்றார். அதின்பொருள் யாதெனில், இவனது சரீரத்தின் குறை இவனது பக்திக்கிடையூறுயிராது. எப்படியெனில் இவன் கண்ணைக் குருடாக்கின நானே குறித்தகாலத்தில் அதைத்திறப்பேன். இவனது மனக்கண்ணையும் திறந்து நானே தேவகுமாரன் என்பதை அவனுக்கு வெளிப்படுத்து

வேன். காண்கிறோம் என்று நினைக்கிற பல வேதபாரகர், பரிசேயர் என்னை வெறும் யோசேப்பின் மகனாகமட்டும் காண்பதினாலே அவர்களுடைய மனக்கண்கள் குருடாயிருக்கும். இவனோ அவர்களிலும் பெரியவனாய், எனது ஊழியனாய் அவர்களால் வெகுபாடுகளை அனுபவிப்பான். இவன் மூலம் தேவமகிமை அதிகத் தெளிவாகும் என்றுரைத்தார். யோவா. 9.

215. உலகத்தின் துயர் நிலைமைகளிலெல்லாம் தேவ ரகசியம் அடங்கியிருப்பதைப் பலர் துவக்கத்தில் அறியாமல் நாள்செல்ல அறிவார்கள். 'நான் தேவனிடத்திலிருந்து வந்தேன்' என்னும் சொல்லால் முற்பிறப்பு மறுபிறப்பு என்பதை வேரறுத்தார்.

216. பாவம்செய்த மனிதர் தங்கள் ஜீவியத்தில் கடந்துபோன பாவத்தை தொலைக்க என்ன செய்வதென்றறியாமல் கலங்கித்திகைக்கவும், இயேசு 'பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை' அநேக செய்கைகளால் மிகத் தெளிவாக்கினார். இயேசுவிடம் ஓர் சமயத்தில் விபசாரத்தில் கையும் மெய்யுமாய்க்கண்டு பிடிக்கப்பட்ட ஸ்திரீயைக் கொண்டுபோய் நிறுத்த அவர் அவளை நோக்கி, 'நீ போ, இனி பாவம் செய்யாதே. நான் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை' என்றார். யோவா. 8: 10, 11. ஏனெனில் அவள் இனி, தன் மாம்ச இச்சையின்படி (மீறுதலுக்கிசைய) நடவாமல் மேலான பிரமாணமாகிய ஆவியின்படி நடந்து, கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவளாயிருந்தால் அவளைத் தீர்க்க நியாயம் ஏது? ரோம. 8 : 1.

217. பரிசுத்த பவுலும் தம்மைப்பற்றி 'பாவிகளில் பிரதான பாவி நான்' 1 தீமோ. 1 : 15 என்றார். அவரை நீதிமானாக்கியது இயேசுவன்றோ. யாராவது அப்படியல்லவென்று பவுலைக்குற்றப்படுத்தக்கூடுமோ? "தேவன்தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றம் சாட்டுகிறவன் யார்?" ரோம.

8: 33. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார்" 1 தீமோ. 1 : 15. "இழந்துபோனதைத்தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்." லூக். 19 : 10.

218. கருணை அல்லது கிருபை என்னும் பிரமாணத்தைக்கொண்டு தங்களை ஒன்று மற்றவர்கள் என்று நினைக்கும் மனுமக்களை தேவன் அன்றும் இன்றும் என்றும் பாவசாபத்தினின்று இரட்சிக்கிறார் என்பதையிட்டு சாட்சிகூறப் பலர் இல்லாமலில்லை. "ஆயினும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்" 1 கொரி. 15 : 10 கிருபையினாலே இயேசுவாகிய ஒளியைப்பற்றும் விசுவாசத்தைக்கொண்டு, எனது ஆத்துமா மாயா சம்பந்தத்தினின்று விடுதலையடைதலாகிய இரட்சிப்பைப்பெற்றேன். இது என்னுடைய சுய சாமர்த்தியத்தாலுண்டானதல்ல. இயேசுவுக்குள் தேவன் கொண்ட கிருபையின் ஈவு. எபே. 2 : 8.

219. "முன்னே நான் தூஷிக்கிறவனும், நசரேயனாகிய இயேசுவின் நாமத்துக்கு விரோதமாய் அநேக காரியங்களைச் செய்கிறவனுமாயிருந்தேன். தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி அதைப் பாழாக்கிவரவே, தேவன் தம்முடைய கிருபையினால் என் அறியாமையாகிய இருளை நீக்கத்தக்க ஒளியாகிய தமது குமார வடிவம் இயேசுவை எனக்குள் வெளிப்படுத்தவும், நான் எனது முன்னிலைமை முழுவதும் பிரயோஜனமற்ற குப்பையாகிவிட்டதே எனக்கண்டு திகிலடைந்து, அவர்பாதம் முகங்குப்புற விழுந்து "ஆண்டவரே, நான் என்ன செய்ச்சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்டேன். 1 தீமோ. 1: 13-17.

220. அதற்கு அவர் நான் அம்மட்டும் செய்ததெல்லாம் வீண் என்பதை அறியும் அறிவை நான் அடையத்தக்கதாக எனது சரீரக்கண்களைக் குருடாக்கி, நான் மற்றெவரையும் காணாமல் எனக்குள்ளேயே உற்றுப்பார்க்க மிக அவசியமான எனது ஆவியாகிய தீபம் அவிந்திருந்ததை

தமது தூய ஆவியால் எரியவைக்கவும் எனது மனக்கண் திறக்கப்பட்டு, ஆவியின் மாயை நீங்கியபடியால், நான் இளைய மகனைப்போல் ‘புத்தி தெளிந்தவனாய்’ லூக். 15 : 17. “தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்குமுன்பாகவும் பாவம் செய்தேன்” என்றேன். என் ஆவியில் அறியாமை ஒட்டியதாலே, அவருடைய கிருபையின் ஒளி எனக்கு இலவசமாய்க் கிடைக்கவும், என் சரீரக்கண்களிலிருந்து மட்டுமல்ல, மனக்கண்களிலிருந்தும் ஒளியை மறைத்துவந்த மீன்செதின்கள் போன்றவைகள் விழவும், நான் உள்ளும் புறம்பும் பார்வையடைந்து அநேகருடைய மனக்கண்களையும் திறக்கக்கூடிய அருளையும் கிருபையால் பெற்றேன். அப். 26 : 18.

221. இதுபோன்ற அநுபவங்கள் அருள்வேதத்தில் உண்டு. இயேசுவின் உடலைமட்டும் பார்க்கவகை தேடின குள்ளனான சகேயுவுக்கு அவன் விரும்பியதிலும் அதிக பெரிய ஆசீர்வாதம் கிடைக்கவும் தனது ஒளிப்பிடத்தை விட்டு அவன் சீக்கிரமாய் இறங்கி அவரைத்தன் வீட்டுக்கு அழைத்துச்சென்றான். மனிதருடைய உள்ளங்களிலிருப்பதை ஆராயும் இயேசுவின்கண் யோவா. 2 : 25 சகேயுவைப் பார்க்கவும் அவனது சகல நிலைமையும் ஒரு நொடிக்குள்மாறி, தனது ஆவிக்குள்பற்றிய மாயையின் பலனால் ஆத்துமா இச்சைக்குள்பட்டு, தனது காயத்தால் பிரமாணத்தைமீறி, அநியாயமாயும், திருடியும் பொருள்சேகரித்த குற்றம் முழுவதும் அவன் மனக்கண்கள்முன் வரவே, அவன் தனது குற்றத்தை இயேசுவினிடம் அறிக்கையிட்டு, ஆண்டவரே எனக்குத் திகில்பிடிக்கிறது, உமது அருட்பார்வை என்னைக் கொல்லுகிறது. நான் திருடன். ஆயத்துறையில் உட்கார்ந்து அரசாங்கப்பணத்தை அநியாயமாய்ச் சேர்த்தவன். இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன். உலகப்பொருட்களை இச்சித்து இப்படிக்கீழ் வழியை நோக்கக்காரணம் எனது தேவ அறிவுக்குரிய ஆவிக்குள்ளிருக்கும் மாயையே. ஆதலால், நான் திருடியதைத் திரும்பக்கொடுத்து, பொரு

ளாசையை யொழித்து, தானதர்மம்பண்ணக் கற்றுக்கொண்டேன் எனவும், இயேசு களிப்புற்று, ஆம், மனிதர் இழந்து போன ஞானஒளியை மறுபடி கொடுக்கவே நான் உலகில் வந்தேன், நீ என்னிமித்தம் உனது குறைகளைக்கண்டாய். கண்டதுமட்டுமல்ல, என் புது வைதலின்படி நடக்கவும் மனங்கொண்டாய். உனது பழைய மனம் திரும்பியது. ஆகையால் நான் தங்கவேண்டிய உனது சரீரமாகிய வீட்டுக்கும் எபி. 3 : 6. பாவமாயையினின்று விடுதலையாகிய இரட்சிப்பு வந்தது என மொழிந்தார். லூக். 19 : 1-10.

222. பிலிப்பி என்னும் பட்டணத்தில் ரோம அரசாங்க சம்பளம்பெற்று, தன் தொழிலுக்குக் கெடுதிவராமல் கரிசனையாய் நடந்துவந்த ஒரு சிறைச்சாலைக்காரன் இருந்தான். வீதியிலே இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பிரசங்கித்ததினாலே, அடிக்கப்பட்டு, வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்ட பவுலும் சீலாவும் இவனது பொறுப்பான காவலுக்குள் வைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டது. இவன் அவர்கள் கால்களைத் தொழுமரத்தில்மாட்டி, உட்காவலறையிலே பத்திரப்படுத்தி வைக்கவும், நடு இராத்திரியில் அடிக்கப்பட்டவர்களின் அழகிய குரலோசை பாட்டுருபமாய் எழும்பியதைக்கண்டு இவன் சற்று பிரமித்தான். இப்படி, துன்பத்தில் சந்தோஷம் கொடுக்கக்கூடியது எது ? என்று அங்கலாய்த்து நிற்கவே, சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் சடுதியிலே அசையும்படி பூமி அதிரவும், கதவுகளெல்லாம் திறவுண்டு எல்லாருடைய சங்கிலிகளும் கழன்றது. மனுஷீக வல்லமைக்குமேலாய் ஒரு பெரிய தெய்வீக சத்துவம் நசரேய மார்க்கத்திலுண்டு என்பதை இவன் அறியாதவனானபடியால் தனக்கே தீங்கிழைக்க முயலவும், பவுல் மிகுந்த சத்தமாய் ‘ தற்கொலை செய்யாதே. நாங்களெல்லாரும் இங்கேயே இருக்கிறோம் ’ என்றார். இருளைமாற்ற விளக்குகளைக்கொண்டுவரச் சொல்லுகையில், இவனது மனஇருளையும் மாற்ற ஞானவிளக்கும் பிரகாசித்தது. ரோம அதிகாரத்தை அசட்டைசெய்யக் கூடிய சத்துவம் இயேசுவுக்

கிருக்கையில், நான் இதை அறியவில்லையே. எனது ஆவிக்குள்ளும் இருள்தானே இருக்கிறது. ஆகையால், "ஆண்டவமாரே, எனது மனஇருள் நீங்க நான் செய்யவேண்டியதென்ன" என்றான். பவுல் 'இயேசுவே கர்த்தர் என்று நம்பு' எனவும், இவன் தன் வீட்டாருடன் தீட்சைபெற்று, மிகக்களிப்புற்று வாழ்ந்தான். அப். 16 : 19-34.

20. இயேசுவே வழி.

223. அறியாமையினால் பல தீமைகளைப் புரிந்து தங்களுக்கும் ஜனசமூகத்திற்கும் வெகு தீங்கிழைத்துக்கொண்டிருப்பவர்களை நோக்கி, இயேசு "நீங்கள் என் உபதேசத்தில் நிலைகொண்டிருந்தால், உங்கள் செய்கை, அறியாமை (மாயை)யினாலுண்டானது என்பதை அறிவீர்கள். உண்மையும் உங்களுக்குப் புலப்படும். உண்மையை யடையாவிடில் முடிவுமட்டும் அடிமைத்தனத்திற்கே கட்டப்பட்டு விடுதலையடையாமலிருப்பீர்கள். சத்தியத்தை அறிந்தாலோ நிச்சயமாகவே பற்றறுத்தல் (நிர்வாண) ஆகிய விடுதலையடைவீர்கள்" என்றார். யோவா. 8: 31,32.

224. பொய்யிலே பிறந்து, பொய்யையே நாடி அதற்கிசைய நடந்தோருக்கு தங்கள் மதியீனமாகிய இருளை நீக்கும் ஒளி சத்தியமாகிய இயேசுவே. "நானே சத்தியம்" என்றவரை ஏற்றுக்கொள்ளாதவன் எவ்வளவு ஞானிபோல் தோன்றினும் பொய்யனே யாவன். இயேசுவை ஏற்றுக்கொண்டவன் முக்தியாகிய விடுதலை யடைந்தவன். அவரை ஏற்றுக்கொள்ளாதவன் ஜீவன் இல்லாதவன். யோவா. 3:36; 1 யோவா. 5:12.

225. உலகத்தில் மனிதர் நடக்கவேண்டிய வழி எதுவென்றறிய பலர் பலகாலங்களில் முயற்சி செய்தனர். ஸ்தோயிக்கர் என்னும் கிரேக்க ஞானிகள் பலர் அக்காலங்களில் தங்கள் ஞானமே (நிதானம் Reason) முக்கியம் என்று வற்புறுத்தினர். மனிதர் சந்தோஷமற்றவர்களாய், சுக

துக்கங்களில் வேறுபடாத தன்மையுடையோராய், தங்களைச் சுற்றி நடக்கும் எக்காரியங்களையும் சட்டை செய்யாது நடக்கவேண்டுமென்பதே அவர்கள் பிரமாணமாயிருந்தது. இன்னொரு வகுப்பார், உடலைத் தவிர மனிதனுக்கொன்றுமில்லை. ஆகையால் புசிப்போம், குடிப்போம். சாகும் பின்னால் நடப்பதைக் கண்டதார் என்றார்கள். பரிசேயர் உயிர்த்தெழுதல் உண்டு, ஆகையால் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்க, சதுசேயர் தேவதூதனுமில்லை, ஆவியுமில்லை, உயிர்த்தெழுதலுமில்லை, எல்லாம் மாம்சம்தான் என்றார்கள். இப்படியாக, மனிதன் எப்படி நடக்கவேண்டுமென்பதைப்பற்றிய இடத்திலும் இருள்பற்றியே இருந்தது.

226. இயேசுவாகிய ஒளி இங்கும் பிரகாசித்தது. இயேசுவைப்பற்றி முன்னோரான தீர்க்கர்கள் வசனிக்கையில் அவரது தொழில் முறைகளைப்பற்றி, "இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை யளிக்கவும் என்னை அனுப்பினார்" ஏசாயா 61: 1 என்றெழுதினார்கள். ஆவி, ஒளி இழந்த பின்னால் ஆத்துமா பாதாள தேசத்தை நோக்கவும், அத்திசைக் கதிகாரியான பிசாசானவன் மனுக்குல முழுவதையும் தனக்கடிமைகளாக்கி, கொடுங்கோலரசாட்சி செய்யவும், இயேசு அங்கு சென்று, 'அவனைத் தமது மரணத்தால் ஜெயித்து' எபி. 2: 14, 'சிறைப்பட்டிருந்த' சகலருக்கும் பெரிய விடுதலையைக்கூறி, ஆடுகள் முழுவதையும் அடைப்புக்குள்ளிருந்து வெளியே விட்டபின்பு அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறார். ஏசாயா. 61: 3; யோவா. 10: 4.

227. எவனொருவன் அவருடைய சத்தத்தைக்கேட்டு, தனது விடுதலையை (முக்தி நிலை) அடைகிறானோ அவனுக்கு அவரது குரலோசை தெரியுமாதலால் இச்சத்தத்தைக் கேட்டவுடனே அவன் அவருக்குப் பின்சென்று, அவர் நடந்ததுபோல தானும் நடக்க முயலுவதினாலே "நானே வழி" என்னும் அவரது சொல்லை உறுதிப்படுத்துகிறான்.

228. அன்றியும், இயேசுவின் உபதேசத்திற்கிசைய நடக்கும் எவனும் அந்நடக்கையையே கடைப்பிடித்தொழுகின், எளிதில் சத்தியத்தைக் காணத்தக்க கூர்மையான தெளிந்த மனக்கண்களை யடைந்து அறியாமையாகிய மாயை நீங்கப்பெற்று தனது ஆத்துமாவுக்கு விடுதலையை சம்பாதிப்பதினாலே யோவா. 8: 31, 32ல் சொல்லிய அநுபவ நிலைக்கு வருவான். அப்பொழுது "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" யோவா. 14 : 6 என்னும் வாக்கியத்தின் கருத்தை அறிந்துகொள்ளுவான்.

229. இயேசுவின் போதனை சாதனை முதலியவற்றை தனது ஜீவிய பாதையாக்குகிறவன் எளிதில் சத்தியத்தைக் கண்டடைந்து, அழியாத நித்திய ஜீவனைப் பெற்றநுபவிக்கும் 'ஜீவன் முக்தன் ஆகிறான். இதை வாசிக்கும் நண்பா! இதை எழுதும் அடிமைபோல் நீயும் இயேசுவை உன் 'வழி' யாகக்கொண்டால், உனது மாயையாகிய மனதிருள் நீங்கி, ஜீவநிலையாகிய 'முக்தி நிலை' இப்பொழுதே பெறுவாய்.

உலகிலே பிறந்த முன்னோர்
ஓதிய கலைகளெல்லாம்
நிலையதாம் ஜோதிதன்னை
நிசமதாய் சொல்லவில்லை
பலவித பேதமாக
பங்கமாய்க் கூறுசெய்தே
அலகைபோல் பொய்யைப்பேசி
அருநரகழுந்திப் போனார். (சங்கராச்சாரியார்)

230, வழியே நடந்தால், சத்தியத்தைக் கண்டடைந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கலாம். இயேசுவாகிய இந்த வழியைவிட்டு வேறு எங்கு செல்லுகிறவனும் பிதாவாகிய அன்பு நிலைமைக்கும் அருளளிக்கும் ஊற்றிற்கும் வந்தெட்டுவதில்லை. யோவா. 14: 6. ஆவி, ஆத்துமா, சரீரம் இவைகளில் நுழைந்த ஆணவம், காமம், மாயம் என்னும் மும்மலங்களையும் மாற்றவே, இயேசு தமது நினைவு வார்த்தை, செய்கைகள் மூலமாய் உலகத்திற்கு வழியைக் காட்டினார்.

231. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே" பிலி. 2: 5 எல்லா மனிதருக்குள்ளுமிருந்தால், 'உலகமே பரதீஸ்' ஆகிவிடும். தாம் நடந்த பிரகாரம் மனிதர் யாவரும் நடந்தால், உலகில் யாதொரு தீமையுமிராதென்பதை ரூபிக்க ஒருமுறை அவர் தம்மைச்சூழ்ந்து நின்றோரை நோக்கி, "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" யோவா. 8 : 46 என்று கேட்டார். இந்த உயர் நிலைக்குரியோர், மற்றொருவருமில்லை யென்பதையும் தெளிவாய் ரூபிக்கவேண்டி, தம்மண்டை ஓர் முறை வேதபாரகர், பரிசேயர் இழுத்துவந்த 'கற்புநெறி தவறிய ஸ்திரீ'யைப்பற்றிய சந்தர்ப்பத்தில் 'உங்களில் குற்றமில்லாதவன் இவளைக் குற்றப்படுத்தி, அதற்கடையாளமாக இவள்மேல் கல்லெறியக்கூடுமோ' என்று கேட்க, அக்கேள்வி அவர்களை வெட்கத்திற்குள்ளாக்குமென்பதை அவர் அறிந்து, அவர்கள்மேல் பரிதாபம் கொண்டு, யார் யார் போகிறார்கள் என்பதை கவனியாதவர் போல் குனிந்து தரையிலே எழுதவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். யோவா. 8: 8-10.

232. வல்லமை, அதிகாரம், அரசாட்சி என்றுமட்டும் நாடிய ரோமர்களையும், ஞானம், ஞானம் என்று உலக அறிவிலேயே பிரமைகொண்ட கிரேக்கரையும், மார்க்கம், சமயம் என்று மிக வைராக்கியம்கொண்ட யூதரையும் இயேசு நோக்கி "நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்," நான் உலகமுழுவதற்கும் கற்றுக்கொடுக்கவேண்டிய பல பாடங்கள் என்னிடத்தில் உண்டு. அதைப்படித்து என்னைப்போலவே நடக்கக் கருதுகிறவர்கள் தங்கள் "சுமை நீங்கி இளைப்பாறுதல்" அடைகிறதுமட்டுமல்ல, உலக அலுவல்களில் பிரவேசிக்கும்போதும், ஒன்றும் பாரமாயிராதபடி "எனது நுகம் மெதுவாயும் எனது சுமை லகுவாயும் இருக்கிறது." மத். 11:28-30 என்றார்.

233. கிரேக்க தேசத்தார் 'சத்தியம்' (மாறாத உண்மை, வேற்றுமையில்லாத மூலகாரணம்) எங்கே, எங்கே

என்று தேடினர். இந்தியர் 'பக்திமார்க்கம்,' 'ஞானமார்க்கம்,' 'கர்ம மார்க்கம்' என்று தங்கள் மார்க்க விசாரணைக்கு பல வழிகள் ஏற்படுத்தி மெய் வழி எது என்றறியாமல் திகைத்தார்கள். இவ்விரண்டு வகுப்பாருக்கும் இடைப்பட்ட பலஸ்தீனு தேசத்து யூதர்கள் 'ஜீவன் எங்கே,' சாகாமலிருப்பது எப்படி,' 'ஜீவ விருக்ஷக் கனியைப் புசிப்பது எப்படி' என நித்திய ஜீவன்மேல் வாஞ்சைகொண்டேங்கினார்கள். இயேசு ஐரோப்பா, ஆசியா இவற்றிற்கு இடையே வந்து மேற்கே பார்த்து, "நானே சத்தியம்" என்றும், கிழக்கை நோக்கி, "நானே வழி" என்றும், மத்தியிலிருந்த யூதரை நோக்கி, "நானே ஜீவன்" என்றும் கூறினர். யோவா. 14: 6.

234. எக்காலத்திலும் உலகில் எம்மனிதனுவது இயேசுவைக் குற்றப்படுத்தத் துணிந்ததில்லை. தூரப்பார்வைக்கு இவர் கன்னிமரியாளின் மகன்போல் தோன்றினும், அவரை நெருங்கி, தங்கள் ஜீவிய சுத்தத்தில் இயேசுவைப் போலாக வேண்டுமென்று, விரும்புகிறவர்கள், அவரைப் பேதுரு கொண்டதுபோல் "ஜீவனுள்ள தேவ சுதன்" மத். 16 : 16 எனக் காண்பார்கள். 'காயங்களில் விரலை யிட்டாலொழிய நம்பமாட்டேன்' என்னும் தோமாக்களும் உயிர்த்தெழுந்த இயேசுவைக் காண்கையில் "என் ஆண்டவரே, என் தேவனே" யோவா. 20 : 28 என்பார்கள். உலகில் தோன்றிய எந்த ஞானியாவது, நாசரேத்தூர் இயேசு பேசினதுபோல பேசினதில்லை. யோவா. 7: 46. பேசத்துணியவும் கூடாது. குற்றப்படுத்தப் பார்க்கிறவன் அவரைப் போல நடக்க முயலாதவன் மட்டுமே. அவரது சொல்லைப் பொய்யாக்க எவராலும் கூடுகிறதில்லை. அவரை அளவிடப் போகிற மனிதர் எவரும் தாங்களே அவரால் அளக்கப்பட்டுப் போகிறார்கள். மற்றெவரும் அவரது தராசில் நிறுக்கப்படும்போது குறையவே காணப்படுகிறார்கள். ஆதலால் "இயேசுவே வழி" என்பதை மறுக்க எவராலாகும்? அதினுலேயே பேதுரு உரத்த சத்தமாய் "அவராலேயன்றி வேறொ

ருவராலும் இரட்சிப்பில்லை." சுயாதீன நிலை கிடையாது. பூவுலகின் கண்ணுள்ள எந்த மனிதருக்கேனும் முக்தியாகிய விடுதலைக்கு இவரது திருநாமத்தைத்தவிர மற்றெந்த நாமமும் அருளப்பட்டதில்லை என்றார். அப். 4: 12.

235. "நானே வழி" என்று துணிந்து சொல்ல இம்மட்டும் எவரும் எழும்பினதில்லை. இயேசுவாகிய வழியே நடந்தால் வீடடைய முடியாதுஎன்று கூறவும் எவருமில்லை. வேறுவழியைக் காட்டுகிறவரும் இல்லை. அப்படியானால் இவ்வழியை அசட்டைப்பண்ணக் காரணம் என்ன?

21. ஆத்தும ஈடேற்றத்திற்கடுத்த இயேசுவின் செய்கை.

236. ஆவிக்குரிய உலகமாகிய பரலோகத்திலிருந்த இயேசு ஆத்தும ஸ்தானமாகிய பூவுலகில் வரவும், மனிதர் பாவமாய்கையில் சிக்கி, தங்கள் இருப்பிடம்விட்டு, மரித்தோரின் திசையாகிய பாதாளலோகத்தில் மூழ்கிக்கிடப்பதைக்கண்டு இவர்களை மேலோகத்திற் கிழுப்பதெங்ஙனமென யோசித்தார். பூமிக்கடுத்த காரியங்களையே பலபோதும் பேசியும் இவர்கள் கீழ்த்திசைச் சிந்தையுடையோராய் மட்டுமிருந்தபடியால் அவர் அவர்களை நோக்கி: "பூமிக்கடுத்த காரியங்களை உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்றார். யோவா. 3: 12.

237. சகல தீமைகளுக்கும் காரணம் இச்சையென்றும், இச்சை அறியாமையிலிருந்துண்டாகிறதென்றும் முன் கண்டோம். நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் உலகத்தில் மற்ற மார்க்கங்களைப்போலவே 'செய்யாதே, செய்யாதே' என்று செய்கைக்கடுத்த தீமைகளைக் கண்டித்தது. பத்துக்கற்பனைகளில் 1, 2, 3, 4, 6, 7, 8, 9 இந்த எட்டும் 'செய்யாதிருப்பாயாக' என்றே முறையிடுகிறது. 5ம் கற்பனைமட்டும் 'தந்தைதாய்ப் பேண்! என்று சொல்லுகிறது. மற்ற ஒன்பதும் சரீரத்தைத்தாக்கிய ஆணவமாகிய மீறுதலைக் கண்டிக்கிறது.

238. இந்த ஒன்பது கற்பனைகளையும் மீறக்காரணம் பத்தாவதில் சொல்லப்பட்டிருக்கும் 'இச்சையே.' ஆகையால் முடிவில் 'இச்சியாதே' என்று கட்டளையிடப்பட்டது. இதொன்றே ஆத்துமாவுக்கடுத்த (காமம்) இச்சையைக் கண்டிக்கிறது.

239. மனிதனுடைய உயர்நிலைக்கடுத்த ஆவிக்குரிய பாவத்தை பழைய ஏற்பாடு கண்டிக்கவில்லை. இந்த இச்சைக்குக் காரணம் 'ஆவிக்குள் அறியாமை' யாக்கும் என்பதை எவரும் உணர்ந்ததில்லை. ஆகவே, நியாயப்பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்துகிறதில்லையென்று பவுலடியார் சொல்லுகிறார்.

240. இயேசு ரக்ஷகருக்கு முன்னோடியாகிய தீட்சை கொடுக்கும் யோவானைப்பற்றி அவர் 'நியாயப்பிரமாண முறைகளுக்கிசைய இவனிலும் பெரியவன் எவனும் எழும்பினதில்லை. ஆயினும் (ஆத்துமஸ்தானம்) இரண்டாம் வகுப்பில் படிக்கிற முதற் பையனைவிட, மூன்றும் (ஆவிஸ்தானம்) வகுப்பிலிருக்கும் கடைசி மாணவன் பெரியவனாயிருக்கிறதுபோல, பரலோக இராட்சியத்தில் மிகவும் சிறியவன் இவனிலும் பெரியவனாயிருப்பான்' என்றார். மத். 11: 11.

241. ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றிலும் பற்றிய தீமையைக்கண்டிக்கும் பிரமாணமே பூரண நிலையுடையதாகுமாகையால், மோசேமூலம் கொடுக்கப்பட்ட மறை குறையுள்ளதென்று அன்பர் மொழிந்தார். ஆவிக்குள் பற்றிய மாயத்தை யுணர்த்த இயேசுவே வந்தபடியால் இவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. ரோம. 10: 4.

242. மோசேமுதலிய முன்னோர் மூலம் அருளப்பட்ட திருமறைகள் ஆவிக்குரிய குறைகளைப்பற்றி உரையாமல் இருதய கடினத்தினிமித்தம், குறைந்த வெளிச்சமுடைய சந்திரனைப்போல மட்டும் பிரகாசித்தபடியால்

இயேசு தமது மொழிகளையெல்லாம் முன் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது. "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (But I say unto you) என்று துவக்கி, முந்தினதைப் பழமையாக்கினார்.

243. ஆகையால் திருச்சபையாகிய ஸ்திரீ கலா. 4: 26 தனது சிரசில் 'நீதியின் சூரியனாகிய மல். 4: 2 இயேசுவையும், அவரது அடியாராகிய விசுவாசிகள் பன்னிருவரையும் அணிந்தவுடனே, குறைந்த வெளிச்சமுடைய சந்திரனாகிய நியாயப் பிரமாணத்தைத் தன் காலின்கீழ் மிதித்திருப்பதாக, பரமாத்ம தரிசியாகிய யோவான் கண்டு களித்தார். வெளி. 12: 1.

244. (யதா தேவா, ததா பக்தா) தெய்வம் எப்படியோ, தொண்டனும் அப்படியே என்பது உண்மை. காணப்படக்கூடாத தெய்வத்தை, மனிதர் யாவரும் உருவகப்படுத்தியே தியானிக்கிறார்கள். கடவுள் இயேசுவைப்போல் இருப்பார் என்று நினைத்து அநுதினமும் இயேசுவை தியானம் செய்கிறவர்கள் நாளடைவில் இயேசுவைப்போலவே ஆவார்கள். அவரை கிருஷ்ண ரூபத்தில் தியானிப்பவர்கள், அவனைப்போல் கறுப்பனாராவார்கள். ராம ரூபத்தில் தியானித்தால் அச்சாயலையும், கல், செம்பு, வெள்ளி முதலிய ரூபத்தில் தியானிக்கில் அவைகளைப்போல் ஸ்மரணையற்ற நிலையையும் அடைவார்கள்.

245. ஒரே கடவுளை அவர் விரும்பும் ரூபத்தில் தியானிக்க மதியற்று, நம்தேசத்தவர் தங்களுடைய சாயல்களுக்கொப்பாய் தெய்வங்களை யுண்டுபண்ணினர். காமலீலையாடும் உருவத்தை தியானிக்கிறவன் இச்சையை ஜெயிப்பது எப்படி? பெண்குறியை தங்கள் நெற்றிகளில் வரைந்து மகிழும் அறிவீனம் நம்தேசத்தை விட்டொழிவதெப்போ? ஆண்குறியை லிங்கமென்று அழைத்து அதற்கு எண்ணெய் பூசிப் பணியும் மதியீனம் நம் ஜனத்தைவிட்டு நீங்குவதெப்போ? இரக்ஷகா! சீக்கிரம் அந்தவேளை வரட்டும்.

246. கடவுளைப்பற்றிய தப்பான அபிப்பிராயமே சகல தீமைகளுக்கும் காரணம். ஆதலால் இயேசு இந்த மேலான உபதேசத்தையே நாட்டவிரும்பினர். அடிக்கடி தம்மிடம் வந்தோரிடம் "நீங்கள் தப்பாய் எண்ணுகிறீர்கள்" மத். 22: 29-33, மாற். 7: 9-13 என்றே கூறினர். பலர் இக்காலத்திலும், (முகம்மதியர்) கடவுளை, மனிதருக்கு யாதொரு தொந்தமில்லாத தூரப்பொருளாக்கி (transcendent view of God) அவரை அணுக எவராலும் கூடாது என்கின்றனர். இயேசுவோ, "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்னும் வார்த்தைகளால் உடையவனுக்கும் உடைமைக்குமிருக்கும் சம்பந்தத்தை 'பிதா புத்திர' நிலைமைக்கு நெருக்கினர்.

247. நீங்கள் கடவுளை ஆண்டவரென்றும் தேவனென்றும் சொல்லுகிறீர்கள். நான் அவரைப் பிதா என்கிறேன். நீங்கள் எல்லாரும் என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும். ஆயினும் நான் தனித்திரேன். என் பிதா என்னுடனேகூடயிருக்கிறார். யோவா. 16: 32. இப்படிப்பட்ட பல சொற்களால் மனிதர் யாவருக்கும் கடவுளே பிதா என்றும், ஆதலால் இவர்கள் யாவரும் சகோதரரேயாம் என்றும் விளக்கினர். தெய்வம் தனது பிதா என்னும் அறிவை அடைந்தவன் தனது கிரியைகளை சுத்திகரியாமலிருப்பானோ! அசுத்தனுக்கு அவரை உரிமையாக்க நியாயமில்லையே.

248. தமது வாய்மொழியால் கடவுளைப் பிதா என்று சொல்லியதைத் தமது நடக்கையால் உறுதிப்படுத்தினர். பிதா செய்கிறதாகத் தாம் காண்கிறதெதுவோ அதையே தாமும் செய்கிறதாகச் சொன்னர். யோவா. 5: 19. தாம் ஒன்றும் சுயமாய் செய்யாமல் தமக்குள்ளிருந்த பிதாவின் ஏவுதலின்படியே சகலத்தையும் செய்தார். யோவா. 5: 30. ஆதலால் "நானும் பிதாவும் ஒன்றுயிருக்கிறோம்" யோவா. 10: 30 என்றும் சொன்னர்.

249. தமது நினைவிலும் (சிந்தையிலும்) பிதாவையே முன்வைத்தார். பேதுரு ஒருமுறை அவரது சிலுவையி

னின்று அவரைப்பிரிக்க முயன்றபோது அவனது சிந்தை பிதாவுக்கடுத்ததாயிருக்கவில்லை. மனிதர் கடவுளைப்போல் சிந்திக்கவேண்டுமென்பதே இயேசுவின் பிரமாணம். பேதுரு ஆவிக்கேற்றபடி சிந்தியாமல், உடலைமட்டும் காக்கமுயன்று, மாம்ச சிந்தையினின்றுதித்த யோசனையைக் கூறியபடியால், அவர் அவனைக் கடிந்து அவனையே 'சாத்தானெ'ன்றும் அந் நினைவு தகாதென்றும், தேவனுக்கேற்றவைகளையே சிந்திக்க வேண்டுமென்றும் கண்டித்தார். மத். 16 : 23.

250. தாம் சிந்தித்ததுபோல் மனிதர் சிந்தியாததைக்கண்டு, அவர் அடிக்கடி விசனமடைந்தார். பிதாவைப் பற்றித் தமக்குண்டாயிருந்த விசுவாசம் மற்றெவருக்குமில்லாததைக்கண்டு அடிக்கடி ஆச்சரியப்பட்டார். சீஷர்களை அவர் கடிந்துகொண்டபோதெல்லாம் அவர் உபயோகித்த சொற்கள் " அற்ப விசுவாசிகளே " " ஏன் உங்களுக்கு விசுவாசமில்லாமற் போயிற்று?" " ஏன் பயப்பட்டீர்கள்?" என்பதேயாம். மாற்கு 4: 40. " ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தை சிந்திப்பானேன்." சங். 2:1. " மனுப்புத்திரருடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்றறிய வேண்டுமென்றும், தங்கள் சிந்தனைகளிலே வீணரானார்களென்றும்" வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ரோம. 1: 21, 28.

251. பூமிக்குரிய சிந்தைகளிலுழன்று நடக்கும் ஜனங்கள் தம்மைப்போல் தெய்வீக சிந்தையடையக் கூடுமென்றும், அப்படி யடையாவிட்டால் வீடு பெறுவது கூடாதென்றும் இவர் போதிக்கவே, உலகோர் அவரைப் பயித்தியக்காரனென்று நினைத்தார்கள். மாற்கு 3:21. தங்களுடைய ஜீவியப்பிசகையும், இருதயக் குருட்டாட்டத்தையும், தெளிவாய் வேதமொழிக்கிசைய எடுத்துரைக்கவும், நாசரேத்தூரார் கோபமூண்டு, எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்குக் கொண்டுபோனார்கள். லூக். 4:23-30.

252. இக்காலங்களிலும் தங்கள் சிந்தைகளில் வீணரானோருடைய மதியீனங்களை எடுத்துரைக்கும் இயேசுவின் பிள்ளைகள்மேல், தீங்கனின் மக்கள் கடுங்கோபமுண்டு, ஊருக்குப் புறம்பே துரத்தப் பிரயாசப்படுவதைக் காண்கிறோம். ஆயினும் இயேசு அப்படிப்பட்டவர்கள் நடுவினின்று கடந்து போய்விட்டதுபோல, அவருடைய பிள்ளைகளுடைய தலைமயிர் ஒன்றையாகிலும் தொட அவர் இடங்கொடாமல் அவர்களைத் தாம் குறித்தகாலம் மட்டும் காக்கிறார்.

253. தீமையில் பழகியவர்களை நல்வழிப்படுத்தவும், அவர்களைத் தீமையினின்று காக்கவும்வேண்டி, அவர் எப்போதும் “நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார்.” அப். 10: 38. மனிதரோ அவர்களது அறியாமையினிமித்தம் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்தமற்ற மனிதரைத் தம்மைப்போலாக்கவே இயேசு வந்தார். அவர்களோ அவரை வெறுத்தார்கள்.

254. இராக் காலப் பறவைகளைப் பகற் குருவிகள் கொத்தித் துன்பப்படுத்துவதுபோல, உலகத்தார் ஆவிக்குரியவரை வெறுத்து இம்சித்தார்கள்.

22. மெய்யடியார்களை உலகம் பகைத்தல்.

255. “ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் (இருளல்ல) நல்லதென்று தேவன் கண்டார்.” ஆதி. 1: 3-5. “அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.” யோவா. 1: 5. “ஆகையால் தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்றும், இருளுக்கு இரவு என்றும் பேரிட்டு, அவைகளை வெவ்வேறாகப் பிரித்தார்.” ஆதி. 1: 5.

256. “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும், மனுஷருடைய கிரியைகள் (இருளுக்குரிய) பொல்லாங்காயிருக்கிறபடியால், அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்

புவதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாகிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் பாவக் கிரியைகளாகிய விபசாரம், அசுத்தம், பொய் முதலியவைகளைக் கண்டிக்கிற மெய் வழியை நாடி, "உலகத்தின் ஒளி"யாகிய இயேசுவிடம் வராமல் கறுப்பனும் இருளனுமாகிய சாத்தானிடமே தங்கியிருக்க விரும்புகிறான். யோவா. 3: 19, 20.

257. கதரேனருடைய நாட்டில் இயேசு சென்று, ஒரு மனிதனுக்குள்ளிருந்த அசுத்த ஆவியைத் துரத்தி, அவனைப் பாவக்கட்டிலிருந்தும் விடுதலையாக்கினார். அதின் பயனாய் ஏறக்குறைய 2000 பன்றிகள் கடலில் பாய்ந்து மடிந்தன. அந்நாட்டாரோ தங்களுக்கு நேரிட்ட பொருள் நஷ்டத்தினிமித்தம் அவரிடம் வந்து, அவர் தங்கள் எல்லைகளைவிட்டுப் போய்விடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். மாற்கு 5: 1-20.

258. ஆவிக்குரிய பாக்கியங்களைவிட, சரீர நன்மைகளை மட்டும் விரும்பும் மனிதன் இயேசுவையும் அவரது தொண்டர்களையும் பகைப்பது இயற்கையே. சிநேகிதனே, நீ கிறிஸ்துமார்க்கத்தைப் பகைக்கக் காரணம் எதுவென்று யோசித்துப்பார். உனது அசுத்த ஜீவியத்திலேயே நிலைத்திருக்க விரும்புகிறதினாலல்லவா? நன்மைக்கு விரோதமாய் நீ எழும்பி, அவரை உன் ஊரைவிட்டுப் போய்விடும்படி வேண்டிக்கொள்ளக் காரணம் உனது சுய நயத்தினின்று தோன்றும் இச்சையல்லவா?

259. எவனொருவன் இயேசுவைப் பகைக்கிறானோ அவனுக்குள் பிசாசு குடிகொண்டிருக்கும். கிறிஸ்துமார்க்கத்தைப் பகைக்கும் எந்தப் பட்டணத்திலும் துன்மார்க்கம் மேற்பட்டு நிற்கும். ஆகையால் தங்கள் கிரியைகளைவிட்டுத் திரும்ப மனமில்லாமல் இன்னும் பாவத்தையே செய்ய விரும்பி இருளிலே நிலைகொண்டிருக்கிறார்கள்.

260. இயேசு அப்படிப்பட்டவர்களை நோக்கி, "எருசலேமே, எருசலேமே எனது திருவுரைகளைக் கூற வந்த

நல்லோரைப்பகைத்து, அவர்களைத் துன்பப்படுத்தி, கொலை செய்யத்தேடி, உனது நன்மைக்கேதுவாய் நான் அனுப்பிய என் பிள்ளைகளைக் கல்லெறிய முயலுகிற நகரமே, எத்தனை தரமோ (உனக்கு நேரிட்ட துன்பங்களில், உனக்கு விரோதமாய் சத்துருக்கள் எழும்புகையில்) நான் உன்னை சேர்த்துக்கொண்டு, பெரும் பாக்கியத்தைத்தர மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று." மத். 23 : 37 என்கிறார்.

261. இதைப்படிக்கும் நண்பா! சற்று உன்னை ஆராய்ந்து பார். உனக்கு நன்மையைத்தர எவ்வளவாய்க் கடவுள் விரும்பினார். உனக்கு நேரிட்ட துன்பங்களில் அவர் உன்னைக்காத்து, உனது நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, நன்மையினாலும், காருண்யத்தினாலும் உன்னை அலங்கரித்திருக்க, நீ அவரைப் பகைக்கலாமா? உனது வாழ்வுக்கெல்லாம் காரணம் கிருபைக் களஞ்சியமாகிய இயேசுவல்லவா?

262. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். ....சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." யோவா. 1: 11. "சத்தியத்தைக்குறித்து சாக்ஷி கொடுக்க," தாமே "சத்தியமாக" வந்தார். "சத்தியவான் எவனும் அவரது சப்தம் கேட்கிறான்." யோவா. 14 : 6 ; 18-37. பொய்யை நாடுகிறவன் அச்சத்தத்தையும், சத்தியத்தையும் ஏற்றுக்கொள்வதெப்படி?

263. ஒரு பட்டிக்காட்டான் பொருட்காட்சி சாலை ஒன்றில் சென்றான். சித்திரம் தொங்கிய அறையைப் பார்த்து வெளியேறுகையில் முறுமுறுத்து 'சீ நயமில்லை' என்றதைக் காவற்காரன் கேட்டு இவனிடம் 'சிநேகிதனே! நயமில்லாதது படமல்ல, அது நீயே. நீ படத்தை அளக்கவில்லை. படம் உன்னை அளந்துபோட்டது. இப்படங்களின் அருமையை மதிக்கத்தக்க சத்துவம் உனக்கில்லை' என்றான்.

264. ஒளியாகிய இயேசுவைப்பார்த்து குறைகூறும் எவனும் தனது மனதிலிருக்கும் குறைவையே வெளிப்

படுத்துகிறான். பச்சைக்கண்ணாடி வழியாய்ப் பார்க்கிறவன் யாவையும் பச்சையாயும், மஞ்சள்நிறக் கண்ணாடியில் வெள்ளைப்பொருளை மஞ்சளாய்க் காண்பதும் பொருளின் குற்றமாகாது. இயேசுவோ ஆவிக்குரியவராயிருந்ததினிமித்தம் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானித்தார். அவரோ மாம்சத்துக்குரியவர்களால் ஆராய்ந்து நியானிக்கப்படவில்லை. 1 கொரி. 2 : 15.

23 "வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக."

265. "தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது" மத். 1 : 22. "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" என்று தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது." மத். 2 : 15 ; "நசரேயன் எனப்படுவார்.......... நடந்தது" மத். 2 : 23.

266. இயேசு வியாதியஸ்தரை சுகப்படுத்தவும், அதைப்பற்றியும் "அவர்தாமே நமது பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நமது நோய்களைச் சுமந்தார்" என்று ஏசாயா 53: 4-ல் சொன்னது, மத். 8: 17-ல் நடந்தது என்றும்; ஊழியக்காரனாகிய மனுஷனை நீட்டச் சொல்கையிலும் ஏசாயா 42: 1-ல் சொன்னது, மத். 12: 17-ல் நடந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

267. அவருடைய போதனைகள் உபமான உபமேயங்களால் நிறைந்திருந்ததும் வேதவாக்கிய நிறைவேறுதலாகவே கூறப்படுகிறது "என் வாயை உவமைகளால் திறப்பேன். உலகத் தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்றும் தீர்க்கதரிசியால் சங். 78: 2-ல் சொன்னது, மத். 13 : 35-ல் நடந்தது.

268. மூன்று வருஷமுடிவில் எருசலேம் நகரத்திற்கு ஓர் கழுதையிலேறிப் போன சம்பவமும் முன்னறிவிக்கப்பட்டது. "இதோ உன் இராஜா சாந்த குணமுள்ளவராய்

கழுதையின் மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று தீர்க்கதரிசியால் சக. 9: 9-ல் சொன்னது," மத். 21 : 4-ல் நடந்தது.

269. தம்முடைய செய்தியை உலகம் ஏற்றுக்கொள்ளாததற்கும் வேத ஆதாரத்தைக் காட்டினர். "கர்த்தாவே எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? ஏசா. 53: 1. அவர்கள் கண்களினால் காணாமலும் இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியம் ஆக்காமலும் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தை கடினமாக்கினார்' என்றும், ஏசாயா தீர்க்கதரிசியால் ஏசா. 6: 9,10-ல் சொன்னது," யோவா. 12 : 38-41-ல் நடந்தது.

270. குற்றமற்ற தம்மை மனுக்குலம் பகைத்ததைக் கண்டு "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்கள் வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படி இப்படி நடந்தது" என்றார். யோவா. 15 : 25 ; சங். 69: 4.

271. தம்மோடு அப்பம் புசித்த யூதாசைப்பற்றியும், "வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" என்றார். யோவா. 17 : 12 ; சங். 109: 8.

272. தம்மையண்டின சீஷரொருவருக்கும் தம்மோடு பாடுபட அவசியமிருந்ததில்லையென்றுகண்டு, அவர்களுக்காக எதிரிகளிடம் பரிந்து பேசி, 'என்னைத்தேடினால் இவர்களைப்போக விடுங்கள்,' 'நான் இதோ இருக்கிறேன்' என்றதற்கும் வேதமே ஆதாரமாம் "நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லை" என்னும் வசனம் நிறைவேறிற்று. யோவா. 18 : 9 ; 17: 12 ; ஏசா. 53: 6.

273. சிலுவையில் மரணமாகிறதற்கும் வேதப்படியே ஆயத்தமிருந்ததால் தாம் இன்னவிதமான மரணமாய்

மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது. யோவா. 18 : 32 ; மத். 20: 19.

274. குறைவற்ற நீதியாகிய இயேசுவின் தையலில்லாத அங்கியை கிழிக்க எவனும் துணியான். இயேசுவின் நீதியையணிந்தவனைக் குற்றப்படுத்த யாரால் கூடும்? ரோம. 8: 33. அவ்வங்கி கிடைப்பது அவரைச் சிலுவையிலறைந்த பின்னால் மட்டுமே. இயேசுவின் மரணத்தினாலுண்டாகும் புண்ணியமே மனிதனை நீதிமானாக்கும். இந்த மேலங்கியைக் குறித்துச் சீட்டுப்போட்டு ஒருவனுக் குரிமையாக்கினதற்கும் வேதவாக்கியம் இருந்தபடியால் அப்படிச் செய்தார்களாம். மத். 27: 35. யோவா. 19: 24. சங். 22: 18.

275. சிலுவையில் அவர் மொழிந்த ஏழு மொழிகளில் இரண்டு மொழிகள் பழைய ஏற்பாட்டிலுள்ளவைகளேயாம். சங். 22 : 1 ; மத். 27 : 46. 'தாகமாயிருக்கிறேன்' என்றதும் வேதவாக்கியம் நிறைவேறவே. யோவா. 19: 28; சங். 69:21. உயிர்துறந்த இயேசுவின் காலெலும்புகள் முறிக்கப்படாததற்கும் திருமறை மொழிகளே காரணமாகும் யோவா. 19 : 36. சங். 34: 20.

276. மேற்கூறிய வாக்கியங்களெல்லாம் போதிக்கிற சத்தியமென்னவெனில் இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உயிர்ப்பு இவை தற்செயலாய் உலகில் நேரிடாமல், யாவும் முன்னறிவிக்கப்பட்டும், தேவதீர்மானம் பெற்றுமே நடந்ததென்றும், அவர் அந்த ஆலோசனைகளினின்று சற்றேனும் விலகாமல், எப்போதும, தம்சித்தமல்ல, தம்மையனுப்பின பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றினாரென்றும் காண்கிறோம்.

24. சிலுவை

277. இயேசு உலகத்தாரைத் தம்மைப்போலாக்க முயன்றார். உலகம் அவரைத் தன்னிடமிழுக்க முயற்சித்

தது. தனக்கு நியமிக்கப்பட்ட பாடங்களைச் செம்மையாய்ப் படித்து தனது உபாத்தியாயரின் சொற்கள் யாவற்றிற்கும் இணங்கி நடப்பதால் அவரது அன்பிற்குரியவனாய், சந்தோஷமாய் நடக்கும் ஒரு பள்ளிப்பையனை அதற்கெதிரிடையான குணமுடைய ஒரு பள்ளிக்கள்ளன் தன்னிடம் இழுக்க முயன்று தனது பொய் (மாயை) சுயாதீனமே உண்மையான சந்தோஷம் பயக்கக் கூடியதெனச்சொல்லி ஏமாற்றுவது போல் உலகம், நெறிதவறி நடந்ததாலடைந்த ஒரு மாய இன்பத்தை மெய்யென்று நம்பி அதில் மதிமயங்கி உழன்றதால், 'பிதாவைச்சேவித்து அவரது கட்டளைகளுக்கிசைய நடப்பதுவே மெய்ச் சுயாதீனமென்றும், அதினின்றுண்டாகும் இன்பமே உண்மையின்பமென்றும்' அவ்வுலகுக்குப் போதிக்கவந்த இயேசுவைத்தன் வசப்படுத்த முயன்றது.

278. பாதாள திசையில் சென்று மரணத்தைச் சம்பாதித்துக்கொண்ட ஆத்துமாவை, ஆவிஸ்தானத்துக்கேற்றவே இயேசு வந்தார். வருந்தியழைத்தும் ஒருவரும் செவி கொடுக்கவில்லை. "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்" என்றார். மத். 5 : 48. எவரும் அப்படியாகவில்லை. தாமே மெய்யான மனிதன் என்று உலகம் அறியத்தக்கதாக, தம்மை "மனுஷ குமாரன்" என்று அழைத்து, தம்மைப்போல மற்றவர்களும் நடக்க விரும்பினார். அவரை உலகம் 'பிசாசு பிடித்தவன்' என்றது.

279. சகல நோய்களையும் சுகமாக்கி, பிணி நீக்கி, சொஸ்தபுத்தி கட்டளையிட்டு, பசித்தபோது அன்னமூட்டி, அவர்களுக்கு சரீர நன்மைகள் பலதும் கொடுத்தார். ஆயினும் ஜனம் அவரை விட்டுவிட்டது, சரீரத்தில் ஊனமுள்ள பலரும் அவரிடம் வந்து குறை நீங்கிப்போனார்கள். ஆயினும் அவர் விரும்பிய உன்னத போதனையை அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை.

280. அவரிடம் வந்த வியாதியஸ்தரெல்லாருக்கும் சுகத்தைக் கொடுத்ததால் ஆத்ம பிணியாளருக்குப் பிணி

தீர்ப்பதே தமது தொழில் என்பதைக் காட்ட முயன்றும் ஜனங்கள் அதை அறியவில்லை. ஞான ஒளியற்ற 'மனக் கண்ணை'த்தாம் திறப்பவர் எபே. 1: 19 என்பதைக் காட்ட மட்டுமே அவர் குருடருக்குப் பார்வையளித்தார்.

281. சற்சன சமூகத்தில் வரக்கூடாத தீயபழக்கங்களை யுடையவன் குஷ்டரோகி போலிருக்கிறான். எவரும் அவனை அணுகுவதில்லை. ஆயினும் இயேசு குஷ்டரோகியைத் தொட்டு "நீ சுத்தமாகு" என்றார். அசுத்த பாவங்களிலு ழன்று மதிகெட்டவன் அவர் பாதம் வரவே, அவனை அவர் சகல தீங்கும் நீங்கச் சுத்தமாக்கி, 'நீ போய் ஆசாரியனுக்கு' (தேவவிசாரணையிலிருப்பவர்களுக்கு) உனது ஜீவியத்தில் நேரிட்டிருக்கும் மாறுதலை உன் நடக்கைகளால் காண்பி என்றார். மத். 8: 2-4.

282. சூம்பின கையுடையவனை நோக்கி "உன் கையை நீட்டு" எனவும், அவன் நீட்டியவண்ணம் தனது பொருளை எவருக்கும் கொடாமல் பிசினித்தனம் பண்ணுகிற உலோபி யை நோக்கி இயேசு 'இனிமேல் உதாரனாயிரு' என்கிறார்.

283. நடக்க முடியாத சப்பாணியை சுகமாக்கின தினால், தன்னிடத்தை விட்டு நன்மை செய்ய அயலிடங் களுக்குச் செல்ல மனமற்றவர்கள், இயேசுவைக் கண்ட பின்னால் வல்லமை பெற்று, பிறருக்குப் பிரயோஜன முண்டாக, நாலுதிசைகளுக்கும் குதித்தெழுந்து நின்று நடப்பார்கள் என்பதைக் காட்டினார்.

284. ஒரு முறை ஊமையும் செவிடுமான ஒரு பிசாசை அதட்டினார். இப்போதும் தம்மைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்லாத ஊமையான அநேகருடைய வாய்களைத் திறந்து தமக்கென்று சாக்ஷி பகர வல்லமை கொடுக்கிறார்.

285. கை கால்கள் யாவுமிருப்பினும், தன் தொழி லொன்றும் செய்யக்கூடாத நிலைமையிலுள்ள திமிர்வாத ரோகி போன்றவர் அவரிடம் வரவும், தங்களை சுமந்து வந்தவர்களைப் போலவே, தாங்களும் மற்றவர்களைச் சுமக்கக்

கூடியவர்களாய எழுந்து தங்கள் படுக்கைகளை எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

286. தனக்கும் மற்றவர்களுக்கும் தீங்கிழைக்கும் லேகியோன் போன்ற புத்தியற்ற நிர்வாணிகள் (இதை எழுதும் என்னைப் போன்றவர்கள்) இயேசுவின் தரிசனையால் புத்தி தெளிந்து, வஸ்திரம் தரித்து, அவர் பாதத்தருகே உட்கார்ந்து, அவர் மறுகரை (பரலோகம்) சென்றபின்னர், பத்து பட்டணங்களடங்கிய ஊர்களுக்குள் (உலக முழுவதிலும்) சென்று, இயேசுவாகிய ஜீவ ஒளி, தன துளத்தைப் பிரகாசிப்பித்து, தனது அறிவின் மலத்தை நீக்கி, புத்தி தெளியச் செய்து, அகமகிழப்பண்ணிய நற்செய்தியை பிரசித்தம் பண்ணுகிறதினிமித்தம் கேட்கிற எவரையும் ஆச்சரியப்படப்பண்ணுகிறார்கள். மாற்கு. 5: 16-20.

287. படுக்கையிலும், பாடையிலும், கல்லறையிலும் (லூக். 8: 49-56; 7: 11-17; யோவா். 11: 21-45.) இருக்கும் பிணங்களைப்போல் உயிரற்றும், நம்பிக்கையற்றதென்று கைவிடப்பட்டதும், நாறக்கூடியதுமான, பாவஉளையில் அகப்பட்ட ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறவர் தாமென்று காட்டத்தக்கதாக சரீரங்களை மரணத்தினின்று எழுப்பியும் ஜனங்கள் அவரை நம்பவில்லை.

288. தாம் ஒருவரே மும்மலங்களாகிய தீமைகளுக்கு விலகினவர் என்பதை தமது நினைவு, வார்த்தை, செய்கைகளால் தெளிவாய்க் காட்டினர். 'பிதாவை நான் அறிந்திருக்கிறேன்.' உங்கள் ஆவிக்குள் மாயமிருப்பதால், 'நீங்கள் அவரை அறியவில்லை' என்றார். அவருடைய பேச்சில் ஒருபோதும் சந்தேகமிருந்ததில்லை. 'அப்படியிருக்கலாம்' என்னும் சந்தேகமொழிகளில்லாமல், எப்போதும் அவரது வார்த்தைகள் அருளும் பொருளும் நிறைந்ததாய் வல்லமையுடன் புறப்பட்டது.

289. அவரது ஆத்துமாவுக்குள் 'இச்சை' பற்றவில்லையென்பது அவர் சோதனைகளை ஜெயித்த வகையினின்றும்,

தம்மையே மரணத்திலாற்றினதினின்றும் விளங்கிற்று. ஏசாயா. 53 : 11, 12. சரீரமும் மீறுதலுக்குள்ளாகவில்லை. தாம் சுயமாக ஒன்றையும் செய்யாமல், எப்போதும் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றினார். யோவா. 5: 30.

290. இப்படி ஒளி எங்கும் பிரகாசித்தும், இருள் அதைப்பற்றிக் கொள்ளவில்லை. நன்மையைப் பகைப்பதே தீமையின் தன்மை. அவர் மனுக்குலத்தை எவ்வளவாய் நேசித்தாரோ, அவ்வளவாய் அவரை அது பகைத்தது. உலகம் தன் பிதாவாகிய சாத்தானிடத்தில் கண்டவைகளையே செய்துவந்தது. இயேசு தம் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றினார். ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? 2 கொரி. 6: 14.

291. பரலோகத்திலிருந்த ஒளி, இயேசுவின் பிறப்பின் மூலமாய் உலகத்திலும் உதித்தது. மனிதரோ தங்கள் இருப்பிடத்தை விட்டுப் பாதாளதிசைக்குரிய தீங்கையே செய்ததினிமித்தம், அங்கு இந்த ஒளி செல்லக்கூடவில்லை.

292. கேணிக்குள் விழுந்த ஒருமனிதனின் கால்கள் தண்ணீருக்குள்ளிருக்கும் ஏதோ செடிகளுக்குள் சிக்கிக் கொண்டதென்றிருக்கட்டும். மேலே நின்றொருவன் "வா" என்றழைப்பது பயனற்றதே. அல்லது இவனும் கிணற்றில் குதித்து, 'என்னைப்போல் நீந்திக்கரைசேர்' என்பதும் வீணல்லவோ. ஆபத்திலிருப்பவனைத் தப்புவிக்கும் ஏகவழி, தண்ணீருக்குள் மூழ்கி, முந்தின மனிதனின் கால்களில் சிக்கியிருக்கும் கண்ணிகளை (செடி கொடிகளை) அறுத்து விடுவதல்லவோ?

293. பாவ ஆழியில் வீழ்ந்து, தீங்கனுடைய மரணக் கட்டுகளுக்குள் சிக்கியவரை விடுவிக்க மேலோகத்திலிருந்து மட்டும்பார்க்கும் ஏகோவாவுக்கு வல்லமையுளதோ? அல்லது பூவுலகில் வந்தவதரித்த இயேசுவாலும் கூடுமோ? இதை யறிந்த இயேசு மனிதரைத் தம்முடனிழுக்கும் ஏகவழி அவர்

களைப்போல் தாமும் பாதாள லோகத்திற்குள் செல்வதே யெனக்கண்டு, சிலுவையைத் தெரிந்துகொண்டார்.

294. "காருண்ணியம்" என்னும் சிறந்த கயிறே மனிதரை இழுக்க உதவும். ஓசி. 11: 4. அன்பொன்றே சிறந்தது. அதுவே நித்தியத்திற்குரியது, மற்றயாவும் ஒழிந்து போம். 1 கொரி. 13 : 8. அன்பு ஈகையால் வெளிப்படும். அன்பு பூரணப்படும்போது, செய்கையால் வெளியாகும். மனிதரது செய்கைகள் அவரது உள்ளத்திலிருக்கும் அன்பின் பெருக்க, சுருக்கத்தை வெளியிடும். சத்துருக்களை நேசிப்பதே அன்பாம். தான் நேசிக்கும் பொருளை தனது பகைஞருக்குக் கொடுப்பது அன்பின் சிறந்த படிகளிலொன்றாகும். கொடையின் வலிமை எவ்வளவு அதிகமோ, அன்பின் பெருக்கமும் அதற்கிசைய நிற்குமெனத்தகும். இனிக் கொடுக்க மற்று யாதொன்றுமில்லை யென்னுமளவும், தனக்குரியதைத் தனது பகைஞருக் கீயுங்கால், அன்பு பூரண நிலையடையும், அதற்குமேல் வேறொன்றிற்கும் பலனில்லை.

295. மனிதரை இழுக்க இயேசு தமது அன்பின் செய்கைகளையும் மொழிகளையும் இயன்றமட்டும் உபயோகித்தார். பயனேதும் இல்லை. தம்மிடம் மீந்திருந்தது தம்முயிர் ஒன்றே. உயிரே உலகிற் சிறந்த பொருள். அதை விட மற்றெதையும் எவரும் நேசிக்கிறதில்லை. விலை மதிப்புக் கடங்காதது இஃதொன்றே. மனுடவதாரத்தில் தெய்வீக அன்பு வெளிப்பட்டபோதும் அது பூரணப்படவில்லை. தமக்குரியதெல்லாம் உலகத்துக்குக் கொடுத்தும் அவரது அன்பாகிய அக்கினி இன்னும் வேண்டுமெனக் கேட்டது. வேறெதுவுமில்லாததால் அவர் அதையும் கொடுக்கத்தக்கதாகச் சிலுவையை நோக்கினார்.

296. தம்முடைய தாழ்வின் மூலமாகவே மனுக்குலம் மேலேறுமென்பதை அவர் கண்டார். ரூபமில்லாதவர் "தேவனுடைய ரூபமாகிய" இயேசுவானார். பிலி. 2 : 5-8. மனிதனுடைய தியானத்தை இழுக்கவே இவ்வுருவை எடுத்

தார். "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க," அவரும் தம்மைத் தாழ்த்தி, " அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்." எபி. 2 : 14. பிள்ளைகள் பாவத்தைச்செய்து அதின் சாபமாகிய மரணத்தைத் தங்களுக்கு வருவித்துக்கொண்டதினிமித்தம் அவரும் அப்பிள்ளைகளின் கீழ்நிலைக்கிசைய, பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவைமட்டும் தம்மைத் தாழ்த்தினார். இன்னும்தாழ இடம் இருந்ததைக் கண்டு பாதாள பரியந்தமும் தாழ்த்தினார். எபே. 4 : 9.

297. பிலி. 2: 6-8. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, சிலுவையின் ஈன மரணபரியந்தம் தம்மைத் தாமே தாழ்த்தினார். தேவ ரூபத்திலும், தேவ சாயலிலும் படைக்கப்பட்ட மனிதன் ஆதி. 1: 26, 27, தனது பாவத்தினிமித்தம் அப்பாக்கிய ரூபசாயலை இழந்து, மரணத்திற்காளானதினிமித்தம் ரோம. 6 : 23 ; 3: 23. அவர்தாமே, மனுஷன் இழந்துபோன இத்தேவ சாயலை (திவ்ய சுபாவம் 2 பேது. 1 : 4)த் தேடிக்கொடுக்க லூக்கா 19 : 10 தமது தேவரூபத்தை இழந்து மனுஷ ரூபமாய் வந்து, மனிதன் மனுஷரூபத்தையும் இழந்து, பாவ ரூபமாகிய மரண ரூபத்திற்குள்ளிருப்பதைக் கண்டு கலங்கித் தாமும் எப்படியாகிலும் தமது நோக்கத்தை நிறைவேற்ற எண்ணி மனுஷரூபத்தில் இன்னும் தம்மைத்தாழ்த்தி, பாவ ரூபமாகிய மரணத்தின் சாயலையும் எடுக்கச் சிலுவையே ஏற்ற இடம் எனக்கண்டு அதைத் தெரிந்துகொண்டார்.

298. சீன தேசத்தில் சோகோரே என்னும் ஒரு கிறிஸ்தவன் 40 வருஷமாகத் தனக்கடுத்த ஜனங்களின் தீய வழக்கமாகிய 'நரபலி'யைப்பற்றி அவர்களை எச்சரித்துணர்த்தி வந்தான். நாற்பதாம் வருஷம் அவர்கள் ஏகோபித்து அவனிடம் வந்து 'கடந்த வருடங்களிலெல்லாம் உன் சொற்படி

நடந்தோம். ஆனால் இவ்வருஷம் எங்களுக்கு அதிக விசேஷமானது. ஆகையால் எங்கள் முன்னோர் வழக்கப்படி கட்டாயம் ஒருவனைக் கொலைசெய்து எங்கள் தேவதைகளை சாந்திப் பண்ணத்தான்வேண்டும்' எனச்சொல்லி சாதித்தார்கள். அவன் தன்னாலியன்ற நியாயமெல்லாம் சொல்லியும் இவர்கள் பிடிவாதமாய் நிற்பதைக்கண்டு, 'அப்படியானால் நாளையத்தினம் காட்டில் சென்று, அங்கே தன் தலையைச் சிவப்புத் துணியால் மூடின ஒருவனைக் காண்பீர்கள். அவனைப்பிடித்து நரபலியிடுங்கள்' என்று சொல்லியனுப்பினான்.

299. ஜனங்கள் மிகுந்த ஆவலுடன் மறுநாட்காலையை எதிர்நோக்கினர். காலையில் யாவரும் ஏகோபித்து மேளதாளங்களுடன் அவர்கள் தலைவன் சொல்லிய காடுநோக்கி நடந்தார்கள். அவன் சொற்படியே அங்கொரு மனிதன் தன்முகம் மூடியவனாய் நின்றான். அவர்கள் அவனைப் பிடித்து, சந்தோஷத்துடன் பலியிட்டுத் தலையைத் துண்டாக்கிய பின்னால், அச்சிவப்புத்துணியை அவிழ்த்து ஆள் முகம் பார்க்கவும், அது மற்றொருவருமல்ல, தங்கள் நண்பனாகிய சோகோரோ வெனக்கண்டு திடுக்கிட்டு, அந்நாளிலேயே தங்கள் மதியீனச் செய்கையை விட்டுத் திரும்பினார்கள்.

300. இயேசுவும் தமது நெடுங்கால போதனையாலும் சாதனையாலும் தமது நோக்கம் நிறைவேறுததைக்கண்டு, வேறொரு வழியுமில்லையெனக் காணவும், தாமே சிலுவையில் பிராணத்தியாகமாயினர். தமக்குமுன் வந்த பலரைப்போல மனிதருடைய மட்டத்திலே நின்றால் தம்மை எல்லாரும் காணக்கூடாதென்று கண்டு தாம் பூமியினின்று (சிலுவையின் மரணத்தால்) உயர்த்தப்படும்போது எல்லா ஆத்துமாக்களையும் தம்மண்டையில் இழுத்துக்கொள்வதாகக் கூறினார். யோவா. 12 : 32.

301. மனித சிருஷ்டிப்பில் மனிதனுக்குள் தேவ ஆவி அமைந்திருந்தது. பாவத்தால் அந்தப் பரிசுத்தநிலை மாறி,

ஆவிக்குள் இருள் (மாயம்)பற்றி சகலமும் தீமையாய் முடிந்தது. இயேசு பழைய ஆவியை மறுபடியும் பெற்றுக்கொள்ளவே மனிதரைத் தூண்டினர். தமக்குள் அந்த ஆவியை ஏராளமாய்க்கொண்டிருந்தார். யோவா. 3 : 34. தமது ஆவியை மனிதர்பெற்று வாழவே அவர் முயற்சித்தார். தமதாவியை தமக்குள் அடக்கிவைத்துக் கொண்டிருக்குமட்டும் அதை மற்றோருக்குக் கொடுக்கக்கூடாதென்றும் கண்டார். அது மட்டுமல்ல, உலகத்தாரின் இருண்ட ஆவியோடுகூட, தமது தூய ஆவியைக்கொடுத்தால் இரண்டும் பிரயோஜன மற்றுப் போகும் என்றும் கண்டார். மனிதருடைய ஆவியைத் தம்மிடம் இழுத்துக்கொண்டால் அந்த ஆவிக்குரிய மாயை தம்மையும் பற்றுமென அறிந்து, தமது ஆவியைத் தமக்குரிய பிதாவிடம் ஒப்புவித்து லூக்கா 22: 46 பின், உலகத்தாருடைய அறியாமையினுலுண்டாகிய கேட்டுக்குத் தாமும் பங்காளியானர்.

302. மூன்று கண்ணுடிப் பாத்திரங்கள் இருக்கிறதென்றிருக்கட்டும். ஒன்று வெறுமை, இன்னொன்றுக்குள் கறுப்பு மை, வேறொன்றில் பால். கறுப்புமைப் புட்டிக்குள் பாலையும், பாலிருப்பதில் மையையும் மாற்றவேண்டுமானல், முதலில் பாலை வெறும் பாத்திரத்தில் ஊற்றி, அதன்பின் மையை பாலிருந்து காலிசெய்யப்பட்ட பாத்திரத்தில் கொட்டவேண்டுமாப் போல, மனிதருடைய பாவத்தை இயேசு சுமக்கவேண்டுமானல், அவர் தமது பரிசுத்தத்தை பிதாவிடம் காலிபண்ணிய பின்தான் கூடும்.

303. இப்படி இயேசு தமது பரிசுத்த தெய்வீகத்தை முற்றிலும் காலிபண்ணித் தாமே பாவத்திற்குள்ளாவதே சிலுவையின் மரண இரகசியமாம். இயேசு சிலுவையிலறையப்பட்ட நேரத்திலும் தம்மை அறைந்தவர்களுக்காகச் செய்த வேண்டுதலில் மனுக்குலம் முழுவதும் நினைக்க வேண்டிய நினைவுக்கு முன்மாதிரியைக் காட்டினர்.

304. சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகப் பிரகாசமான பேரொளியாகத் தாமிருந்தும், சிலுவையில் மனுக்

குலத்தாரின் பாவமாய்கையை மாற்றப் புகுந்தபடியால் மத்தியான சூரியனையும் மறைக்கக்கூடிய பாவகாரிருள் உலகத்தை மூன்று மணிநேரம் மூடிற்று. ஒளியை ஒரு நிமிஷம் இருள் ஜெயித்தாப்போல் தோன்றிற்று. "இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன். ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்." ஏசாயா. 54 : 7, 8.

305. தமது பிதாவைவிட்டு ஒருநேரமும் பிரியாதவர், நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம், என் பிதா என்னுடனேகூட இருக்கிறார் என்றவர், பாவஇருளினால் பிதாவைவிட்டுப் பிரிந்தார் (தாமே பாவமானார். 2 கொரி. 5 : 21) என்பதை யாவரும் சந்தேகமற அறிந்துகொள்ளத் தக்கதாக "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கேட்டார். மத். 27 : 46 ; மாற்கு. 15 : 34. அப்படிக் கூப்பிடாதிருந்தால் பிதா தம்மைக் கைவிட்டாரென்பதை உலகம் அறிவதெப்படி ?

306. "பிதா" என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவி, பாவத்தினால் அவரைவிட்டுப் பிரிந்தபோதிலும் ரோம. 8 : 15 "என்" என்னும் உரிமைச் சொல்லினால், தேவனைத் தம்முடையவர் எனக்கூறினார்.

307. மனிதரை ஈடேற்றும் வழி சிலுவைதானென்பதை அனாதியிலே ஒப்புக்கொண்டபோதும், பாவம் இன்னதென்றுதானும் அறியாத அவ்வளவு பரிசுத்தமுடைய கடவுள், தமது குமாரன் பாவத்திற்குள் மூழ்கித் தத்தளிப்பதைக்கண்டு தாமும் கலங்குவதுபோலும், அச்சமயம் குமாரன் தமது அனாதி தீர்மானத்தை நினைப்பூட்டி 'தெய்வமே இக்கவலையேன், இது தற்செயலாய் வந்ததல்லவே, நான் ஒப்புக் கொண்டதுதானே. மனுமக்களை மாயையினின்று விடுவிக்கத்தானே இப்பாடு படுகிறேன். வேறு வழி யாதொன்றுமில்லையே. என்னை நீர் கைவிட்ட காரணம் இதுதானே. வீணாய் அல்லவே. கலக்கம் வேண்டாம்,' எனப்பிதாவைத் தேற்றுவதுபோலும் இவ்வசனத்தைக் கருத்துப்படுத்தலாம்.

308. முடிவில் பிதாவை நோக்கி, எனதாவியை உம திடம் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன். நான் பாராத லோகம் இனி ஒன்றே. அந்தப் பாதாளத்திலும்போய், அங்கு சாத்தான் வசம் கட்டப்பட்டுக்கிடக்கும் யாவரை யும் விடுதலைப்பண்ணி வருமட்டும் ‘ எனதாவி உம்மிடமிருக் கட்டும்’ எனச்சொல்லி சிலுவையில் உயிர்துறந்தார்.

25. பாதாளம்.

309. கிணற்றிற்குள் இறங்கும் மனிதன் தனது மேல் வஸ்திரத்தைக்கழற்றிக் கரையில் வைத்துவிட்டு கீழிறங்கு வதுபோல இவரும் தமது ஆவியைப் பிதாவிடம் ஒப்புவித்த பின்னுல் “பூமியின் தாழ்விடங்களில் இறங்கினுர்” எபே. 4 : 9.

310. இதற்குமுன் இவரை ஏற்றுக்கொள்ள சந்தே கித்த கீழுலக வாசிகள் (ஆத்துமா சரீரத்தோடு இசைந்த மாம்ச சிந்தையுள்ளோர்) அவரைக்கண்டு மெத்த சந்தோஷ மாய் ஏற்றுக்கொண்டனர். மாம்சத்திலிருந்த காலங்களில் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவருடைய மரணத்தி ஞல் தூண்டப்பட்டு, ஒளியைப்பற்றக் கூடியவர்களாஞர்கள். தங்கள் அறியாமையினுல் தாங்கள் வருவித்துக்கொண்ட கெடுதி நிலைமைக்குள் இவரும் வந்ததைக்கண்டு, இவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தார்கள்.

311. “மரித்தோர் தேவகுமாரனுடைய ஜீவமொழிக ளைக் கேட்குங்காலம்” இதனுல் உண்டாயிற்று. யோவா. 5 : 25-29. மாயைக்கு விலகினவர் தாமும் தற்சமபம் அதற்குக் கீழ்ப்பட்டவர்போல் தோன்றினர். தீங்கன் இதைக்கண்டு மனமகிழ்ந்தான். அவரது உடலையும் எடுத்து, புதிதான கல்லறைக்குள் வைத்து, “இனிமேல் எனக்கிவர்மேல் யாதொரு அதிகாரமுமில்லை. என்னுல் இவருக்குச் செய்யக் கூடியது இதொன்றே. நானே ஜெயித்தேன்” என்று சொன்னுற்போல் கல்மேல் முத்திரையும் போட்டான்.

312. உனக்குள் இயேசு பலமுறையும் உனது குற்றங்களை எடுத்துரைக்கிற குழந்தையாகப் பிறந்து அமர்ந்த மெல்லிய குரலோசையால் 'எனக்குச் செவிகொடு, ஜீவ வழியைக் காண்பிப்பேன். என்னிஷ்டப்படி நடந்தால் முக்தி நிலை பெறுவாய்' என்று சொன்னார். அந்த நன்மை வடிவமே யூதருக்கு இராஜாவாகப் பிறந்ததுபோல, உன்னையும் ஆண்டு நடத்தும் அதிபதியெனக் கூறினார். நீயோ அவருடைய சத்தத்திற்கு மேலாய் கூக்குரலிட்டு உன் ஆசை, இச்சை முதலிய தீய தோழரைக்கூட்டி, இவனை அகற்றும். நாங்கள் இவனை அறியோம். சிலுவையிலறையும் எனக் கத்தினாய். உனது அறியாமையினால் அவரைக் கொன்றாய்.

313. ஒரு விதவைக்கிருந்த ஒரே மகன் திரவியம் தேடத் திரைகடல்தாண்டி அயல்நாடு சென்று சிலகாலம் உழைத்து, ஒரு சிறு தொகையுடன் வீடுநோக்கிப் புறப்பட்டான். அவனது தோழனொருவன் இவனிடம், 'நீ உன் தாயிடம்சென்று, நீ யாரென்று சொல்லாமல் இன்றிரவு படுக்கமட்டும் இடம்கேள். நெடுங்காலமாகி விட்டபடியால் அவள் உனது தோற்றத்தைக் கண்டுபிடியாள். நாளையத்தினம் காலையில் நான் வந்து அவளைக் கேலிபண்ணலாம் என்றான். மகன் வீடுவந்து அம்மா, நான் ஒரு பரதேசி, அயலூர் போகிறேன். நேரம் இருட்டிவிட்டது. தயவு செய்து இன்றிரவுமட்டும் படுக்க இடம்வேண்டும் எனக் கேட்டான். தாயோ, கூடாது, அந்நியருக்கிங்கிடமில்லையென்றாள். மகன் மறுமொழியாய் தனதிடமிருந்த பணப்பையை அவளிடம்நீட்டி, நீ இதை வைத்துக்கொண்டு நாளைக் காலையில் நான் இவ்வூரைவிட்டுப் புறப்படும்போது அதைத் திருப்பிக்கொடு. எனக்குப் படுக்கமட்டும் இடம்கொடு என்றான். பணத்தின் மேலுள்ள பிரமையால் அவனுக்கிடம் கொடுத்தாள்.

314. மகன் களைப்பினால் தூங்கவும் இப்பணத்தைத் தனது சொந்தமாக்க வழியெதுவென யோசிக்கத் தலைப்பட்டாள் தாய். காலையில் மற்ற நண்பன் வந்தான். மகனைக்

காணவில்லை. தாயிடம் அம்மா 'உங்கள் மகன் எங்கே' யென்றான். 'எந்த மகன் என்றாள் தாய். இங்கு நேற்றிரவு வந்த மகன் என்றான் நண்பன். 'இல்லை, எனக்கு மகனில்லை'. ஒருவனுண்டு. அவன் தூர தேசத்திலிருக்கிறான் என்றாள் தாய். உள்ளதைச் சொல். பினங்கிலிருந்து உனது மகனும் நானும் ஒருமிக்க வந்தோமே. அவன் பணப்பை ஒன்று உனக்கெனக்கொண்டு வந்திருந்தானே என்றான் சிநேகிதன்.

315 அந்த ஸ்திரீ கலங்கினாள். ஐயோ! ஐயோ! என்று மார்பிலடித்தாள். இரவு தனது தீய சிநேகிதர் சிலரிடம் பேசி, மகனை அறியாமல், பொருளாசையால் அவனைக்கொன்று மறைவு செய்துபோட்டாள். இவ்வாறே உலகத்தில் நன்மையை நாட்டவந்த இவரை இப்பிரபஞ்சத்தின் அதிபதிகளாகிய தீங்கனைச் சேர்ந்தோர் இன்னாரென்று அறியாமலே 'ஜீவனின் அதிபதியை'ச் சிலுவையில் அறைந்து கொன்றனர். 1 கொரி. 2 : 7, 8.

316. தங்களுக்கு நன்மையுண்டாக்க வந்தவரை அறியாமையினால் கொலைசெய்த விபரம் தெரியவந்தபோது அவர்கள் கலங்கி, நாங்கள் இனி என்ன செய்வதெனத் திகைக்கையில், அவரை அறிந்த தொண்டனான பேதுரு அவர்களைநோக்கி: 'நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் உங்கள் பாவ மன்னிப்புக்கவசியமான, தீக்ஷை (ஞானஸ்நானம்) பெறுங்கள்' எனக் கூறினார். அப். 2 : 37, 38.

317. இயேசுவைச் சிலுவையிலறையுமட்டும் உலகத்தாருக்குத் தெளிந்த புத்தியில்லாததால் (தங்கள் அறியாமையாகிய மாயையினால்) இத்தீய செய்கை உண்டாயிற்றென்பதை யுணரத்தக்கதாக இயேசு "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தங்களுடைய அறிவீனத்தினிமித்தமே இப்படிச் செய்கிறார்களெனப்" பரிந்து பேசினர். லூக். 23 : 34. நீயும் உனக்குள்ளிருக்கவேண்டிய ஜீவாதிபதியாகிய இயேசுவைப் பலமுறையும் நசுக்கியும் அவர் கிருபையின் திரட்சியினால் மறுபடியும் பிதாவிடம் "பிதாவே

இவனுக்கு மன்னியும், தனது அறியாமையினுல் மட்டுமே, இப்படிச் செய்கிருன்" எனப் பரிந்துபேசி நிற்கிருர். 1 யோவா. 2: 1.

318. உலகம் தனது அறியாமை மிகுதியினுல் செய்யக்கூடியது இதொன்றே. கருணை வடிவம் உலகத்தின் அறியாமையை நீக்கத் தெரிந்துகொள்ளும் வழியும் இந்தச் சிலுவையொன்றே. தம்முயிர் போனுலும் உலகம் விடுதலையடைவதே அவரது நோக்கமாகையால் வேதம், அதையிட்டு யோவா. 19: 32-36 "அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள்" யோவா. 19: 37 என்று கூறுகிறது.

26. காவலிலுள்ள ஆவிகள்.

319. தனது தீமையின் பயங்கரத்தை நிணைத்து எவனெருவன் துயரப்பட்டுக் கண்ணீர் சிந்துவானே, அவன் வெகுசீக்கிரம் ஆறுதலடைவான். மத். 5: 4. தான் நன்மையைச் சிலுவையிலறைந்ததற்காக மெய் மனஸ்தாப மடையுங்கால், "பயப்படாதே, கலங்காதே, அழாதே" என்னும் சத்தங்கள் அவன் காதில் விழும்.

320. இயேசு இரக்ஷகர் தமது உலக ஜீவியத்தில் மூன்றுமுறை கண்ணீர் விட்டழுதார். ஏறக்குறைய மூன்று வருடம் தமது மகத்தான கிரியைகளைக் கண்டும், தனது பொல்லாப்பை விட்டுத்திரும்ப மனமற்று, நாசத்திற்கே தீவிரிக்கும் எருசலேம் சமீபமாய் வரவும், அவர் அந்நகரைப் பார்த்து, அதற்காக (தமக்காக அல்ல) கண்ணீர் விட்டழுததுபோல லூக். 19: 41. இக்காலமும் அவர் தங்கியிருக்க வேண்டிய உனதுள்ளத்தில் அவருக்கிடமில்லாமல் பொய்க்கும், புரட்டுக்கும், உலக சிந்தைக்குமிடம் மிகுந்திருப்பதைக் காண அவர் கலங்கி, நீ உனது நன்மையைக் கருதாமல் கேட்டுக்கு விரைந்தோடுகிருயே என்றும், பிணம்போன்ற அசுத்தம் நிறைந்த உன்னைப்பட்சிக்க, வெகுசீக்கிரம் கழுகுகள் யாரும் அழையாமல், தாமே மோப்பமறிந்து வந்து விழு

மென்றும், முன்கண்டு, கண்ணீர் விட்டழுகிறவராய் நிற்பதைக்கண்டாகிலும், இதை வாசிக்கும் நண்பா, உனது பாவநிலைமையை உணர்ந்து மனஸ்தாபப்படமாட்டாயா ?

321. மரியாள், மார்த்தாள் என்னும் நாமதேயமுடைய இருசகோதரிகளின் ஏக சகோதரன் கிறிஸ்துவுக் கன்பனையிருந்தும், மரணத்திற்கும் கல்லறைக்கும் உள்ளானதைக் கண்டு கலங்கி, தன்னிடம் விட்டெழும்பாமல் படுத்தழுததை, அறிந்த இயேசு தாமும் அவ்விடம்வந்து லாசருவின் நிலைமையையும், சகோதரிகளின் புலம்பலையும் கண்டு மனதுருகி, ஆவியில் துயரடைந்து, தமது அநுதாபத்தைக் கூடியிருந்தவர்கள் காணத்தக்கதாக, கண்ணீர்விட்டதுபோல, எவனொருவன் தனது ஆத்துமா பாதாள திசைக்குள் சிக்கித் தப்ப வழியில்லாமல் பரிதபிக்கிறதே யென்பதை யுணர்ந்து, அதினிமித்தம் வெகுவாய்த் துக்கப்படுவானே, அப்படிப்பட்ட 'நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்திற்கு' இயேசு வெகு சமீபமாக வந்து, மற்ற சமயஸ்தாபகர்களைப்போல 'துஷ்ட சம்ஹார சிஷ்ட பரிபாலனு' என்றல்ல, உலகைப்புரக்கவே வந்தேன், உனது பாவநிலைமையைக் கண்டு மனஸ்தாபப்படுகிறவனாக மட்டுமல்ல, அதினிமித்தம் துக்கப்படுகிற உனக்காகவும் பரிதாபம்கொண்டு, உனது துக்கத்திற்கு நானும் பங்காளியாய் நிற்கிறேன் என்பதைக் காட்ட உன்னுடன் யானும் பெருமூச்செறிந்து கண்ணீர் விடுகிறேன் என்கிறார்.

322. இரண்டு முறையும் இயேசு மற்றவர்கள்பேரில் மனதுருகிக்கண்ணீர் விட்டும், மூன்றும் முறை தமக்காகவே கண்ணீர் விட்டாரென்று வேதம் சொல்லுகிறது எவ்வளவு நியாயம். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்" எபி. 5 : 7. உனது கண்ணீரை மாற்றக்கூடிய வழி தமது சிலுவையென்றும், தாம் மாயைக்கு (பாவத்திற்கு) ள்ளாவதினால் மட்டுமே உனது மாயை நீங்குமென்றும் அவர் காண

வும், அவர் கலங்கித்திகைத்த வரலாற்றைக் கெத்செமனே யின் பாத்திரத்தின் மூலமாய்க் காணலாம்.

323. இவ்விதமாய் ஆத்துமாவுக்குள் செத்தவர்கள் மரித்தோரின் தேசத்தில் சிக்கிக் கஷ்டப்பட்டுமலலே, ஆவிக்குள்ளாகி, அவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டி, இயேசு தமது மரணத்தின் மூலமாய்க் கிரியை செய்யவும், அவர்களும் அவரைப்பற்றும் விசுவாசத்தி னாலே பாவமன்னிப்பையும் (தோஷ நிவாரணம்) பரிசுத்த மாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்று வாழு கின்றனர். 1 பேது. 4: 6; அப். 26: 18. "மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் இப்பொழுதே வந்திருக்கிறது." யோவா. 5 : 25.

224. பேழையைச் செய்துவந்த காலத்தில் நோவா முனிவர், எவ்வளவாய் ஜனங்களைப் பேழைக்குள் நுழையத் தூண்டியும், அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டிருந்தபடி யால், அவர் சொல்லில் நம்பிக்கை கொள்ளாமல், தங்கள் யோசனைகளிலே வீணராய் நடந்தபோதிலும், பேழை முடிந்து, மழை சொரிந்து, தண்ணீர் வந்து, நாட்டை மூடுங் கால், தங்கள் மதியீனத்தை புணருமாப்போல, வரப்போ கிற அக்கினிக்கடலுக்கு வெளி. 20 : 10. மனுக்குலத் தைத் தப்புவிக்க வந்த ஆவிக்குரிய பேழையாகிய இயேசு தமது சடலத்துடனிருக்கையில், எவ்வளவாய்த் தமக்கு நேரிடப்போகிற காரியங்களை முன்னறிவித்தும், உலகம் அவரை நம்பாமல், சிலுவையில் அறைந்து கொன்றபின் மட்டும் 'குத்தினவரை நோக்கிப்பார்த்து, மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்று அறிக்கை செய்யக் கூடுமாதலால், பேதுரு தமது நிரூபத்தில் 1 பேது. 3: 18, 19. 'இயேசு தாம் மாம்சத்தில் கொலையுண்டு, ஆவிக்குள் காவலிலுள்ள கீழ்ப்படியாத ஆவிகளுக்குப் பிரசங்கித் தார்' என்னும் சத்தியத்தை விளக்கத்தக்கதாக நோவா காலத்தின் சில சம்பவங்களையும் குறிப்பிட்டார்.

325. இயேசுவின் குறைவற்ற பிறப்போ, கறையற்ற ஜீவியமோ, கசடு, கபடற்ற போதகமோ மனுக்குலத்தின் அறியாமையை உணர்த்தக் கூடியதாயிராமல் அவரது நிகரற்ற இறப்பே மனுக்குலத்தை அசைத்து, உலகத்தைத் தலைகீழாய் புரட்டக்கூடும் என்றும், இயேசுவைப்பற்றி முதல்முதலாய்க் கேள்விப்படும் எந்த மனிதனும், அவரது சிலுவையின் மரணத்தில் வரும்போது 'ஐயோ, இந்தப் புண்ணியவானுக்கிது வரக்காரணமேன்' என்று தனக்குள்ளே சிந்தித்துக் கலங்கி, உண்மையை யறிந்து, 'மெய்யாகவே எனது மனதினிருளை நீக்கும் ஞானவொளி இவரே,' மற்ற அவதாரங்களெல்லாம் ஏதோ, தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துப் போகையில் இவரோ 'தமக்காக அல்ல,' 'எனக்காகவே' இப்பாடுகளைப்படுகிறாரென்று கண்டு,

உள்ளங்கனிந்து இயேசு வள்ளலே சாணுற்றேன்
உன்பாதங் கதி என்றிப்போதே
தள்ளிடாதே என்னைத் தாங்கி அரவணைத்தென்
சஞ்சலம் தீர்த்தருள் இப்போதே.

எனப்பாடி, தங்களுக்குள் மாறுதலடைந்து, புது ஜீவியத்துக்குள் புகுந்து இன்பமாய் வாழுவார்களென்பதே, காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தாரென்பதின் அந்தரங்கம்.

326. "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட மரித்ததுண்டானால், அவரோடுகூடப் பிழைத்தும் இருக்கக்கூடும்." 2 தீமோ. 2 : 11. மனுக்குலத்தைத்தாக்கிய சகல தீமைகளுக்கும் எவுதலாகிய அறிவீனம் ஆவியைவிட்டு நீங்கியல்லாது, தீமை வேரற ஒழிவது கூடாக்காரியமாகும். இருளுக்கு நேராய் நோக்கி, பல இரண்டகச் செய்கைகளைச் செய்துவரும் மானிடர், தங்கள் துன்மார்க்கத்தையும் பொல்லாப்பையும் விட்டுத்திரும்பி. நல் வினைகளைச்செய்ய மனங்கொள்வார்களாகில் எசே. 18 : 27, இவர்களுக்கு அடைக்கப்பட்ட கண்கள் திறக்கப்பட்டு, அப். 26 : 18. இருளில்

அவர்களுக்கு வெளிச்சம் உதித்து, மத்தியானத்தைப்போல பிரகாசமாகும். ஏசாயா 58: 8-10.

327. தூக்கத்தில் ஸ்மரணையற்ற நிலைமைபோல் தனது பாவ புண்ணிய, பாகு பாடுகளை உணராது மிருகத்தைப்போல் ஜீவிக்கிறவன், தனது மரித்தோரின் திசைக்குள் சென்று தன்னைப்போலான இந்த நன்மை வடிவம் இயேசுவை, நோக்கிப்பார்க்கக் கூடுமாகில், அவர் இவனை உயிர்ப்பித்து, 'இம்மட்டும் உனது அறிவீனத்தில் தூங்கிய நீ தற்சமயம் எழும்பியபடியால், நான் உனது இருளடைந்த உள்ளத்தில் திருவிளக்காகிய ஆவிதீபம் ஏற்றி நீதி. 20 : 27, உன்னைப் பிரகாசிப்பித்து எபே. 5: 14, விடியற்கால வெளுப்பு இராவிருளை மாற்றுமாப்போல், உனது வெளிச்சம் எழும்பி. உனது மன இருளை நீக்கப்பண்ணுவேன் ஏசாயா. 58 : 8 என்கிறார்.

328. இப்படியாக சிலுவையிலறையுண்டவரை நோக்கிப்பார்க்கும் எவனும் பிரகாசமடைந்து, மேலுலகேறுவதற்கவசியமான பிரகாசமுள்ள மனக்கண்களையும் பெற்றுக் களிப்பான். எபே. 1 : 19.

329. எவனொருவன் தனது ஆவி, ஆத்துமா, சரீரங்களில் பற்றிய மூன்று வினைகளையும் வெறுக்கமுயன்று, அவைகளைத் தனித்தனியே, ஒவ்வொரு ஆணியால், சிலுவையாகிய, தன்னைத்தியாகமாக்கும் கருவியில் அறைவானே, அவன் சீக்கிரம் பழைய தீமைக்கு மரித்து, நன்மைக்கென்று பிழைத்துக்களிப்புற்று வாழுவான். முதல் முதல் இவன் தனது ஆவிக்குள்ளிருக்கும் பழைய மனுஷனாகிய பொய்மையும் ரோமர் 6 : 6. பின் ஆணவத்திற்கு நேராய் இழுக்கும் சரீரத்தையும் (மாம்சத்தையும்) ரோம. 12: 1; கலா. 5 : 24; கடைசியில் ஆத்துமா இச்சிக்கிற உலகத்தையும் கலா. 6: 14 ஒவ்வொரு ஆணியால், இவனுக்குள்ளிருக்கும் சிலுவையில் அறையக்கூடுமானால், இதற்கு முன் இவன் தன் அறியாமையினால் சிலுவையில் அறைந்த நன்மை வடிவம் இயேசுவும்,

அங்கிருந்தே இவனுக்காகப் பரிந்துபேசி, இவன் தன்னுடன் சிலுவையின் பாடுகளில் ஐக்கியப்பட்டதைக்கண்டு, இவனது சகல தோஷங்களையும் தாமே சுமந்து, தமக்குள்ளிருக்கும் உயிரை இவனுக்குக் கொடுத்து இவனைப் புது சிருஷ்டியாக்குவார்.

330. அப்படிச்செய்தவன், தனது அநுபவத்தைக் குறித்து, 'கிறிஸ்துவுடனேகூட நானும் சிலுவையிலறையப்பட்டேன். எனது சகல நாட்டங்களையும் அங்கு அறைந்தேன். ஆயினும் நான் அப்படியே செத்துப்போகாமல், மறுபடியும் உயிர்பெற்று வாழுகிறேன். இப்போதிருக்கும் உயிர் என்னுடையதல்ல. இது என் அறியாமையினால் நான் கொலைசெய்த இயேசுவினுடையதே' என்று சொல்லி, கலா. 2 : 20; தனது வாழ்வுக்கெல்லாம் காரணம் தான் கொலைசெய்த இயேசுவே என்னும் கீதத்தினால் சந்தோஷிப்பான்.

331. விதை ஒன்றை பூமிக்குள் புதைத்தால் அது தன்னுயிரை இழக்கினும், இன்னொரு உருவாய் முளைத்தெழும்புவது போல, இயேசுவைப் பாதாளம் விழுங்கினும், அவர் அங்கிருக்கக் கூடாதவராகையால், பாதாளம் தனது தோல்வியை யாவரும் காணத்தக்கதாக இயேசுவைப் புனருத்தான (உயிர்த்தெழுதல்) நிலைமைக்குயர்த்தினது. "அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" அப். 2 : 24-27. 'தேவன் தமது குமாரனுடைய ஆத்துமாவைப் பாதாளத்தில் விடார். தமது பரிசுத்த வித்தை அழிவுக்கு ஒப்புக்கொடார்.' சத்தியத்தை மறைக்க எவராலாகும்? சத்தியமாகவே பிறந்தவரை உலகம் பொய்க்குக் கீழ்ப்படித்தினது. ஆயினும் காற்றடைத்த கால்பந்தை (foot-ball) கிணற்றிற்குள் அமிழ்த்தி வைக்கக்கூடாதே. அப்படியே சத்தியம் பூமியின் தாழ்விடங்களில் இறங்கிய போதும்அது அங்கிருந்து முளைத்தெழும்பிற்று. சங். 85 : 10, 11. ஏனெனில் மேலிருந்து பார்த்துக்கொண்டிருப்பது தேவ நீதியல்லவோ?

27. ஜீவ விருக்ஷம்.

332. ஜீவ விருக்ஷத்தைபபற்றி இவ்வருள் வேதத்தின் ஆதியிலும், இடையிலும், கடையிலும் நாம் வாசிக்கிறோம். 'ஜீவ விருக்ஷம்' என்று பெயர் வழங்கப்படும் பொருள் சுட்டிக்காட்டும் ஞான இரகசியம் மகாபெரிது. ஆதியாகமத்தில் இந்த மரம் அழகிய நதிகள் நான்கு திசைகளிலும் ஓடப்பெற்ற அருமையான ஏதேன் என்னும் தோட்டத்தின் மத்தியில் அமைந்திருந்தது. ஆதி. 2: 9. எசேக்கியேல் 31 : 16-18 ல் இம்மரம் மற்ற அழகிய மரங்களுடன், பூமியின் தாழ்விடங்களில் இறக்கப்பட்டதாய்க் காண்கிறோம். கடைசிப் புஸ்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் இதேமரம் பரலோகத்தில் பன்னிருவித கனிகளைக் கொடுத்துத் தழைத்து வளருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. வெளி. 22 : 2.

333. இவைகள் ஞான அர்த்தமுடையவைகள். படைப்பில் இம்மரத்தின்மேல் மனிதனுக்குரிமையிருந்தது. தனது அறியாமையினால் இவன் அதைக் கீழுலகத்துக்கு நழுவ விட்டுவிட்டான். அதை மறுபடியும் இவனுக்களிக்கவே, மேலுலகோரானவர் கீழுலகுக்கிறங்கிச் சென்றார். அவர் அதைத்தேடி, இழந்துபோனதை இரட்சித்து, மறுபடியும் தம்தொண்டருக் களிக்கத்தக்கதாகமேலுலகிலேற்றி வைத்தார். இதை நீ தெளிவாய் உன் அநுபவமாக்குவாயானால் இவ்வுலகிலேயே சுகித்து வாழுவாய்.

334. உனது கண் திறக்கப்படும்போது இந்த மரம் உனக்குள்ளேயே இருக்கக்காண்பாய். உனது அறியாமையாலும், இச்சையினின்று தோன்றிய கீழ்ப்படியாமையாலும் நீ அதை ருசிக்கக்கூடாமல் ஏமாந்து திரிகிறாய். அது மற்றெங்குமல்ல. உனக்குள்ளேயே பாதாள ஸ்தானத்தில் சிக்கிக்கிடக்கிறது. மெத்த துக்கத்தோடும் விசாரத்தோடும் நீ அதைத் தேடினால் இழந்துபோன அந்த வெள்ளிக்காசை நீ கண்டு களிப்பாய். வெளியே தேடவேண்டிய

அவசியமில்லை. உனது வீட்டுக்குள்ளே தான் அது கிடக்கும். வெளிச்சமில்லாததினால் மட்டுமே நீ அதைக் காணக்கூடவில்லை. அணைந்துபோன உனது விளக்கை நீ மறுபடியும் கொளுத்து. உனது வீட்டை நன்றாய்ப்பெருக்கு. இந்த ஆவியால் நீ உன்னையே நன்றாய் ஆராய்ந்துபார். எளிதில், இழந்தபொருளைக் கண்டு களிப்பாய், அதைக் கண்டால் உனதுள்ளம் பொங்கும். நல்ல விசேஷத்தினால் உன் மனம் நிறைந்து, நீ பலருக்கும் அச்செய்தியைச் சொல்லக்கூடியவனாவாய். உனக்குமட்டுமல்ல, மற்றோருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய இந்த அருமையான வெள்ளிக்காசு லூக். 15 : 8-10. ஜீவ விருக்ஷம்போல் உனக்குள் மறைந்துகிடப்பினும் நீ அதை அறியாதிருக்கிறாயே!

335. இயேசுவின் உயிர்தெழுதலின் இரகசியம் மகா பெரிது. அதின் வலிமையை ருசியாதவர் அறியார். பலர் இதை மறுக்க முயலுகின்றனர். சரித்திரம் இதற்கு சார்பாயில்லை யெனக்கூறத் துணிகின்றனர். அவர்கள் மதியீனத்தை யாம் எழுதவில்லை. அப்படிப்பட்டவர்களுடைய அறிவின் மாயை நீங்க இறைவனைக் கெஞ்சுகின்றேன்.

28. கிருபையின் வலிமை.

336. கிருபையென்னும் பிரமாணம் வெளிப்படும் தருணம் இதுவே. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்ப இயேசுவுக்கு என்ன அதிகாரம்? உலகில் இதற்கு முன்னாவது பின்னாவது எவரும் இப்படி எழுந்ததில்லை. "என் ஜீவனைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு. அதைத் திரும்ப எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு" யோவா. 10 : 18 என்று அவரே கூறினார்.

337. அவர் கையெழுத்து உலகில் கிடையாது. தம்மை நினைவுகூர ஏதாவது அவர் எழுதிப் பின் வைத்துப் போகவில்லை. ஒரே ஒருதரம் மட்டும் அவர் எழுதினார்.

யோவா. 8 : 6. அங்கும் தரையிலே, மணலிலேயே எழுதினார். அதின் அந்தரங்கம் இனிமையானதே. மோசேயின் எழுத்தை ஆதாரமாக்கியே ஏழை ஸ்திரீயைக் கல்லெறியக் கொண்டு வந்தனர். இவரோ குனிந்து தரையில் எழுதினர். மறுபடியும் மறுபடியும் அலட்டுகையிலும் இவர் எழுதிக்கொண்டேயிருந்தார். அதின் பொருள் யாதெனில், மோசே பெற்ற கற்பனைகளையும் இதோ இந்த விரலே எழுதிற்று. இதே விரல்கள் மறுபடியும் இதை எழுதுகிறது. பழைய எழுத்து மனிதரை ஆக்கினைப்படுத்திக் கொல்லக் கூடியது. அது அழிக்கப்படவும் கூடும். இம்மணல்மேலெழுத்து அழிந்துபோய் அதேயிடத்தில் முன் எழுதிய தின்னதென்று சொல்லக்கூடாதபடிக்கே வேறெழுத்து எழுதப்படுமாப்போல், பழைய பிரமாணத்தை ஒழித்து, புது ஆவிக்குரிய பிரமாணங்களை மனிதருடைய உள்ளங்களில் எழுதக் கூடிய விரலும் இதுவேயாம் என்பதே.

338. திராட்சத் தோட்டத்துக்குக் கூலியாட்களை அமர்த்திய உவமையிலும் இந்தப் பிரமாணத்தை விளக்கினார். பன்னிரண்டு மணி நேரம் வேலைசெய்தவனுக்கும், ஒன்பது, ஆறு, மூன்று, ஒரு மணி நேரம் வேலைசெய்தவனுக்கும் கூலி 'ஒரு பணமே' மத். 20 : 1-15. இக்கூலி இவர்கள் வேலைக்குரியதாயிருக்கவில்லை. இவர்களுடைய தேவைக்கடுத்ததாகவே யிருந்தது. ஒரு பணமுண்டானால் மட்டுமே ஒரு மணி நேரம் வேலைசெய்தவனுக்கும் அன்றாடகச் செலவு கட்டும். இதையறிந்தவன் தனது நீதியையல்ல, 'கிருபை' என்னும் உயர்நிலைப் பிரமாணத்தைக் கையாடினான். நமது நீதியினிமித்தமல்ல, தமது கிருபையால் மட்டுமே அவர் நம்மை இரட்சிக்கிறார்.

339. இளைய மகன் தனக்குரிய தெல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசம் புறப்பட்டுப் போய், அங்கே ஆஸ்தியை அழித்துப் போட்டான். லூக். 15 : 11-24. அவன் திரும்புகையில், தகப்பனிடம் யாதொரு 'உரிமையும்' இல்லாதவனாகையால், 'வேலைக்காரனாக' ஏற்றுக்

கொள்ளப்படமட்டுமே பாத்திரன் என்று உணர்ந்தான். ஆயினும் தகப்பன் அவனை அன்பாய் ஏற்றுக்கொண்டு மகனுக்குரிய பாக்கிய சலாக்கியங்களைத் திரும்பவும் அளித்தது வெறும் கிருபையினாலேயே.

340. பாவிகளை இரட்சித்து அவர்களை நீதிமான்களாக்குதலின் அந்தரங்கத்தை அறியாத மாம்ச சிந்தையுடைய மூத்த குமாரர்கள், தகப்பனிடம் வந்து, 'வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட இந்த உம்முடைய மகன்' என்று வசை கூறி நிற்கையில், கருணை வள்ளல் அப்படிப்பட்டவர்களை நோக்கி, 'என்னுடையதை என்னிஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; உனக்கு இவனையல்லாமல் வேறொரு தம்பி பிறந்தால் அவனுக்கு என் ஆஸ்தியில் ஒரு பாகம் செல்லுமல்லவா? அப்படிப்போல் நினைத்துக்கொள்' என்று சொல்லித் தமது கிருபையின் வலிமையை அவர்களுக் குணர்த்துவார்.

341. மாக்ஷிமைதங்கிய விக்றோரியா சக்கரவர்த்தினியவர்களுக்கு தனிச்சலாக்கியம் ஒன்றளிக்கப்பட்டிருந்தது. அதைக் கட்டுப்படுத்த எந்தச் சட்டமும் இருந்ததில்லை. அக்காலம் நாட்டிலொரு சட்டமுண்டு. அதாவது, 'யுத்தத்திற்கு அழைக்கப்படும் எந்த மனிதனும், உடனே கீழ்ப்படிந்து செல்லாவிடில் கொலை செய்யப்படவேண்டும்' என்பதே. ஒருவன் இக்குற்றத்தில் அகப்பட்டு, நியாய விசாரணைக்கு வந்து சேர்ந்தான். சட்டம் அவனுக்குப் பிரதிகூலமாயிருந்தபடியால், அவன் மரணாக்கினைக்குள்ளாகி, இராணியாரின் கையெழுத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தான், அவர்களோ அவனை விடுதலை செய்யவழி ஏதேனுமுண்டா என ஆலோசித்தனர். வக்கீல்களும், சட்டங்களும் கண்டிப்பாய் இவனை விட்டுவிட்டால் அநேகர் இப்படியே பேடிகளாய் ஓடிவிடுவார்கள். அப்பொழுது படைப்பெலன் குன்றிப்போம். ஆதலால் இவனை விடலாகாது என முறையிட்டனர். இவன் ஆறு சிறு குழந்தைகளின் தகப்பன்.

இதையிட்டே பயங்கொளித்தான். இராணியம்மாளவர்கள் கருணைகொண்டு குற்றப்பத்திரத்தை வாங்கி, அதின் குறுக்காய் சிவப்புமையால் "மன்னித்தேன்" என்று எழுதினார்கள். அவ்வெழுத்திற்குச் சட்டம் யாதொன்றுமில்லை. அது சுத்த கிருபையைப் பொறுத்தது.

342. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு வேதத்தில் சட்டமில்லை. நியாயப் பிரமாணப்படி "பாவத்தின் சம்பளம் மரணமாம்." தீங்கன் இயேசுவின் உயிரை வாங்கவும் இனி எல்லாம் தனக்கென்றே என நினைத்தான். ஆனால் தேவன் தமது வல்லமையுள்ள கரத்தால் தமது குமாரனை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணினார். இதற்குப்பிரமாணமே கிடையாது. இப்படிச் சகல சட்டங்களையும் மீறவேண்டுமானால் மகா பராக்கிரமமும் சத்துவமும் வேண்டியதே. இந்தச் சத்துவமே பூமியின் தாழ்விடங்களில் இறங்கிய இயேசுவை மேலேற்றியது. இதற்கு மிஞ்சிய வல்லமை விளங்கிய இடம் எதுவுமில்லை.

343. தெய்வீக வல்லமை பூரணமாய் விளங்குவது இயேசுவின் உயிர்த்தெழுதலிலேயே. இதை நீயும் நானும் அநுபவிக்கலாம். பரிசுத்த பவுல் இந்த உயித்தெழுதலின் வல்லமையை அறிவதற்காக தமக்குண்டாயிருந்ததை யெல்லாம்நஷ்டமென்று விட்டார். பிலி. 3: 10, 11.

344. தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்ப எவ்வளவு வல்லமையை உபயோகித்தாரோ, அதே அளவு வல்லமை யிருந்தால் மட்டுமே, மாயா சம்பந்தத்தினின்று ஒரு ஆத்துமாவையும் விடுவிக்க அவரால் கூடும்.

345. எவனொருவன் இந்தப் பரம வல்லமையில் விசுவாசப் பற்றுக்கொண்டு, இயேசுவைத் தனது சொற்களால் அறிக்கை செய்து, அவனது உள்ளத்தில் தேவன் இயேசுவை மரித்தோரிலிருந் தெழுப்பினாரென்று நம்புவானோ அவன், தான் தனது தீமையினால் கொலை செய்த நன்மை வடிவத்தை மறுபடியும் உயிர்ப்பிக்கப்பெற்று, ஜீவனுக்குரிய

வரை அடைவதினாலே தனது பாசம் நீங்குதலாகிய இரட்சிப்பைப் பெற்று மகிழுவான். ரோம. 10 : 9.

346. விசுவாசிக்கிறவனுக்கு மட்டுமே இத்தெய்விக வல்லமையைக் கடவுள் வெளிப்படுத்துவார். பாவியை நீதிமானாக்குகிற வல்லமையும், இயேசுவை உயிரோடெழுப்பின வல்லமையும் ஒன்றேயாகும். இயேசுவை எழுப்பியதும் கிருபையினாலே. பாவியை இரட்சிக்கிறதும் கிருபையினாலே. பாவியை இரட்கிக்கிறார் என்பதின் உறுதி இயேசுவை எழுப்பினதற்குள்ளேயே இருக்கிறது. ரோம. 4 : 24, 25; 8 : 33, 34. இதை விசுவாசியாதவன் தேவ கிருபைக் கந்நியனாகவே யிருப்பான்.

347. பக்தி, ஞானம், கர்மம் ஆகிய முறைகளிலேயே மெய்யறிவை நாடுகிறவன், முடிவில் இங்கல்ல, கிருபைக்குள்ளேயே தனக்குரிய திறவுகோல் இருக்கிற தென்பதைக் கண்டு, "ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்." 1 கொரி. 15: 10 என்ற பவுலைப்போல சாட்சிகூறுவான். கமாலியேலின் பாதத்தருகே படித்த உலக ஞானமோ (ஞான மார்க்கம்) அப். 22 : 3, தனது சமயத்தில் வைராக்கியங்கொண்டு, கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திய (பக்தி மார்க்கமோ) அப். 22 : 3, 4; பிலி. 3 : 6, மற்றெவராலும் குற்றப்படுத்தப்படக் கூடாத அளவு நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியில் நடந்த பிலி. 3 : 6 (கர்மமார்க்கமோ) பவுலடிகளை இரட்சிக்காமல், இயேசுகிறிஸ்துவை தனக்குள் வெளிப்படுத்திய 'தேவகிருபையே' கலா. 1:15,16 தன்னை இரட்சித்தது என்று மிகுந்த நன்றியறிதலோடு சொல்லுகிறார்.

348. கிருபை என்னும் வழி எந்த நீதி நியாயங்களுக்கும் கட்டுப்படாதது போலவே, ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்த தெய்விக வழி மனிதர் சட்டங்களால் அளவிடப்படக் கூடாததாகவே யிருக்கிறது. தேவகிருபை யொன்றினால் மட்டுமே மனுக்குலத்தின் பாவமாய்கை மாறும் என்

பதற்கு ரூபகாரம் இயேசுவின் உயிர்த்தெழுதலே. அதில்லை யாகில் மனிதனுக்குக் கடவுளிடம் யாதொரு உரிமையும் கிடையாமலேபோம்.

349. ஆதலால் கிறிஸ்துவுடனே கூட நாமும் சிலுவை யிலறையப்பட்டு அவர் அடைந்த ஆக்கினையாகிய பாதாளக் கொடுமைக்குள் செல்லக் கூடுமானால், கிருபை யென்னும் தம்முடைய மகா பெரிய வல்லமையால், அவர் நமக்கு தேவனை அண்டும் சுத்தமனச்சாட்சியைத் தந்து, தமது உயிர்த்தெழுதலினால் இப்பொழுதே நமது உயிரற்ற ஆத்து மாவையும் உயிர்ப்பிப்பார். 1 பேது. 3 : 21.

350. "அவர் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி" அவ்வாத்துமாவுக்குயிரான தமது ஆவியை முன்னமே பிதா. வினிடத்தில் ஒப்புக்கொடுத்ததினிமித்தம் தமக்குயிராக, மாயம் பற்றிய கீழுலகோரின் ஆவியைத் தமக்குள் இழுத்து, இப்படியாகத் தாமே முழுப்பாவமாய் அல்லது தீமை வடிவ மாய் மாறியும், மகாபெரிய வல்லமையுள்ள கிருபையால் 'மாம்சத்தில் கொலையுண்ணப்பட்டவர்,' 'ஆவிக்குள் உயிர்ப் பிக்கப்பட்டு,' 'அநேக பலவான்களையும்' தம்முடனிழுத்து, தாம் முன்னிருந்த இடத்திற்கேறிச் சென்றார் ஏசாயா 53.

351. கிருபையினாலேதான் உலகோர் இழந்துபோன தேவசாயலை அடைந்துகொள்ளுகிறார்களென்பதைக்காணும் எவரும், பயமும் நடுக்கமுமின்றி "தைரியமாய் இனிமேல் கிருபாசனத்தைக் கிட்டிச்சேரலாம்" எபி. 4 : 16. இந்தக் கிருபையினால் மட்டுமே 'நாம் பிதாவினிடத்தில் சேரவும்,' 'அவரை அப்பா பிதாவே' என்று அழைக்கவும் தகுதியுள் ளோராகிறோம். தெய்வம் தம்மை அண்டுபவர்களுக்குக் கிருபையளித்து, அவர்களுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் அவர்களை விலக்கிக்காக்கிறவர் என்பதை நம்புகிறதற்கு ஏற்ற அத்தாட்சி அவர் கிறிஸ்துவை எழுப்பினதே. ஆகை யால் இந்த உயிர்த்தெழுதலின் நம்பிக்கை மட்டுமே மனிதனை இரட்சிக்கக்கூடியது. 1 பேது. 3 : 21.

29. வேறு வழிகள்.

352. ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்த இவ்வுயர் வழியை அறியாமல் அநேகர் வீண் வழி செல்லுகிறார்கள்.

353. ஞான மார்க்க மூலமாய் இவ்வுயர் நிலைக்குவர அநேகர் வெகுவாய் முயல்கின்றனர். இவ்வுலகத்தின் ஞானத்தைதேவன் தம்முடைய குமாரனுடைய உயிர்த்தெழுதலின் மூலமாய் பைத்திய மாக்கிவிட்டார். எப்படியெனில், உலகத்தின் எந்த ஞானத்திலாவது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கிடமில்லை. ஆனால் சத்தியம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எவரும் மறுக்கமுடியாதபடி பரம்பியாயிற்று. இக்காலத்திலும் பலர் இயேசுவின் எல்லாவரலாற்றையும் ஒப்புக்கொண்டபோதிலும் அவருடைய உயிர்த்தெழுதலை நம்புகிறதில்லை. ஏனெனில் அவர்கள் ஞானம் இந்தக் கிருபையின் வலிமைக்கு ஈடாகாது.

354. தன் ஞானத்தால் தன் குறைகளையே அறியக்கூடாத மனிதன் கடவுளை அறிவதெப்படி?

பொறையை இடம்விட்டுப் பெயர்ந்து கடலிற்றாழ்ந்து
போக உத்தரவு செயலாம்
பொங்கு திரையின் மேல் நடக்கலாஞ் சிங்கத்தைப்
போர் செய்து கொன்று விடலாம்
மறுபாடை பேசலாம், பேயைத்துரத்தலாம்
வல்லரவுகளை நீக்கலாம்
மரணத்துக்கினமான நஞ்சுண்டு தீவினை
வராது காத்துக் கொள்ளலாம்
அறுதியாய் சுகமிலாதவர்கள் மேல் கைகள் வைத்
தாரோக்கியம் ஆக்கிவிடலாம்
அனுதி ரட்சகரை விசுவாசித்த பேர்களின்
அடையாளம் இவைகளன்றோ
கறையான மனதினிருள் இரிதலரிதரிதே
கடாட்சித்துன் அடிமை கொள்வாய்
கருத்தா பரத்தாள் திரித்துவ வகத்துவமே
கருணையானந்த வடிவே. (திருச்செயல் 2: வே. சா.)

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையுங்,
கட்டலாம், ஒரு சிங்கமதனை முதுகின்மேல் கொளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமலுலகத்து லாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமுமிளமை யோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோமயானந்தமே. (தாயுமானவர்)

355. அறிவீனத்தினிமித்தம் தன்னையே அறியக் கூடாத மனிதன் தனது மூளையறிவால் கடவுளை அறிய முயலுவதும் இவனது அறிவீனத்தின் பயனேயாம். தனது சிந்தையில் உதிக்கும் தீய எண்ணங்களை மாற்ற சக்தி யற்ற இவன் நன்மைச் சொரூபியை அறிவது எளிதோ !

திரும்பத்திரும்ப மீறுந்தீநினை வடக்கி நான்
சீர் பொருந்திடுவ தெப்போதோ
கரும்பல்ல தீது கற்றூளை யென வெறுத்துக்
களங்க மற்றிருப்ப தெப்போதோ.

356. பித்தரோகங் கொண்டவன் தனது உடலைத் தானே காயப்படுத்திக் கொள்வதுபோல் இந்த ஞானமார்க்கத்தாரும் தங்கள் அறிவின் மாயையில் பிரமைகொண்டு முடிவில் ஏமாறிப் போகிறார்கள்,

357. கர்ம மார்க்கமென்று பலர் இக்காலம் பிதற்றுகின்றனர். அது மெய்ப்பலனளிக்கக் கூடியதல்ல என்பதை

விளக்கக் கஷ்டமில்லை. தீய நினைவினின்று நல்ல செய்கை வருமோ ? நல்லமரம் நல்ல கனியையும், கெட்டமரம் கெட்ட கனியையும் கொடுப்பது இயற்கையாயிருக்க, பாதாதிகேசம் தீமையே குடிகொண்ட மனிதனினின்று நற்செய்கையை எதிர்பார்ப்பது மதியீனமன்றோ ? மத். 7 : 16-19.

358. "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கி, எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற தேவன், தமக்கு ஏதேனும் தேவையானதுபோல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதில்லை." அப். 17 : 24, 25 என்பதை யறியாமல் தங்களுடைய கிரியைகளைக் கண்டு மகிழ்ந்து, தங்களை அவர் மாயையினின்று விடுவிக்கக்கூடும் என்றெண்ணுகிறவர்களின் வீம்பு மகாகொடிதே. அசுத்தம் நிறைந்த அகப்பையால் எடுக்கப்படும் சாதத்தைப் புசிக்கக் கூசும் மனிதன், தனது தீவினை நிறைந்த உடம்பினின்று வெளிபாகும் செய்கைகளில் ஈசன் மகிழுவாரென்றெண்ணலாமோ !

தின்மையே செயவருந்
திறனுளேன் சிறியனோர்
நன்மை யேதுஞ் செய
நாச மாயி லலனன். (கிருஷ்ணபிள்ளை)

359. நன்மை குன்றி தீமை மிஞ்சியே செல்லும் இக்காலத்தில், நான் இப்பிறப்பிலில்லையாகில் இன்னொன்றில் கருமப்பயனை முடித்துப் பிறப்பறுத்துக் கொள்வேன் என்று கூறுகிறவர்கள் வெறும் பேதைகளே யாவர். இப்பிறப்பிலேயே நன்மை செய்யத்திராணி யற்றவன் இனி எப்போ அதைக் கற்றுக் கொள்ளுவான ?

360. "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே, உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா ! தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா ! அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா ! என்கையில், அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்ட

கன்று போங்கள். நான் உங்களை ஒருக்காலும் அறியேன்" என்பார். மத். 7 : 22.

361. காணிக்கைப் பெட்டியில் பலர் ஏராளமாய்ப் போட்டும், இரண்டு காசு மட்டும் போட்ட விதவையை ஆண்டவர் மெச்சினர். கொடையின் வலிமையை அல்ல, அதன் நோக்கத்தையே கடவுள் பார்க்கிறார். எவ்வளவு கொடுத்தாய் என்றல்ல, என்ன சிந்தையுடன் செய்தா யென்றே பார்க்கும் கடவுளை மனிதன் ஏமாற்ற முயலுவதே கர்மமார்க்கம்,

362. இன்னொரு மார்க்கமும் மனிதனை வீடுசேர்க்கும் என்று சிலர் எண்ணுகின்றனர். அதுவே பக்தி மார்க்கம்.

கையொன்று செய்ய விழியொன்று நாட
கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேச புலால் கமழு
மெய்யொன்று சார செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே.
(பட்டணத்தார்)

இவ்வகுப்பாரின் கோட்பாடு என்னவெனில் கடவுளை எவரும் எந்த உருவத்துடனுவது ஊக்கமாய் தியானித்தால் அவர் தோன்றி அன்னவருக்கு முக்தி கொடுப்பாரென்பதே. இவர்களே விக்கிரக வணக்கத்தை மெச்சுகிறவர்கள். இவர் களைப்பற்றி முன்னமே தெளிவாய் எழுதியிருக்கிறேன். (130-150 காண்க).

363. சரியை, கிரியை, யோக ஞான முதலிய சதுர் முறைகள் வழியாய் சாலோக, சாமீப, சாரூப, சாயூச்சிய பதவியை அடையலாம் என்றும் பலர் எண்ணுகின்றனர். இதில் மூன்றை முன்கண்டோம். யோகமுறை யொன்றே மீதி. சுருக்கிக்கூறில், இது சரீர சுகத்துக்குரிய சில அப்பி யாசங்களேயாம். ரேசகம், கும்பகம் என்னும் பெயரால் சுவாசத்தின் வலதிடது ஓட்டத்தை மட்டுப்படுத்த முயன் று, சில ஆசனங்களால் உடலை ஒடுக்கி, அப்பியாசப்படுத்தி,

வெளி மூச்சிழுத்து, அதை மெல்ல மெல்ல வெளிவிட்டு, தனது மூக்கின் நுனியை நோக்கி, மனதை ஒருமுகப்படுத்த எண்ணி, இவ்வாறு காலம் தள்ளுவதே யோக மார்க்கமாம்.

364. தனக்கும் ஜனசமூகத்திற்கும் இம்முறையால் பிரயோஜனம் யாதொன்றுமில்லையாகுல் அதைப்பற்றிக் குறை கூறாமலே விடுத்தல் தகும் (46, 47-ல் காண்க).

365. கிருபை யென்னும் தேவ காருண்யச் செய்கையால் மட்டுமே மனிதன் வீடடையக் கூடுமென்றும், அதை உரிமையாக்கிக்கொள்ளும் கருவி விசுவாசமே யென்றும், கிறிஸ்து தெளிவாய் விளக்கிறுர். எபே, 2 : 8,

366. உங்கள் அறிவில் மாயமிருப்பதால் அதைக் கொண்டு தேவனை அறிதல் கூடாது. அறியாமையினின்று தோன்றிய பக்தியும் சிறந்ததல்ல. தீமையையே நாட்டிய நீங்கள் நற்செய்கைகளாலும் தேவ கோபத்தை ஆற்றுதல் கூடாது. கிருபையாய் அவர் உங்கள் குற்றங்களை மன்னித்தால் தவிர நீங்கள் சுயாதீனமடைய ஏது வழியுமில்லை. ‘அவர் மன்னிக்கிறதற்கு கிருபை மிகுந்த வராயிருக்கிறுர்.’ உங்கள் பாவக்கறைகளை மாற்றக்கூடியது உலக முறைகளாலுள்ள சவுக்காரமல்ல, கிருபையினின்றெழுகிய அவரது திருரத்தமே. 1 யோவா. 1 : 7. ஜீவன் வேண்டுமானால் இக்கிருபைக்கிடமாகிய என்னிடம் வாருங்கள். ‘உங்களுக்கு ஜீவன் உண்டாகவும், அது பரிபூரணப்படவும் இங்ஙனம் உலகில் வந்தேன்’’ யோவா. 10 : 10 என்றும் இயேசு மொழிந்தார்.

30. கிருபை பெற்றோரின் வழி.

367. ‘‘ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்’’ மத். 7: 14. ‘இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலர்தானே’ என்று சீஷர் கேட்டதற்கு, இயேசு பிரதியுத்தரமாக, அநே

கர் உட்பிரவேசிக்க வகைதேடியும் கூடாமற் போகும். லூக். 13 : 23, 24 என்றார்.

368. சிலுவையைப் பற்றிய கிருபையின் உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றினும், பந்த நிவிர்த்தி பெற்று வருகிற (இரட்சிக்கப்படுகிற) நமக்கோ, மிகுந்த தைரியத்தைக் கொடுக்கும் தேவ பலமுள்ளதாயிருக்கிறது, 1 கொரி. 1 : 18.

369. பிரமாண்டமான ஆசரிப்புக் கூடாரத்தில் கிருபைக்குரிய மகா பரிசுத்தஸ்தலம் மிகச் சிறிதேயானது போல, இவ்வுலகில் கிருபை பெற்றநுபவிக்கும் நண்பரும் சிலரேயாவர். இவ்வித இரட்சிப்புக்கு நேராய் அழைக்கப்பட்டோர் அநேகராயினும் தெரிந்து கொள்ளப்பட்டோர் சிலர் மட்டுமேயாம்.

370. "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள். பரலோக இராச்சியம் உங்களுக்கே" லூக். 6 : 20. ஐசுவரியவான் இந்த சந்தோஷ நிலைமைக்குள் பிரவேசிக்கிறது மெத்த வருத்தமே யாம். ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதோ? ஊசியின் காதில் சிறு நூல் நுழையுமே தவிர, உலக இன்பங்களை நாடுகிற மனிதன் அப்பாரத்தையும் கொண்டு, நெருக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்கக் கூடுமோ?

371. 'துன்மார்க்கனுடைய வழி அழியும்' சங். 1 : 6 அவன் யோசனையும் அழியும். கிருபையை எதிர் நோக்காமல் முன்னேற விரும்புகிற எவனும் இடறுதற் கேதுவான கல்லில் இடறி விழுந்து 1 பேது. 2: 4-10 தன்னைச் சேதப்படுத்துவான். உலக ஞானிகளின் பாதைகளை தேவன் தாறுமாறாக்குவார். 1 கொரி. 1 : 19-31. இந்தக் கிருபையைப் பற்றிக்கொண்டு அந்த வழியே நடக்கிறவர்கள் மற்றோரின் பார்வைக்கு அறிவிலிகள்போல் தோன்றினும் அவர்கள் திசை கெட்டுப் போவதில்லை ஏசாயா. 35 : 8.

372. இவர்கள் பாதையில் சிங்கம் இருப்பதில்லை. வேறு வழி நடக்கிறவர்கள் வழியில் பால சிங்கம் இரைக்காகக் கெர்ச்சித்து கிடக்கும். தங்கள் அறியாமையாலே இவர்கள் அவைகளுக்கு இரையாவார்கள். ஜீவ பாதையில் நடப்போரை யூதாக் கோத்திரத்துச் சிங்கம் நடத்துகிற படியால் பால சிங்கத்தையும் வலு சர்ப்பத்தையும் மிதிக்கக் கூடிய சத்துவத்தையும் கொடுத்து மீட்டு நித்திய மகிழ்ச்சியுள்ளவர்களாக்குகிறார் ஏசாயா. 35 : 9, 10.

373. தீமைக்குள் தாக்கவேண்டுமென்னும் ஆசையால் பதிவிருக்கிற தீங்கன் மக்கள் தாழ்ச்சி யடைந்து பட்டினியாயிருக்கையில் தேவபுத்திரரோ யாதொரு குறைவுமின்றி முன்னேறிச் செல்வார்கள். சங். 34 : 10.

374. இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் காண்போர் சிலரேயாம். மாம்சத்திலிருந்த நாட்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரைக்காண விரும்பி வந்து கண்டு களித்தனர். ஆனால் உயிர்த்தெழுந்த பின்னர் ஏறக்குறைய ஐந்நூறு பேருக் கொரே வேளையிலும், தனித்தனியே சிலருக்குமாக மட்டுந்தான் காட்சி கொடுத்துப் போயினர். 1 கொரி. 15 : 2-5. உயிர்த்தெழுந்த பின் இயேசுவின் சத்துருக்கள் எவரும் அவரைக் காணவில்லை.

375. இயேசு சிலுவையிலறையப் பட்டதை பண்டிகைக்குக் கூடிவந்த எல்லா ஜனங்களும் பகிரங்கமாய்க் கண்டு திரும்பினர். ஆனால் அவரை உயிர்த்தெழுந்தவராகக் கண்டவரோ சிலர். சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டு, மார்பிலடித்துப் புலம்பினர். மாற்கு. 15 : 40. அவர்களிலொருத்தி மகதலானா மரியாள் என்பவள். இயேசுவின் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டும் அவள் பின்னும் அவரையே பார்க்க வாஞ்சித்தாள். உயிரற்ற உடம்பையாவது கண்டு, பரிமள தைலம் ஊற்றலாம் என்று எண்ணி, சுகந்த வர்க்கங்களையும் எடுத்துக் கல்லறை நோக்கி நடந்தாள். அதிகாலை இருட்டோடே அவள் அங்கு செல்ல

வும், அவள் இயேசுவை சூக்கும சரீரியாய்க் கண்டு பிரமித்து நின்றாள். தோற்றத்தில் வித்தியாசமாயினும் பேச்சு அவரை வெளிப்படுத்திய படியால் அவள் மிகுந்த சந்தோஷத் துடன் இச்செய்தியைப் பலருக்கும் அறிவித்தாள். அவளே முதல் முதல் தரிசனை பெற்றவள்.

376. உனக்குள் இயேசுவைக் கொலை செய்வது இலேசு. அந்நன்மை வடிவத்தைத் திரும்ப உயிர்ப்பிப்பதோ மகா கஷ்டம். மலைமேலிருக்கும் கல்லை உருட்டிக் கீழே தள்ளுவது எளிது. மேலேற்றுவது பிரயாசம். தீமை யினால் உன்னைக் கெடுப்பது வருத்தமல்ல. இழந்துபோன நன்மையைத் தேடிக்கண்டு பிடிப்பது சங்கடம்.

377. உயிரோடிருந்த காலத்தில் இயேசுவை நேசித் தவர்கள் மட்டுமே, மரணத்திற்குப் பின்னால் அவரைக் கண்டனர். நன்மையில் நாட்டமில்லாதவர்களுக்கு அச் சொரூபம் தென்படாது. "முன்னே நான் தூஷிக்கிறவனா யிருந்தேன். ஆயினும் அறியாமையினால் செய்தபடியால் இரக்கம் பெற்றேன்". 1 தீமோ. 1 : 13. என்றார் பவுல். தீமையே நலமென்று விரும்புகின்ற மானிடர் நன்மை வடி வத்தைச் சிலுவையிலறைய மட்டுமே அறிவர். அவர்கள் கண்ணுக்கு அதற்குப் பின் காரியங்கள் தென்படாது.

378. இயேசுவை அறியாமையால் கொன்றதினிமித் தம் மனஸ்தாப மடைந்து, அதையிட்டேபேசிக் கலங்கிக் கொண்டிருந்தவர்களுக்குத் தான் இயேசு தோன்றி 'உங் களுக்குச் சமாதானம்' என்றார், ஏரோதோ, பிலாத்து வோ, பிரதான ஆசாரியரோ, உயிர்த்தெழுந்த இயேசுவைக் காணாததின் அந்தரங்கம் இதுவே.

379. நண்பா, நீ இந்த உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்திருக்கிறாயா? அவர் உனது உள்ளத்தின் தாழ்விடங் களில் அடக்கம் பண்ணப் பட்டவராய்க் கிடக்கிறார். நீ உனது அறியாமையை நினைத்து, வருந்தி, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பிய தெய்வீக வல்லமையில் விசு

வாசம் கொண்டால், அவர் உனக்கும் அவருடைய உயிர்த்தெழுதலின் ஆவியைத் தந்து இருண்ட அடிமைத்தனத்திலிருந்து உன்னை வெளியேற்றுவார்.

380. அவர் உன்னைத் தமது ஆச்சரியமான ஒளியால் நடத்தும் ஜீவபாதை இந்த இருண்ட உலகில் எவ்வளவு அழகாயிருக்கிறது. தீமையையே நினைத்து, தீமையையே பேசி, தீமையையே செய்துவரும் மனிதகுமாரர் மத்தியில், நன்மையையே கருதி அதிலே பழகி வருகிற தேவ குமாரனுடைய பாதைகள் எவ்வளவு சமாதானமுடையது.

381. இந்தக் கிருபையின் மார்க்கத்தைச் சுவிசேஷமாகக் கூறி, நாடு நகர் அலைந்து திரியும் தொண்டர் காலடிகள் உயர்ந்த மலைகள்மேல் எவ்வளவு அழகாயிருக்கிறது ஏசாயா. 52 : 7. அவர்கள் போகுமிடமெல்லாம் சந்தோஷம் அப். 8 : 8. செய்யும் செய்கைகள் சற்சன சமூகத்திற்குப் பேரானந்தம். துன்மார்க்கருக்கும், ஜீவபாதையில் நடக்க மனமற்றவர்களுக்கும், இப்பாதை கடினமான பாதை.

382. அழகியவழி எவருக்கும் இடறலாயிராதிருந்தாலும், நன்னடக்கையில்லாதவர் அவ்வழி நடக்க முயலுகையில் சறுக்கி விழுவார்கள். தீமையை விரும்புகிறவர்கள் இதின் பக்கம்வர அஞ்சி ஓடுவார்கள். ‘தீட்டுள்ளவன் அதிலே பிரவேசிப்பதில்லை, மீட்கப்பட்டவன் (விடுதலைபெற்றவன்) மட்டும் தைரியமாய் அவ்வழியே நடந்து செல்வான்.’ ஏசாயா 35 : 8-10.

383. உயிர்த்தெழுந்த இயேசுவை தீங்கன் அணுகாதவண்ணமே இப்பரமபாதையை துஷ்ட மிருகமும் சிங்கமும் கிட்டுவதில்லை. தைரியமாயும் சந்தோஷமாயும் நடக்கக்கூடிய பாதை மிக அழகாய் ஒழுங்காக்கப்பட்டிருக்கிறது. மீட்பின் (விடுதலையின்) நற்செய்தி செல்லுமிடமெல்லாம் சந்தோஷமே உற்பத்தியாகும். தீமையினாலுண்டாகும் சலிப்பும் வேதனையும் அங்கில்லை.

384. இப்பாதையே நடக்க, ஜாதி முதலிய உலகப் பற்றுகள் எவருக்கும் தடையாயிருப்பதில்லே. விசுவாசிக்கிறவன் எவனே அவன் இவ்வழியே நடக்க யாதொரு தடையுமில்லே. 'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்துழலுகிறேன்' என்று அறிக்கை செய்யும் எல்லாரும் இவ்வழியே நடக்கலாம். கிறிஸ்து இவ்வழியே நடக்க முயலுகிறவர்களேச் சிறப்பிக்கிறவராய் நிற்கிறபடியால், 'அவரே எல்லாருக்குள்ளும் எல்லாமுமாயிருந்து,' யூதன், கிரேக்கன் என்னும் வித்தியாசங்களே ஒழிக்கிருர். யோவா. 3 : 16; மத். 11 : 28, கொலோ. 3 : 11, கலா. 3 : 28.

385. இவ்வழியைக்கண்டு உலகத்தார் ஆச்சரியப்படுவார்கள். வெட்டாந்தரையில் தண்ணீர்த் தடாகம் உண்டானது போலவும், வனாந்தரம் மகிழ்ந்து, கடுவெளி களித்து, செழித்துப் பூக்கிறது போலவும், பிள்ளேபெருத மலடி பிள்ளே பெறுவது போலவும், இது பார்ப்போருக்கு மிக வியப்பைக்கொடுக்கும். இவ்வழியைத் தாக்கிய இருள் இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினுல் அகன்றுபோம். மெய்யான ஒளி, விசுவாசிக்கிற அத்தருணத்திலேயே பிரகாசிக்கிறபடியால், இதற்குரிய கற்பனே புதிது என்று அழைக்கப்படும். 1 யோவா. 2 : 7, 8.

386. மரணம் இனி தங்களே ஆண்டுகொள்ள முடியாது என்பதை 'சிறைப்பட்டவர்கள்' கேள்விப்பட்டு மிகுந்த ஆனந்தக் களிப்புடன் பாடி, அவர்கள் சீயோனுகிய 'ஆவிஸ்தானத்திற்கு' ஏறி வருவார்கள். ஏசாயா. 35 : 10 ; இவர்கள் வழி நடக்கும் வீதிகளில் ஆடல் பாடல்களின் சத்தமும், ஆண்களும பெண்களும் பிள்ளேகளேப்போல் விளேயாடி மகிழுகிற மகிழ்ச்சியின் சத்தமும் இனிதாயிருக்கும். சகரியா 8 : 5.

387. இந்தப் பாவச்சிறையிருப்பைக் "கிருபையால்" கர்த்தர் திருப்பவும், வழிகளில் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டி

யின் சத்தமும் கேட்கப்படும். இன்னும் உற்றுக்கேட்கில், சேனைகளின் கர்த்தர் நல்லவர், அவரைத் துதியுங்கள்; அவர் கிருபை நித்திய மட்டாய் என்று முள்ளதென்றும் பலர் பாடுவார்கள். எரே. 33 : 11. இன்னும் திரள்கூட்டம் இப் படிப்பாடுகையில், ஜனங்களெல்லாரும் பல்லவியாக, "அவர் கிருபை என்று முள்ளது" என்று பாடிக் களிப்பார்கள். சங். 136.

388. இப்பாதை வழியே நடக்கப்பெற்ற சிலாக்கியம் தங்கள் கிரியைகளால் உண்டாகவில்லை என்பதைக் கண்ட வுடனே, அவர்கள் ஏகோபித்து, கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளையிட்டு மறுபடியும், "அவர் கிருபை என்று முள்ளது" என்று பாடி மகிழுவார்கள். செங்கடல் தாண்டியவுடன் மோசேயின் சகோதரி மிரியாமுக்குள்ளுண்டான சந்தோஷ த்திற்கு மேலான சந்தோஷம் இங்கு முண்டாகும்.

389. இவர்கள் சந்தோஷத்தைக் கண்ணுறும் மற் ரேரும் இவர்களைப் பார்த்து குருடராயிருந்தவர்கள் இவர் களல்லவா! பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்த சப்பாணிகள் இவர்களல்லவா? என்று ஆச்சரியப்பட்டு நிற்கையில், இவர் கள் மறுமொழியாய் நாங்கள் தான் இயேசுவைச் சிலுவை யிலறைந்த துரோகிகள். ஆயினும் இரக்கம் பெற்றேரும். அவர் எங்களுக்குள் உயிர்த்தெழுந்தார். எங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிருர். மாற். 16 : 7. நாங் கள் அவரது அடிகளை முத்தமிடப் போகிறேம் என்று களிப்பார்கள்.

390. நீங்கள் இவ்வளவு சந்தோஷமாய்ப் போகும் இடம் எது என்று யாரேனும் இவரைக் கேட்டால்,

ஸ்தலம் ஹா மகா விசேஷம்
பலன் என்ன மதுரம்
வேண்டாமே இப்பூவுலகம்
அல்லவே என் நகரம் என்று பாடி,

நண்பரே, இப்போதே நாம் தேவ புத்திரராகி விட்டோம். ஏனெனில் கிறிஸ்துவின் ஆவியை நாங்கள் 'கிருபை' யால்

பெற்றோம். அதே ஆவியால் நடத்தப்பட்டும் வருகிறோம். இனி எங்களுக்குப் பயம் இல்லை. ஏனெனில் கடவுளை எமது பிதாவாக்கிக் கொண்டோம். ரோம. 8 : 10-15. இனிமேல் எப்படியாவோம் என்பது தெளிவாய் கிரகிக்கக் கூடியதல்ல. ஏனெனில் இப்பொழுது அடைந்த நிலைமையே சற்றுமுன் எங்கள் கனவிலும் தோன்றவில்லையே. இவ்வளவு நொடிக்குள் 'புழுதியிலும் சாம்பலிலும் கிடந்து புரண்ட அசுத்தராம் எங்களைக் கைதூக்கியெடுத்து, அதிபதிகளோடும் இராஜாக்களோடும் உட்காரச்செய்த' 1 சாமு. 2 : 8. 'கிருபை' இன்னும் எங்களில் என்னென்ன விசேஷித்த மாறுதல்களை உண்டு பண்ணுகிறதோ அறியோம். ஒன்று திட்டம். 'நன்மையுகம் வருகையில் நாங்களும் பூரணவாய் நன்மைவடிவமாகிய அவர் சாயலையே அடைந்து அவருக்கு ஒப்பாயிருப்போம்.' 1 யோவா. 3 : 2. என விடை பகர்வார்கள்.

391. ஆ ! கிருபையின் பாதை எவ்வளவு அழகாயிருக்கிறது. அதில் நடப்போருக்கிடையில் உயர்வு, தாழ்வு இல்லை. எவரும் பெருமை கொள்ளுகிறதுமில்லை. ஏனெனில், அவர்கள் பிரயாசத்தின் பயனல்லவே இப்பாக்கியம். கிரியைகளினாலுண்டானதாயிருந்தால், கிருபையினாலல்லவே. ரோமர். 11 : 6. கிருபையினாலே யாகுமானால் கிரியை செய்வோருக்குப் பெருமைக்கிடமில்லையே. இவ் வழகிய வழி நடப்போர் கவலையீனத்தால் வலதிடதுபுறம் சாயும்போது, 'வழி இதல்ல' என்றும், நேர்வழி நடந்து செல்லுகையில் 'வழி இதுவே, இதிலே நடவுங்கள்' என்று சொல்லுகிறவரின் சத்தத்தையும் கேட்பார்கள். ஏசாயா. 30 : 21.

392. துக்கமே இப்பாதையில் இல்லை. சகல தீமைக்கும் காரணமாகிய இச்சை இவ்வழியே நடப்பவரில் காணக் கிடையாது. அவர்களில் ஒருவனும் தனக்கென்று உழைக்கிறதுமில்லை பிழைக்கிறதுமில்லை. ரோம. 14 : 7. 'யாவரும் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைக்

கிறார்கள்.' 2 கொரி. 5 : 15. முன் இருளிலிருக்கையில் இவர்கள் இடறியதுபோல இனிமேல் இவர்கள் இடறுகிற தில்லை. ஏனெனில் மெய்யான வழிகாட்டி "இதோ உலகத்தின் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்." மத். 28 : 20 என்று கூறும் சத்தம் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் இவர்கள் காதுகளில் விழுந்துகொண்டேயிருக்கிறது.

393. இப்பாதை ஒருவேளை இருளும், மறுவேளை வெளிச்சமுமாயிருப்பதில்லை. சாயங்காலமும் விடியற்காலமும் இனி இவர்கள் ஜீவியத்தில் மாறி மாறி வருவதில்லை. ஆதி. 1 : 5, 8, 13, 19, 23, 31. ஏனெனில் இவர்கள் ஆறு நாட்களையும் கடந்து, இருளற்ற, இரவு பகலற்ற (கங்குல் பகலறநின்ற) ஏழாம் நாளில் பிரவேசித்து விட்டார்கள். சகரியா. 14 : 7. இனி இவர்களுக்குச் சூரியனும் சந்திரனும் (வானஜோதிகள்) வெளிச்சம் கொடுக்கத்தேவையில்லை. அவைகளைப் படைத்த கர்த்தர் இவர்கள்மேல் உதயமாகிவிட்டார்.

394. சஞ்சலம் நிறைந்த துக்க நாட்கள் முடிந்துபோயிற்று, ஏசாயா. 60 : 19. ஞானவிளக்கு எரிய ஆரம்பித்துவிட்டது. இனி நித்தியமட்டும் வேறு வெளிச்சம் தேவையில்லை. நித்திய வெளிச்சம் இயேசுவாய் இவர்களில் விளங்கி நிற்கிறது. ஏசாயா. 60 : 20. அடிக்கப்பட்ட (சிலுவையிலறையப்பட்ட நன்மை வடிவமே) ஆட்டுக்குட்டியே இவர்களை நடத்துகிற விளக்கு. வெளி. 21 : 23 ; 22: 5. இன்றும் என்றும் சதா காலங்களிலும் இவர்கள் தங்கள் சரீர இச்சைகளால் ஆளப்படுகிற பிரஜைகளாயல்ல, அவைகளை ஆண்டு நடத்துகிற இராஜாக்களாகவும் ஆசாரியக்கூட்டமாகவும் விளங்குகிறார்கள். 1 பேது. 2 : 9.

395. இழந்துபோன அரசகிரீடம் இவர்களுக்கு மறுபடியும் கிடைத்தாயிற்று. ஆவி ஸ்தானத்தில் அவிந்துபோன விளக்கு மறுபடியும் ஏற்றிவைக்கப்பட்டாயிற்று.

கர்த்தர் இவர்களிலிருந்த சீயோனை மறுபடியும் தெரிந்து கொண்டு, அது என்றென்றைக்கும் தமது வாசஸ்தலமாகும் படி விரும்பினார். சங். 132 : 13, 14. மனிதர் விருப்பத்தி னாலல்ல, தமது சுய இஷ்டத்தினாலேயே (கிருபை) இப்படி விரும்பினார். இனி ஒரு சாபமுமிராது. சாபத்திற்குரிய வன் (தீங்கன்) இவரைக் கண்டவுடனேயே ஓடிவிட்டான். ஆகையால் இவர் அங்குள்ளயாவரையும் ஆசீர்வதித்து, பசி யுள்ளோரைத் திருப்தியாக்குகிறார். அதின் மனிதரை ஆசாரியராக்கி, அவர்களுக்கு ஆத்துமா மாயையினின்று விடுவிக்கப்படுதலாகிய இரட்சிப்பை உடையாக உடுத்துகிற படியால் அவர்கள் மிகவும் கெம்பீரிக்கிறார்கள். சங். 132 : 15, 16.

396. இம்மட்டும் இவர்களை ஒடுக்கிய ஆசை முதலிய பகைவர்கள் வெட்கி, நாணி, தலைகுனிகிறார்கள். ஏனெனில் இனி அவைகளுக்கு இவர்கள்மேல் வல்லமையில்லை. 'கிரு பையினால்' அபிஷேகம் பண்ணப்பட்ட தொண்டருக்கு ஒரு விளக்கை ஆயத்தம் பண்ணியவுடன், அவர்கள் தலைமீது கிரீடங்கள் வைக்கப்பட்டு, பூக்கள் செடியை அலங்கரிக்கு மாப்போல் இவர்களையும் சிறப்பிக்கிறது. சங். 132 : 17, 18.

397. பாதாள திசையாகிய மாம்ச ஸ்தானத்தில் புதைந்துபோன நன்மை வடிவம் அங்கிருந்து முளைத்து, பூவுலகின்கண் ஏறக்குறைய நாற்பது நாளளவும் தொண்டரு க்குக் காட்சியளித்து, பின் யாவரும் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கையில், பரலோகத்துக் கெடுத்துக்கொள்ளப் பட்டு, பிதாவின் வலதுபாரிசத்திலுட்கார்ந்தார். தாம் பாதாள உலகில் செல்கையில் அங்கு தம்முடன் மரணத்தில் ஐக்கியப்பட்டவர்களையும் அவர் தூக்கி உன்னதங்களிலே உயர்த்திவிட்டார். எபே. 1 : 3.

398. அவர் முன்னோடியதைக்கண்டு, இப்பாதை நடக்க முயன்றவர்களும் தைரியமாய் உன்னதத்திற்கேறி

வருகிறார்கள். தீங்கனின் சத்துருவங்களைத் தமது மரணத்தினாலே ஜெயித்து ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினால் கட்டுண்டவர்களை விடுதலையாக்கியதினிமித்தம் இவரால் மீட்கப்பட்டவர்கள், ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனாகிய ஆவி ஸ்தானத்திற்கு நடந்து வருகிறார்கள். ஏசாயா. 35 : 10. வழியில் ஆத்தும ஸ்தானத்திற்கும், ஆவி ஸ்தானத்திற்குமிடையில் மரண இருளின் பள்ளத்தாக்காகிய அழுகையின் பிளப்பு இருக்கினும், இவர்கள் சீயோனுக்குச் செல்லும் மகிழ்ச்சியினால் இப்பள்ளத்தாக்கை உருவ நடந்து, அதைச் சந்தோஷமான நீரூற்றுகளாக மாற்றிக்கொள்ளுகிறார்கள். சங். 84 : 5-7.

399. இவர்கள் ஆவி ஸ்தானத்திற்குள் பிரவேசித்தவுடனே, 'சீயோன் உங்கள் தலையிலிருக்கிறது. நித்திய மகிழ்ச்சியோ உங்கள் தலையின் 'மேல்' இருக்கிறது' என்னும் சத்தம் இவர்கள் காதுகளில் விழுகிறது. ஏசாயா. 51 : 11. அச்சமயம் நடந்து வந்த பிரயாணிகள் ஒவ்வொருவரும் தங்களை உற்றுப் பார்க்கையில், இப்பொழுது 'ஆண்டவருடைய தீபம் என் தலையின்மேல் பிரகாசிக்கிறது.' அவர் கிருபையாய் அளித்த வெளிச்சத்தினால் 'நான் இருளைக்கடந்து வந்தேன்', சகலமும் இரகசியம்போல் தோன்றுகிறது. வேறெங்குமல்ல இந்த மகத்துவமான செயல் என் சரீரமாகிய கூடாரத்திலே தான் இருக்கிறது. யோபு. 29 : 3, 4 என்று சொல்லி, ஆனந்தக்களிப்புடன் பாடுவார்கள்.

31. தேவ புத்திரரின் சிலாக்கியங்கள்.

400. இப்படி "இயேசுவின் நாமத்தில் விசுவாசமுடையவர்களாக அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." யோவா. 1 : 12. இவர்கள் இந்நிலைமை அடைந்தது தங்கள் பக்தியினாலுமல்ல, கிரியைகளினாலுமல்ல, அறிவினாலுமல்ல தேவனுடைய சுத்த கிருபையினாலேதான்.

401. முன் இவர்கள் மாம்ச சிந்தைக்கிசைய துர்க்கிரியைகளை நடப்பித்து கலா. 5 : 19-21. தங்களுக்கே கெடுதியை வருவித்துக் கொண்டார்கள். இப்போதோ அந்தகாரத்தின் கிரியைகள் இவர்கள் ஜீவபாதையில் தலைகாட்டுவதில்லை. ஒளியின் ஆயுதங்களாகிய ரோம. 13 : 12. அன்பு, சந்தோஷம், தாழ்மை, பொறுமை, சாந்தம், சமாதானம், தயவு, விசுவாசம், இச்சையடக்கம் முதலிய நற்குணங்களில் பழகி வளருவார்கள். கலா. 5 : 22, 23.

402. இவர்களுடைய பாதை உலகத்தாருக்கு மெத்த விகற்பமாய்த் தோன்றும். ஆகையால் மனித குமாரர் தேவ குமாரருக்குத் தீமை செய்யத் தலைப்படுவார்கள். கலா. 4: 29. ஆவிக்கிசைய நடக்கும் இவர்கள் உலகத்தாரின் பார்வைக்கு பைத்தியம் பிடித்தவர்கள்போல் தோன்றுவார்கள். உண்மையில் இவர்களைக் குறை கூறுபவரே பித்தராவர்.

403. இவர்கள் கிறிஸ்துவுக்குள் (நன்மைக்குள்) மகிழுவதைக் காணும் உலக மக்கள், இவர்களை அந்த மெய் இன்பத்தைவிட்டுப் பிரிக்க, பல தந்திரோபாயங்களைச் செய்வர். இவர்களோ அவர்கள் செய்யும் கொடுமைகளை மனதில் வையாது : 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும். இவர்கள் அறியாமையை அகற்றும்' என்று அவர்களுக்காய் இறைவனை மன்றாடுவார்கள். அப். 7: 60.

404. உலக வழிபாடுகளுக்கு இவர்களை அடிமைப் படுத்தப் பலர் முன்வந்தால், இவர்களோ "நாங்கள் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்கள். சத்திய ஆவியாகிய அவர் எங்களை சகல மாயைக்கும் விலக்கி, சத்தியத்திற்குள் நடத்துவார்." யோவா. 16 : 13. "கர்த்தரே ஆவியானவர். அந்த சத்திய ஆவியானவர் எங்களுக்குள் தரித்திருக்கிறபடியால், நாங்கள் எல்லா நுகத்தடிகளுக்கும் நீங்கி விடுதலை பெற்றோம்." 2 கொரி. 3 : 17 என்று பிணையல்களை உதறித் தள்ளுவார்கள்.

405. இவர்களது முன்னிலைமைகளைச் சுட்டிக்காட்டி, இவர்களைக் குற்றப்படுத்த வந்தால், இவர்கள் பொறுமையாய், நாங்கள் தோஷிகள்தான், எங்கள் சுய கிரியைகளின் புண்ணியத்தினிமித்தமல்ல, தேவகிருபையின் வலிமையினாலேமட்டும் நாங்கள் இரக்கம் பெற்றோம். நாங்கள் பாவிகளாய் மரித்து, பாதாளலோகத்தில் கிடந்து தவிக்கையில், கிறிஸ்து எங்களை இரட்சிக்க, எங்களைப்போலவே அவ்விடம் வந்து பாவத்திற்குள்ளானார். அவரை நாங்கள் பற்றிக்கொண்டோம். அவரை உறுதியாய்ப்பற்றிக் கொண்ட எங்களை அவர் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்ளுகிறார். ஏசாயா. 26: 3. கிருபையின் வல்லமையால் தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பவும், அவரைப்பற்றிய நாங்களும் அவரோடுகூடவே, நீதிக்குள் உயிர்ப்பிக்கப்பட்டு, உன்னதங்களில் ஏறி, அவருடனேகூட உட்கார்ந்து, அரசாட்சியும் செய்கிறோம். எங்களைத் தண்டிக்கவேண்டிய நீதிபரராகிய அவரே எங்கள் அக்கிரமங்களைக் கிருபையாய் மன்னித்து, தமது நீதியை எங்களுக்களித்து எங்களை நீதிமான்களாக்கினதுண்டானால், பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய நீயும் உனது மக்களும் எங்களைக் குற்றப்படுத்தக் கூடுமோ? ரோம. 8: 33. சீ! போ! என்று பதிலுரைப்பார்கள்.

406. இதைக்கண்ட பொல்லாங்கன் கோபமூண்டு, பட்டணத்தில் முதலாளிகளை இவர்கள்மேல் எடுத்துவிட்டு அப். 13 : 50 இப்படிப்பட்டவர்களை ஊருக்குப் புறம்பே தள்ள பல கருவிகளை உபயோகித்தால், இவர்கள் தைரியமாய் ‘சரீரத்தைமாத்திரம் கொலை செய்யக்கூடியவர்களுக்கு நாங்கள் பயப்படுகிறதே இல்லை. கடவுளுக்குமட்டுமே பயப்படுவோம்’ மத். 10 : 28 என்று நிமிர்ந்து நிற்பார்கள்.

407. பொய்யனுக்குத் தைரியம் இருக்கக் கூடாதாகையால் அவன் இன்னும் இவர்களுக்கு ஏதாவது துன்பம் செய்யவேண்டுமென்று பல திருக்குகளை யோசிப்பான். கிறிஸ்துவின் அன்பைவிட்டு இவர்களைப் பிரிப்பதே இருள

ணின் வாஞ்சை. காம இச்சையால் வேசியோடு இசைகிற எவனும் அவளுடனேயே ஒரே மாம்சமாயிருப்பானும். 1 கொரி. 6 : 16. அப்படியிருக்க கிறிஸ்துவோடு இசைந்திருக்கிறவன், அவரோடே ஒரே ஆவியாய்க் கலந்துவிட்டால் ஆவிக்காவியைப்பிரிக்க வழியென்ன? 1 கொரி. 6: 17.

408. இதினால் இவர்கள் இயேசுவினிமித்தம் அநுதினமும் தூஷிக்கப்பட்டு, கொல்லப்படுகிறதுபோல் தோன்றினும், இவர்களைக் கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்க எவராலும் கூடாது. ரோம. 8 : 35. உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, முடிவில் பட்டயமோ எதுவும் பிரயோசனமற்றதாகவே முடியும்.

409. இவர்கள் நீதியினிமித்தம் துன்பப்படுகிறதைக் கண்ணுறும் நீதிபரரும் இவர்கள் துன்பங்களில் சோர்ந்து இளக்கரித்துப் போகாதபடி இவர்கள் சமீபம் வந்து, "பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன். திகையாதே. நான் உன் தேவன்" ஏசாயா. 41: 10. இந்தத் துன்பத்தை வரவிட்ட நான் இதிலிருந்து நீ தப்பித்துக்கொள்ள வேண்டிய போக்கையும் கிருபையாய் காட்டுவேன். 1 கொரி. 10 : 13 என்றுசொல்லி நிற்பார்.

410. கிருபை பெறுவதற்கு இதுதான் வழி என்று இவர்கள் கண்டவுடனே, இவர்கள் துன்பங்களில் மகிழ்ந்து, கிறிஸ்துவினிமித்தம் வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் அதிகமாய்ப் பிரியப்படுவார்கள். 2 கொரி. 12 : 10. உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பழக்கத்தையும் (habit, experience) நற்குணம் நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று அறிந்து, இவர்கள் உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுவார்கள். ரோம. 5 : 3, 4.

411. அத்திமரம் துளிர்விடாமற் போனாலும் திராட்சைச்செடியில் பழம் உண்டாகாமல் போனாலும், ஒலிவ மரத்

தின் பலனற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளை வியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற் றுப்போனாலும், தொழுவத்தில் மாடு இல்லாமற் போனா லும் இவர்கள் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாயிருந்து, இவர் களுக்கு நற்கதியளித்த தேவனுக்குள் களிகூருவார்கள். ஆப. 3 : 17, 18.

412. இவர்கள் தெளிந்த புத்தியுடையவர்களாய் தேவ சித்தம் இன்னின்ன தென்பதைப் பகுத்தறிந்து, அதற் கிசைய நடப்பதாலே மனம் புதிதாக்கப் பட்டவர்களாய் ரோம 12 : 2. கண்ணாடியானது தன்மேல் வீசும் ஒளியை பிரதிபிம்பிப்பதால் அவ்வொளி நிறமடையுமாப் போல் இயேசுவின் சிந்தையை யறிந்து, உலகத்திற்கு அதை வெளி யிடுவதாலே நாளடைவில் அச்சாயலுக் கொப்பாகவே மறுரூபமாக்கப் படுகின்றனர். 2 கொரி. 3 : 18.

413. இவர்கள் ஆவி மாயையினின்று விடுவிக்கப்பட்ட படியால், இவர்கள் ஆத்துமாவும் தன்னயமற்றதாய் சுய வொறுப்புடன் வாழுவதுமல்லாமல், இவ்வுலக வாழ்க்கையின் முடிவில் இவர்கள் மாம்சமும் ‘மகிமையடைவேன்’ என்கிற நம்பிக்கையோடே தங்கியிருக்கும். சங். 16 : 9. அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந் தெழுப்பினவருடைய ஆவி இவர்களில் தங்கியிருக்கிறபடியால், அவர் அதே ஆவியால் சாவுக்கினமான இவர்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோம. 8 : 11. உலகத்தார் இதைக் கேட்டுப் பரியாசம் பண்ணுவார்கள். ஏனெனில் அவர்களுக்குள் உயிரோ டெழுந்த இயேசுவுக்கிடமில்லை.

414. இவர்கள் ஆவிக்கிசைய நடப்பதால் மாம்ச சிந் தையை அடக்கி ஆளக்கூடியவர்களாகிறதால், முடிவு மட்டும் ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஒன்றையொன்று இச்சிக்கிறது. கலா. 5: 17 ஆவி மாம்சத்தை ஆண்டு நடத்துவது போலவே, ஆவிக் குரியவர்களாகிய கிறிஸ்தவர்கள் மாம்சத்துக்குரியவர்களை

தங்கள் ஆளுகைக்குள்ளாக்கியே நடத்துவார்கள். விக்கிரக சேவை செய்யும் தேசமும் ஜாதியும் சுய ராஜ்யம் பெறுவதெங்ஙனம்? (151, 152 காண்க) எக்காலத்திலும் இந்து தேசம் தன் எல்லையைக் கடந்து மறு நாடுகளை அடக்கி ஆளாததின் இரகசியம் இதுவே. விக்கிரக சேவை செய்யும் மனிதருடைய ஆவி மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் சரீரப்பற்றுகளும் திட்டமாகவே அம்மாயைக்குக் கீழ்ப்பட்டே இருக்கும். இவர்கள் தேவ புத்திரராய் மாறும் வரைக்கும், அல்லது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, சத்தியத்தினால் விடுதலையடையும் வரைக்கும் சகலமும் அடிமைத்தனத்திற்கே கீழ்ப்பட்டிருக்கும். ரோம. 8 : 19-21.

415: தங்களைவிட்டு மேலுலகேறிப்போன இயேசு மகிமை பொருந்தினவராய் மிகுந்த ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்திறங்கி வருகையில், கிறிஸ்துவுக்குள்ளாகி முன்னமே மரித்தவர்களும் இப்போது உயிரோடிருக்கிறவர்களும் ஒரு இமைப்பொழுதிலே மறு ரூபமாக்கப்பட்டு, அவருடனே உன்னதங்களிலேறிச் செல்வார்கள் என்னும் நம்பிக்கையோடு, இவர்கள் இவ்வுலக ஜீவியத்தை ஓட்டுகையில் 1 தெச. 4 : 16 ; 1 கொரி. 15 : 51 ; இந்நிலைமைக்கு வராத மற்றோர் இவர்களைநோக்கி : 'அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? தொன்று தொட்டு இன்றுமட்டும் சகலமும் இருந்தவண்ணமாகவே இருக்கிறதே' 2 பேது. 3, 4. 'இயேசுவின் வருகையைத் தடுக்க வேண்டும்' என்று கேலிசெய்து தாங்கள் காணாதவைகளையும் அறியாதவைகளையும் தூஷிப்பதினாலே தங்கள் கேட்டிலே கெட்டழிவார்கள்.

416. இவர்களோ, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த இயேசுவையே நினைத்துக்கொண்டு, எபி. 12 : 3 தன் மணவாளனுக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிற மணவாட்டியைப்போல அநுதினமும் அவர் வருகையையும், பிரசன்ன

மாகுதலையும் எதிர்பார்த்துக்கொண்டு பின்வருமாறு பாடிக் களிப்பர்.

('அப்பப்பா யோனாவே' என்ற மெட்டில் பாடலாம்.)

பல்லவி

இயேசு வரும் நாளதினில் என்னுள்ளம் பொங்கிடுமே

அனுபல்லவி

எந்நேரம் வந்திடினும் இருப்பேன் நான் ஆயத்தம்

சரணங்கள்

1. வருவாரே மன்னர் தாம் மகிமையுள்ள தூதரோடும்
(1 தெச. 4 : 16-18)
வான மண்டல மசைய வானோர் எக்காளமுடன்--இயேசு வரும்

2. அன்பின் கயிறற்றுவிழ அவகை நெஞ்சம் துடிதுடிக்க
எம்பெருமான் இயேசுவுடன் ஏழையேன் சேர்ந்திடவே
இயேசு வரும்

3. தாதன் தன் வலபுறத்தில் நாதனே சிருந்திடினும்
பாதம் சேராதோரை இடபுறமாய்ச் சேர்த்திடவே
இயேசு வரும்

4. ஜென்மத்ரேக மதுவும் மண்ணுடன் மண்ணாகிவிடவே
ஆன் மச்சரீரமது அதினின்று தோன்றிடுமே
(1 கொரி. 15 : 42) இயேசு வரும்

5. ஜீவனைக் கண்டடைந்தோர் ஜெகமதில் மீந்திருக்க
தேவ சுதன் திருவருளால் திரு உருவாய் மாறுவரே
இயேசு வரும்

6. மணவாளன் வருகையினில் மகிழ்ந்திடுவோர் கன்னியரே
மனம்போல நடப்பவரும் மகிழுவரோ அந்நாளதினில்
இயேசு வரும்

7. தம்பதிகள் மகிழும்போல் அன்பருடன் மகிழ்வேன் நான்
இன்பமதைச் சாற்றிடவே என் நாவுக் கேலாதே
இயேசு வரும்

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முழுவதும் பரிசுத்தப்படுத்தி உங்கள் ஆத்மா, சூக்மம் தேகமாகிய முழுத்தன்மையிலும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னமாகுதலில் குற்றத் திற்கௌளாகாதவர்களாகக் காணப்படும்படி காத் தருளுவாராக. உங்களை அழைக்கிறவர் நம்பத்தக் கவர், அவர் அப்படிச் செய்யாதே தீர்ப்பார்." 1 தேச. 5 : 23, 24.

"வருத்தப்பட்டுப் (பாவ) பாரம் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் (இயேசுவினிடத் தில்) வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறு தல் தருவேன்.............என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்து மாக்களுக்கு இளைப்பாறுதல் (சாந்தி) கிடைக்கும்." மத். 11 : 28, 29.

முற்றிற்று.

ஆத்ம தத்வம்	....	விலை அணா	10.
முசிப்பாற்றும் கீதங்கள்	....	,, ,,	1.

புஸ்தகங்கள் வேண்டுவோர் எழுதவேண்டிய விலாசம்.

Rev. S. V. DEVADASON,
Sivakasi,
S. India.

தந்தி விலாசம் : Sahayam, Sivakasi.

N.M.S. Press, Vepery, Madras.